
# அகதி
# AKATHY
## (REFUGEE)

காலாண்டிதழ்
Quarterly Magazine

21

தொழிற்கட்சியில் தமிழர்

* ELR வழங்கப்பட்டவர்கள் நிரந்தர வதிவிடவுரிமை பெறுவர்.
* குடும்பம் இணைவதில் தடை நீக்கல்
* நிராகரிக்கப்பட்டவர்கள் துரித நாடுகடத்தல்.
* இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நேரடியாகத் தலையீடு
* இலங்கைக்கான உதவிகள் மறுபரிசீலனை.


Akathy Publication
311, Fore Street
Edmonton N9 0PZ
Tel: 0181 373 6246

50p


## அகதிகள் பணியக(BRC) அறிக்கையின் தமிழாக்கம்

# MARKANDAN & CO SOLICITORS

*Empowered to Administer Oaths*

Legal Aid

Tamil House
720, Romford Road
Manor Park
London E12 6BT.

## *M. MARKANDAN. LLB*

* ALL ASPECT OF IMMIGRATION MATTERS TO APPEALS TO EUROPEAN COURT OF HUMAN RIGHTS.
* ALL TYPES OF CONVEYANCING * LITIGATION * ALL COURTS CIVIL/CRIMINAL * LANDLORDS/TENANT MATTERS
* MATRIMONIAL * POLICE STATION ADVICE * ALL D.S.S AND HOUSING BENEFIT MATTERS
* FREE ADVICE FOR 15 MINUTES ON THE FIRST ATTENDANCE.

LEGAL AID

WE ARE ALWAYS FRIENDLY, EASY TO TALK AND KEEN TO HELP

**TEL : 0181 514 8188**

**FAX: 0181 514 8303**



# SRIKANTH & CO SOLICITORS

## ADMINISTRATORS OF OATHS

**FIRST FLOOR, HIGH ROAD, WEMBLEY, MIDDEX HA0 2AF**

(Entrance on Thurlow Gardens)

**Tel: 0181 795 0648 (5Lines) Sri: 0831 195979(Mobile)**

**LEGAL AID WORK UNDERTAKEN**

**Available Late evenings - weekends by prior appointment**

**WE UNDERTAKE**

* Civil & Criminal Litigation * Employment Matters * Landlord & Tenant Matters
* Immigration Matters * Welfare Benefits & Social Security Matters
* Conveyancing * Commercial & Residential * Matrimonial Matters & Injunction
* Traffic Offences * Personal Injury * Police Station Representation

Legal Aid

We have staff who can converse in the following Languages
* Bengali * French * Hindi * Nepali * Punjabi * Sinhala * Tamil & Urudu * Farsi
* German * Gujarati *Kutchi * Kiswhahili

WE CAN ALSO ARRANGE INTERPRETERS IN OTHER FOREIGN LANGUAGES

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323



# இவர்களின் எண்ணிக்கை என்ன?

இலங்கை நாட்டைவிட்டு வெளியேறிய தமிழர்களை எண்ணிக்கையில் பார்க்கும்போது இந்தியாவில் இரண்டு இலட்சம், ஐரோப்பாவில் ஒன்றரை இலட்சம் , கனடாவிலும் மற்றைய நாடுகளிலும் இன்னுமொரு இலட்சம் எனச் சொல்லிவிடலாம். ஆனால் இலங்கையில் இருந்து புறப்பட்டு சென்றடைய வேண்டிய இடத்திற்கு போய்ச்சேரமுடியாமல் இடைவழியில் சர்வதேசம் எங்கும் அலைந்து திரியும் தமிழர்களின் எண்ணிக்கை என்ன என்பது எவருக்கும் தெரியாததொன்று!. இதற்கிடையில் வானிலும் சமுத்திரத்திலும் தரையிலும் அனாதைகளாக செத்து அழிகின்ற எமது தமிழ் இனத்திற்கும் இப்போது கணக்கு இல்லாமல் போகின்றது. இந்நாட்டுக்கு வந்து சேர்கின்ற தமிழ் அகதிகளின் நலன்களில் கரிசனையுள்ளவர்களின் பட்டியல் நீண்டது. ஆனால் இரண்டும் கெட்ட நிலையில் தவிக்கும் இவர்களில் கரிசனை, யார் காட்டுவது? இது நீண்டநாட்களாக அகதிக்கு இருந்துவரும் விடைகாணமுடியாத கேள்வி. சர்வதேச தமிழ் அகதிகள் ஒருங்கிணைப்பு (Inrtrnational Tamil Refugee Network) என்ற ஒரு அமைப்பு- இலண்டனில் பல வருடங்களுக்கு முன்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு இப்போது அகதியின் இந்த கேள்விக்கு சற்று விடைகாணமுயல்வது குறித்து அகதி ஆறுதல் அடைகின்றது. சர்வதேச விவகாரங்களில் முக்கியமாக தமிழ் அகதிகளின் பிரச்சனைகளில் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குரிய முக்கிய நிதி நிர்வாக வசதியில்லை என்பது அறிந்தவிடயம். தமது நிலைமைக்கு ஏற்ப நடவடிக்கைகளை கட்டுப்படுத்திக் கொண்டு இயங்குகின்றது. இப்போது தனக்குரிய வசதிகளை பாவித்து இடைவழியில் நிற்கின்றவர்களின் எண்ணிக்கை முதலில் கணக்கெடுத்தல் இடம்பெறும். அதைத்தொடர்ந்து எந்தவிதமான நலன்களில் கரிசனை செலுத்தலாமென ஆவனசெய்யும் அதேவேளையில் இந்த அமைப்பின் முக்கிய நோக்கங்களான சர்வதேக தமிழ் அகதிகளின் பாதுகாப்பு மறுவாழ்வு அமைத்தல் போன்ற கடமைப்பாடுகளின் அடிப்படையில் இயங்குமென எதிர்பார்க்கலாம். இவ்வமைப்பு மேற்கொண்டுள்ள இச்செயற்பாட்டுக்கு அகதி தனது பூரண ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் தவறாது அளிக்கும்.

# அடுத்தது என்ன?

பாராளுமன்றத் தேர்தல் முடிவுற்றதும் அகதியுடன் ஏராளமான அன்பர்கள் தொடர்பு கொண்டு "செயல்ப்படச் செய்வோம்" பிரச்சார இயக்க வேலைகள் தொடர்ந்தும் இடம்பெற வேண்டும் என்ற அவசியத்தை வலுப்படுத்தினர். பிரச்சார வேலைப்பழுவில் சற்று ஓய்வெடுத்த அகதிக்கு அதன் நடவடிக்கைகளுடன் பங்கு கொண்டவர்களின் உற்சாகத்தினால், தொழிற்கட்சி தேர்தல் முடிவுகளை அடுத்து தொடர்ந்து பிரச்சார நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்வது பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் புதிய ஆட்சியின் பின் தமிழ் அகதிகளின் எதிர்காலத்தில் ஆரோக்கியமான மாற்றங்கள் எதிர்பார்க்கப்படுமா என்ற கேள்வி எல்லோரது மனதிலும் எழுந்துள்ளது. தொழிற்கட்சியின் தேர்தல் வேட்பாளர்களைப் பொறுத்தவரை இலண்டனில் தமிழர் செறிந்து வாழும் முக்கிய நகரங்களில் பேட்டியிட்ட அனைவருக்குமே அகதியின் பிரச்சார நடவடிக்கையின்போது நேரடியாக சந்தித்து அகதிகள் பணியக அறிக்கை பற்றி தெரியப்படுத்தி எமது பிரச்சனைகள் தொடர்பாக தெளிவுபடுத்துகின்றோம். ஒட்டுமாத்தமாக நாம் சந்தித்த அனைவருமே அதிகப்படியான மேலதிக வாக்குகள் எண்ணிக்கையினால் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர். இவர்களில் பலர் தொழிற்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மட்டுமன்றி கட்சியில் பெரும் செல்வாக்கையும் பெற்றவர்கள். எமது சந்திப்பின்போது இங்கு கடந்த ஐந்துவருடங்களுக்கு மேலாக எவ்வித நிரந்தரமான வதிவுரிமை இன்றி நாட்களை ஓட்டிக்கொண்டிருக்கும் சுமார் ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் அகதிகளின் பிரச்சனைகளின் தொடர்பாக கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இவர்களது கருத்துக்களின்படி இலங்கைத் தமிழர் பிரச்சனையில் தொழிற்கட்சி நேரடியாக தலையிட்டு ஒரு நிரந்தர சமாதானத் தீர்வை கொண்டுவருவதன் மூலம் இங்கு வரும் தமிழ் அகதிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த முடியும் என்பதாகும். தமிழர் வருகை நிறுத்தப்படும் வரை நிராகரிக்கப்பட்ட நிலைமையில் வாழும் தமிழ் அகதிகளின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் திட்டவட்டமான கொள்கையை புதிய அரசு ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமே! ஆனால் முன்னைய அரசின் அமைச்சர்களை விட தற்போதுள்ள அமைச்சர்கள் மிகவும் அனுதாபமான அணுகுமுறையை கொண்டிருக்கின்றார்கள் என்பதில் அகதி நிம்மதியடைகின்றது.. அகதிகள் பணியகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இடம்பெற்றுள்ள சிபார்சுகளில் ஒன்றான தொடர்ந்தும் குடிவரவு விதிகளுக்கு புறம்பான வகையில் இருப்பிட அனுமதியை திரும்பவும் அறிமுகம் செய்ய வேண்டும் என்பதை சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும்

அதிகாரிகளையும் ஏற்றுக்கொள்ளச் செய்யலாம் என்பதில் அகதி பூரண நம்பிக்கை வைத்துள்ளது. இதேவேளை கடந்த பிரச்சார இயக்க நடவடிக்கையின்போது அகதிக்கு ஏற்பட்ட பெரும் ஏமாற்றத்தையும் , கவலையையும் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் அகதிகள் பணியக இயக்குனரை இலங்கைக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டு அறிக்கைஒன்றை சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொண்டதும் , அதன்படி இயக்குனர் இலங்கை சென்று வந்து அறிக்கை ஒன்றை தயாரித்து வெளியிட்டதும் , இவ்வறிக்கையை தமிழ் அகதிகளுடன் தொடர்புடையவர்களுக்கும் , பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டத்தில் வெளிப்படுத்த வேண்டுமென்ற நோக்குடன் அகதி சஞ்சிகை அதன் பிரச்சார இயக்கத்தை ஆரம்பித்ததும் , இப்பிரச்சார இயக்கத்தின் தொடர்ச்சியான நடவடிக்கைகளில் இலண்டன் நகரில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் ஏழு கூட்டங்களை நடாத்தியதும் – இங்கு நிராகரிக்கப்பட்ட அல்லது இதுவரை எவ்வித முடிவுகளும் இன்றி இருக்கின்ற அந்த " **ஏழு ஆயிரம் தமிழ் அகதிகளுக்காகத்தான் ."** ஆனால் இவர்களில் இருந்து 70 பாதிக்கப்பட்டவர்கள் கூட இவ் நேரடி கூட்டங்களில் கலந்துகொள்ளாமல் இருந்தது பெரும் ஏற்மாற்றத்தையும் கவலையையும் எல்லோருக்குமே அளித்துள்ளது என்பதை மறுக்க முடியாது.

தொழிற்கட்சி அமைச்சர்கள் இவர்களது விடயத்தில் எவ்வாறு நடந்துகொள்ளப் போகின்றார்கள் என்பதை காலம் தான் கூறவேண்டும். எது எப்படியிருப்பினும் அதனால் பாதிப்படையப் போவதோ அல்லது நன்மையடையப்போவதோ இந்த ஏழு ஆயிரம் பேரைத் தவிர வேறு எவரும் இல்லை என்பதை அகதி திட்டவட்டமாக கூறிவைக்க விரும்புகின்றது.

## WHAT NEXT ? FAITH HOPE AND CHARITIES?

The general election is over. The government that passed a string of legislation's and implemented several regulations on the assumption that asylum seekers are bogus and are economic migrants has been voted out of office. A new government is in power. When the present government party was in the opposition they did not whole heartedly support the refugees or vehemently oppose all the legislation's that were intended to prevent the asylum seekers from entering the U.K. During the election campaign and immediately after it there is a well co-ordinated, deafening silence on the issues of asylum and immigration, both by the government and the opposition. The problem is too hot to handle and there are no readily available scape goats to blame. So what can we now expect out of this government.?

What the community organisations and the NGOs can predict with reasonable accuracy at
present based on the statements made by some senior government heavy weights can be
put grouped under four headings.

1. The government intends to improve the efficiency of the asylum application procedures.
As to what "efficiency' means and how it is to be done is still unclear.

2. A comprehensive system of backlog management. That is to clear the existing backlog and put in place a system that will ensure that a backlog does not occur in the future.

3. Tackling the causes that lead to people becoming refugees. This includes the ban on Anti personal land mines. The unemployment problem that this would create has not been considered in any detail.

4. Monitoring and regulation of "unlicensed" immigration consultants and advisors.

5. The abolition of the white list is definite- at least for the immediate future.

6. The country reports that will be used for assessment will be reports that would be publicly available and made by Independent and dependable bodies.

7. There will be a system of rigorous implementation of deportation orders.

In addition to these topics the highly publicised issue was that of detention of asylum seekers. There is serious consideration being given to the proposal to have reception centres as was done when the programmed refugees i.e Vietnamese boat people arrived here two decades ago and revived in a modified way when the refugees from former Yugoslavia arrived more recently.

The system of issuing Exceptional Leave to remain for one year and then extending it twice for three years and finally issuing indefinite leave to remain has come under very detailed analysis. Anyone who gets exceptional leave to remain for one year invariable ends up with indefinite leave to remain in seven years time. In the mean time the individual would take up about five hours or more of civil servants time and the individual too would have spent about three working days to go through all these formalities. In contrast most other European countries have no comparable system. The introduction of new forms has aggravated the problems. "Watch this space" is all that can be said about this particular issue.

A problem that attracted the attention of employers and the Commission for Racial Equality was that of "permission to work" Why should a person be forced to live on the dole and be a burden to the tax payer while he or she is ready willing and able to work , draw a wage and pay income tax and other dues? The other side to this question is that the availability of jobs in this country is an attraction for would be bogus asylum applicants. It is hoped that this problem is not too complicated and will be sorted out soon specially after the backlog management system gets into top gear.

For most Sri Lankans, particularly the younger generation and those parents whop have children , are the various issues related to education and training. There are several financial and non financial issues dove - tailed in this problem. Free primary and secondary education, free mid-day meals, part time education ie 16 hours and 21 hours,

home student and foreign student fees, mandatory student grants, three year residents qualification and refugee status are but a few of the more important factors that need clarification. These issues will be resolved very much in favour of the students as there are several ex teachers and lectures as Members of Parliment. Their is even a former General Secretary of a Student Union in the cabinet. On these individuals we can place our Faith and Hope for the best particularly because of the priority given for education during the campaign.

The restoration of the welfare benefit for in - country applicants is definitely ruled out. This decision has been taken on the evidence available to prove that this is the system that swindlers and criminals have used for the submission of multiple benefit claims.

There is still one very important unknown factor in the equation and that is the European factor. UK may be compelled to fold in line with at least some of the more stringent rules and regulations of the European Union. We cannot Hope this Government or for that matter any European government to vehemently opposed some of those legislation.

In some sections of the refugee population and the Refugee Community Organisation there seems to be a feeling of complacency and sense of euphoria, a feeling that the new Government is the panacea for all ills. Nothing could be further from the truth. This is a dangerous situation. All Refugee Community Organisation and other NGOs should continue to be in touch with as many Members of Parliment as they can, establish a good relationship and be ready for situations in which such contacts could be used for serious lobbying to influence the decision makers . This is the least that RCOs can do.

It can be said with absolute certainty that the Acts of Parliment that are now in place will not be repealed in the near future. One cannot even Hope for such action. We can have Faith in the new Government to take a more humanitarian stands when dealing with the problems of the asylum seekers. What we really need urgently is a change in attitude much more than a change in the law. The real material help for the asyl;um seekers will have to come from Charities for many more months, may be years.

அகதி அகதிப் பிரசுரத்தினால் வெளியிடப்படுகின்றது. ஆக்கங்களில் வரும் கருத்துக்கள் ஆக்கதாரரையே சார்ந்தவையாகும். எனினும் ஆக்கங்களை சுருக்கவோ அல்லது திருத்தவோ அகதி பிரசுரக் குழுவுக்கு உரிமையுண்டு. அகதியில் வரும் ஆக்கங்கள் வடிவமைப்புகள் முன் அனுமதியின்றி பிரதி செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

அகதி லட்சுமி பதிப்பகத்தால் வடிவமைக்கப்பட்டு வாசன் அச்சகத்தினரால் அச்சிடப்பட்டு 1997 மே மாதம் அகதிப் பிரசுரத்தால் வெளியிடப்படுகின்றது.

பத்திரிகையின் ஏகவிநியோகஸ்தர் - லக்ஸ்மன் (எட்மன்ரன்)

# M.K.SRI & CO

**SOLICITORS & ADMINISTRATORS OF OATHS**

**5 Eastcote Lane South Harrow, Middx, HA2 8BW**

**Tel : 0181 423 2141 Fax: 0181 933 1361**

## We specialise in

* Immigration * Crime * Conveyancing * Residential & Commercial
* Police Station Advice & Assistance * Accident Claims
* Matrimonial matters
* Welfare benefits & Social security matters

*LEGAL AID WORK UNDERTAKEN*

Legal Aid

SOLICITORS
**M.K. SRITHARAN, S. RAVINDRAN**
ASSOCIATE
**N. KRISHNARAJAH**

Legal Aid

# KSP SUPER FOODS

உங்கள் நம்பிக்கைக்கு உகந்த

நிறைவான ஸ்தாபனம்

இங்கு சகலவிதமான இலங்கை - இந்திய பொருட்களும்

ஓடியோ வீடியோக்களும்

மலிவு விலையில் மன நிறைவோடு பெற்றுக் கொள்ளலாம்.

**318 HIGH STREET NORTH**

**MANOR PARK**

**LONDON E12 6SA**

**TEL : 0181 471 7806, 0181 552 8053**

# தொழிற்கட்சியில் தமிழர்

தொழிற்கட்சியின் புதிய அமைச்சரவை அடுத்த பதினெட்டு மாதங்களுக்கான வேலைத் திட்டத்தை நடாத்து வதற்கான சட்டமூலங்களை பாராளுமன்றத்தில் மாட்சிமை தாங்கிய ராணியின் சிம்மாசன உரையின்போது வெளியிட இருக்கின்றது. குடிவரவு தஞ்சம் கோருவோர் தொடர்பாக எவ் விதமான சட்டங்களும் இவற்றில் இடம் பெறமாட்டாதென எதிர்பார்க்கப் படுகின்றது. முன்னைய அரசினால் கொண்டுவரப்பட்டதும் தற்போது அமுலில் இருக்கும் குடிவரவு தஞ்சம்கோருவோர் சட்டமூலங்கள் தொடர்ந்தும் இருக்குமென எதிர்பார்க்கலாம். புதிதாக உருவாக்கப்பட்ட அமைச்சரவையில் குடிவரவு பகுதிக்கென ஒரு புதிய அமைச்சரை நியமித்திருப்பது குடிவரவாளர் விடயத்தில் அரசு கொண்டுள்ள அக்கறை யையும் கரிசனையையும் முக்கியத் துவத்தையும் வெளிப் படுத்துவதாக அமைகின்றது. தஞ்சம்கோருவோர் விடயத்தில் சில நிர்வாக முறைகளை புதிய அமைச்சு அறிமுகப்படுத்தும் என எதிர் பார்க்கலாம். தஞ்சம்கோருவோர் விண்ணப்பங்கள் தனிப்பட்டவர் தராதர அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு முடிவெடுக்கும் முறை தொடர்ந்தும் கையாளப்படும். ஆனால் இம்முடி வெடுக்கும் நிலையில் அவற்றிற்கு ஆதாரமாக பாவிக்கப்படும் அந்நாடுகளைச் சேர்ந்த அறிக்கைகள் நாட்டு நிலைமை பற்றியவை நடுநிலைமை ஆனதாகவும் பகிரங்கப்ப டுத்தப்பட்டவை ஆகவும் இருக்க வேண்டும் என்பதில் முக்கியத்துவம் அளிக்கப்படும். இலங்கை தமிழ் அகதிகளின் விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும்போது யூ என் எச் சீ ஆரின் அறிக்கை தொடர்ந்தும் கையாளப்படும் என எதிர்பார் க்கப்படுகின்றது. ஆனால் இவ்வறிக்கையின் நடுநிலைமை பற்றிய கருத்தும் கவனத்தில் எடுக்கப்படும் என எதிர்பார்க்க ப்படுகின்றது. இதுவரை காலமும் தமிழ் அகதிகளின் விண்ணப பங்களை நிராகரிப்ப தற்கு ஆவணங்களாக பாவிக் கப்பட்ட பல தாபனங்க ளின் அறிக்கைகள் தொடர்ந்தும் கவனத்தில் எடுக்கப் படுமா என்பது கேள்விக்குறியே!

## நிரந்தர வதிவுடமை

குடிவரவுப் பகுதியின் தஞ்சம் கோருவோர் பிரிவில் சுமார் 70000 விண்ணப்பங்கள் எவ்விதமுடிவும் இன்றி தேக்கநிலை கண்டுள்ளது. இதனால் நிராகரிக்கப்பட்டவர்களின் மேன் முறையீட்டு விண்ணப் பங்கள் விசாரணை செய்வதும் நாடு கடத்துவதும் தாமதமடைந்து கொண்டு போகின்றன. இதற்கிடையில் ஏற்கனவே குடிவரவு விதிகளுக்குப் புறம்பான வகையில் மனிதாபிமான அடிப்படையில் இருப்பிட அனுமதி வழங்கப்பட்ட சுமார் 80,000 விண்ணப்பதாரர்களின் இருப்பிட அனுமதி புதுப்பித்தலில் பெருமள விலான நேரமும் மனித வளமும் சேதமாக்கப்படுவது பற்றி சிவில் அதிகாரிகளினால் புதிய அமைச்சுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் அகதிகள் சாச னத்திற்கு உட்பட்ட வகையில் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டவர்களை விட மற்றைய மேற்கூறியோர்க்கு ஏழு வருட முடிவில் நிரந்தர வதிவிட உரிமை வழங்குவது செயல் முறையாகும். இவ்வனுமதி வழங்கப்பட்ட நூறுவீதமானோர்க்கும் நிரந்தர வதிவுடமை வழங்கப்ப டுவதினால் அதற்கு ஏழு வருடங்கள் பொறுத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணமும் எடுத்துக் கூறப்பட்டு ள்ளது. இதனால் மேலதிக வேலைப்பழுவை குறைப்பதற்காக ஒரு முறையிலேயே அனைவருக்கும் நிரந்தர வதிவுடமை வழங்குவது பற்றி புதிய அமைச்சு ஆலோசனை செய்து வருவதாக தெரியவ ருகின்றது. இதனால் சுமார் பதின்மூவாயிரம் கடவுச்சீட்டை கொண்டுள்ள இலங்கைத் தமிழர்களும் அவர்கள் குழந் தைகளும் நிரந்தர வதிவுடமை பெறக்கூடிய வாய்ப்பு உள்ளது.

## குடும்பம் இணைதல்

குடிவரவு விதிகளுக்கு புறம்பான வகையில் மனிதாபிமான அடிப்படையில் இருப்பிட அனுமதி வழங்கப்பட்டவர்களுக்கு அவர்க ளுடைய குடும்ப அங்கத்தவர்கள் இணைவதற்கு இதுவரை குறைந்தது நான்கு வருட தொடர்ச்சியான அனுமதி விசா இருக்கவேண்டுமென கட்டுப்பாடு விதிக்கப்படுகின்றது இவ்வசதி கூட சிலவேளைகளில் மறுககப்ப ட்டிருக்கி ன்றன.மனிதாபிமான அடிப்ப டையில் இருக்க அனுமதி வழங்கி அவர்களுக்கு தங்கள் குடும்பத்தின் அங்கத்தவர்களை பிரித்து வைப்பது மனிதாபிமானமற்ற செயல் என்று தொழிற்கட்சி தொடர்ந்து குரல்கொடுத்து வந்துள்ளது. இருப்பிட அனுமதி வழங்கப்பட்ட வர்களுக்கு நிரந்தர வதிவுடமை வழங்குவதின்மூலம் அவர்களுடைய குடும்பங்களை இணைப்பதில் இதுவரை இருந்த தடை நீக்கப்படுமென தெரியவருகின்றது.

## நிராகரிக்கப்பட்டவர்கள் துரிதமாக நாடுகடத்தல்

புதிய சட்டமூலங்களை முன்னைய அரசு அறிமுகப்படுத்தி தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களை திருப்பி அனுப்புவதற்கு கொண்டுவந்த முயற்சி தோல் வியுற்று மேலும் மேலும் புதிய வேலைப்பழுவையும் பணச் செலவையும் அதிகரிக்கச் செய்தது என்ற குற்றச்சாட்டை தொழிற்கட்சி அதன் முன்னைய காலத்தில் கொன்சவேட்டிவ் கட்சியை குறைகூறி வந்தது. தஞ்சக்கோரிக்கைக்கு நிராகரிக்கப்பட்டவர் உடனடியாக நாடு கடத்துவதற்கான நடவடிக்கைகளை கையாள வேண்டும் எனவும் இதனால் தஞ்சம் வழங்கப்பட வேண்டிய வர்களுக்கு உரிய பாது காப்பும் வசதிகளும் அளிக்க லாம் என்ற கொள்கையை புதிய அரசு நம்பிக்கை வைத்துள்ளது ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட நிலையில் தேங்கியிருக்கும் பல ஆயிரம் விண்ணப்பகாரர்களின் மேன் முறையீட்டு விண்ணப்பங்கள்விசாரிக்கப்பட்டு நிராகரிக்கப்படும் பட்சத்தில் உடனடியாக நாடு கடத்துவதற்கான நடைமுறைகளை புதிய அரசுகையாளும். தஞ்சம்கோரிய ஒருவரின் விண்ணப்பம் ஆறு மாதத்திற்குள் முடிவு எடுக்க வேண்டும் என்பதில் குடிவரவு அதிகாரிகள் புதிய நடைமுறைகளைக் கையாளுவார்கள். இவ்முறைகளை நடைமுறைப்படுத்தும் பட்சத்தில் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட நிலையில் உள்ள சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் அகதிகள் நாடு கடத்தப்படக்கூடிய ஆபத்தும் உள்ளது.

## நாட்டு நிலைமையில் நேரடியாக தலையிடுதல்

இந்நாட்டுக்கு பெருமளவு அகதிகளாக வரும் நாடுகளின் உள்நாட்டு பிரச்சனைகளில் நேரடியாகத் தலையிட்டு பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் பற்றி இவ்வரசு ஆலோசனை செய்யும். அடைக்கலம் தேடிவருகின்ற பாதிக்கப்பட்டவர்களை இந்நாட்டில் உதவியின்றி மேலும் பாதிப்புக்குள்ளாக்கிய முன்னைய அரசின் சட்ட மூலங்களை வன்மையாகக் கண்டித்த தொழிற்கட்சி தனது பதவிக்காலத்தில் அகதிகள் இந்நாட்டுக்கு வருவதற்கு உரிய காரணத்தை கண்டறிய வேண்டும் எனத் தெரிவித்திருந்தது. இதன் அடிப்படையில் தற்போது பெருமளவிலான அகதிகளை கொண்டு வரும் நாடுகளில் ஒன்றான இலங்கையின் உள்நாட்டு பிரச்சனையில் நேரடியாக தலையிடுவதன் மூலம் அங்கு நடைபெறும் இனப்பிரச்சனைக்கு சமாதானத் தீர்வை கொண்டுவருவதற்கான முயற்சிகளை புதிய அரசு தொடர்ந்தும் செய்யும். இதனால் மேலும் தமிழ் அகதிகள் இங்கு வருவதை தடைசெய்ய முடியுமென எதிர்பார்க்கின்றது.

## அபிவிருத்தி அடையும் நாடுகளுக்கான உதவி மறுபரிசீலனை

அகதிகளின் வருகையை தடை-செய்யும் திட்டங்களில் அந்நாடுகளில் ஏற்பட்டுள்ள பிரச்சனைக்கு பொறுப்பான வர்களை அமைதியான பேச்சுவார்த்தை ஒன்றுக்கு கொண்டுவருவதற்கான முயற் சிகளை தொழிற்கட்சியின் வெளிநாட்டு அமைச்சு காரியாலம் எடுக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் வரசின் சமாதான முன்னெடுப்புக்களுக்கு மறுப்புத் தெரிவிக்கின்ற அரசுக்கு அல்லது நாட்டுக்கு பிரிட்டிஷ் அரசினால் இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த உதவிகள் யாவும் நிறுத்துவது பற்றி அதன் கொள்கைகளை மறுபரிசீலனை செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் இலங்கைப்பிரச்சனையில் பங்காளிகளாக இருக்கின்ற இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஒரு இணக்கத்தை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.இது வரை காலமும் இலங்கை அரசுடன் பிரிட்டிஸ் அரசு வைத்திருந்த வெளிநாட்டு க்கொள்கையில் பெரிய மாற்றம் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# VEERA & CO
## SOLICITORS

EXPERTS IN IMMIGRATION, WELFARE, CRIMINAL
MATRIMONIAL AND CIVIL LITIGATION

Legal Aid

**SELLIAH VEERAVAGU LLB**

Legal Aid

47 Hounslow Avenue
Hounslow
Middlesex TW3 2DZ
TEL: 0181 898 2262
FAX: 0181 893 4808

*Also at:*
24, Fernlea Road
Mitchem
Surrey CR4 2HE
TEL: 0181 687 1154
FAX: 0181 687 1154

# MEHALA

Legal Aid

## SOLICITORS

**ADMINISTRATORS OF OATHS**

**WE UNDERTAKE**

* Civil Litigation * Commercial Litigation * Immigration * Personal Injuries * Conveyancing * Entertainment Law * Residential & Commercial * Police Station Advice & Assistance * Accident Claims * Matrimonial matters * Welfare benefits & Social security matters
For advice & Assistance on all immigration matters

**'LAI HOUSE'**

**9, Balham High Road, London SW12 9AJ**

**☎: 0181 675 7111**

**Fax: 0181 675 0777**

# நிரந்தர வதிவுடமை, பிரஜாவுரிமை சட்டபூர்வ உரிமையா?

– ம. மார்க்கண்டன் LL.B வழக்கறிஞர்

இந்த நாட்டில் தஞ்சம் அல்லது விசேட வதிப்புரிமை வழங்கப் பட்டவர்கள் இங்கு நீண்ட காலம் வாழ்ந்த காரணத்தினால் இந்நாட்டுச் சூழ்நிலை கலாச்சாரம் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றுடன் ஒன்றறக் கலந்து விட்ட காரணத்தினாலும் தமது சொந்த நாட்டுடனான தொடர்புகளை இழந்து திரும்பிச் சென்றாலும் ஒன்றறக் கலக்க முடியாததென்ற நிலைமைக்குப் பரிகாரமாக இதுவரை வழங்கப்பட்டு வந்த காலவரையுள்ள வதிவு ரிமைக்குப் பதிலாக காலவ ரையற்ற விசா வழங்கும் ஒரு நடைமுறை இந்நாட்டு அரசினால் கடைப்பிடிக்க ப்படுகின்றது. இது ஒரு சட்ட ஏற்பாட்டினால் வழங்கப்ப டவில்லை. உள்நாட்டுக் காரிய தரிசியின்தற்துணிவு அதிகாரத்தினால் வழங்கப்படுகின்றது. ஆகவே கட்டாயமாகக் குறிக்கப்பட்ட காலம் முடிவடைந்தவுடன் நிரந்தர உரிமை கிடைத்திடுமென்று எதிர்பார்க்க லாகாது. எனினும் உள்நாட்டுக் காரியதரிசி நியாயமான ஏதுக்கள் இன்றி நிரந்தர வதிவுடமை தரமறுத்தால் நீதி மன்றத்தின் மூலம் பரிகாரம் பெறும் வாய்ப்பு நடைமுறையில் உள்ளது. இவ்வாய்ப்பு 28.7.88ம் ஆண்டு உள்நாட்டுக் காரியதரிசி யினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கொள்கை உரைக்கூற்றினால் எழுகின்றது.

**நிரந்தர வதிவுரிமைக்குரிய தேவைப்பாடுகள்.**

1. உரிய படிவம் உபயோகிக்கப்பட வேண்டியது அத்தியாவசியம்.
2. உரியகாலம் பூர்த்தியாக்க வேண்டும்

(அ) அகதி அந்தஸ்து பெற்ற வர்கள்– (நான்கு வருடங்கள்)

(ஆ) விசேட வதிவுரிமை (ஏழு வருடங்கள்)

(இ)தொழில் காரணமான வதி வுரிமை (நான்கு வருடங்கள்)

(ஈ) வியாபார முதலீட்டு வதி வுரிமை (நான்கு வருடங்கள்)

(உ)மாணவர் போன்ற வதி வுரிமை (பத்து வருடங்கள்)

(ஊ)சட்டவிரோதமாக இருந்த வர்கட்கு(பதினான்கு வருட ங்கள்)

3.பொதுநிதிக்குப் பாரமில்லாது வாழ்தல்

4.நீதிமன்ற தண்டனை பெறாத வராயிருத்தல்

இவை போன்ற தேவைப் பாடுகளை பூர்த்தி செய்ப வர்கள் கேட்கப்பட்ட ஆவண ங்களை இணைத்து ஏற்கனவே இருக்கும் வசிப்புரிமை முடியுமுன் விண்ணப்பிக்க வேண்டும் காலத்தை எண்ணும் போது இந்நாட்டுக்கு வந்த திகதி கணக்கெடுக்கப்படுவதில்லை. விசா வழங்கப்பட்ட திகதியி லிருந்தே எண்ணப்படும். இடையில் விசா முறிவு ஏற்பட்டால் தொடர்ச்சி அறுந்து விடும். மாணவர் தரத்திலிருந்து அகதித்தரத்திற்கு மாறிய வர்கட்கு அகதித்தரத்திற்குரிய காலம் பத்து வருடங்கள் பூரணமாக வேண்டும். அதாவது ஆறுவருடம் மாணவனாக இருந்த ஒருவர் விசேட வதிப்புரிமை பெற்றிருந்தால்பத்து வருடங்கள் முடிந்த பின் தான் நிரந்தர வசிப்புரிமை கோரிவிண்ணப்பிக்கலாம்.

திருமணமானவர்களுடன் குடும்ப ஒன்று கூடல் உரிமை கோரி இந்நாட்டிற்கு வந்தவர்கள் தனது கணவன் அல்லது தந்தையின் நிரந்தர விசா பெறு ங்காலத்தில் தானும் பெறுவர். கணவன் அல்லது தந்தையுடன் வதிவதற்கான உரிமை கோரி வருபவர்களுக்கு முதலில் பன்னிரண்டு மாத விசா வழங்கப்பட்டு முடிவில் நிரந்தர விசா பெறுவர்.

**நிரந்தர வசிப்புரிமையின் சிறப்புக்கள்.**

நிரந்தர வசிப்புரிமை நிரந்தர மானதல்ல. இந்த நாட்டில் தொடர்ந்தும் நிரந்தரமாக வாழ்பவர்களுக்கே அது நீடித்தி ருக்கும். நாட்டை விட்டு வெளியே சென்றால் 2 வருடங்கள் முடியும் முன்பு திரும்பிவிட வேண்டும். எனினும் அகதி அந்தஸ்து கோரிய வர்கள் தமது சொந்த நாட்டுக்குப் போய்த் திரும் பினால் நாட்டுக்குள் பிரவே சிக்க அனுமதி மறுக்கப்படவும் கூடும். காரணங்கள்

இவர்கள் முன்பு பொய் கூறியுள்ளார்கள். அல்லது ஏமாற்றி விட்டார்கள். என்று அநுமானிக்கப்படும். இப்படியானவர்களுக்கு விசா மறுக்கப்பட்டு திரும்பி அனுப்பப்படவோ அல்லது திரும்பவும் ஒரு வருடகாலவரை உள்ளதான விசா வழங்கப்படக் கூடும். ஏனைய விதத்தில் நிரநதர உரிமை பெற்றவர்கள் கூட இரண்டு வருடங்கள் முடிவ தற்குச் சற்று முன்னதாக வந்தால் அல்லது திரும்ப வெளிநாட்டில் வாழ்ந்து விசாவைப் புதுப்பிக்கும் நோக்கத்துடன் இந்நாட்டுக்கு வந்தால் அனுமதி மறுக்கப்படகூடும். காரணம் அவர்கள் இந்த நாட்டைத் தமது வழமையான வசிப்பிடமாகக் கொள்ளவில்லை என்பதாகும் தொழில் காரணமாக வேறு நாட்டில் வாழ்பவர்கட்கு இப்பிரச்சனை இருக்காது.

## பிரித்தானிய பிரஜா உரிமை.

இந்நாட்டு நிரந்தர வசிப்புரிமை வழங்கப்பட்டவர்கள் பிரஜா உரிமை கோரி விண்ணப்பி க்கலாம். அதற்குரிய தகைமைகள்.

1. நிரந்தர வசிப்புரிமை பெற்று ஒரு வருடம் முடிந்திருக்க வேண்டும்.

2.இந்நாட்டில் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் வாழ்ந்திருக்க வேண்டும்.

3.அவசர சேவைக்காக வந்தவா கட்கு மூன்று வருடங்கள் போதுமானது .

4.ஒரு வருடத்தில் 90 நாட்களுக்காகுதல் வெளி நாட்டில் வாழ்ந்திருக்க கூடாது

5 ஐந்து வருடத்தில் 450 நாட்களுக்கு மேல் வெளிநா ட்டில் வாழ்ந்திருக்கக்கூடாது.

6.குற்றத்தண்டனை பெற்றிருத்தலாகாது.

7.தேசத்துரோகம் செய்திருத்தலாகாது.

8. உரிமைப் படிவத்தில் உரிய பணத்தைச் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.

9.இரு பிரித்தானிய பிரஜைகள் அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

கிட்டத்தட்ட பதினான்கு மாத காலங்களுக்குள் பிரஜா உரிமைப் பத்திரம் கிடைக்கும் .இப்பத்திரம் வழங்கப்பட முன்பு இந்நாட்டுக்கும் அரசிக்கும் விசுவாசம் தெரிவித்துச் சத்தியப்பிரமானம் எடுக்க வேண்டும். பிரஜா உரிமை கிடைத்த உடன் கடவுச் சீட்டக் கோரி விண்ணப்பிக்கலாம்.

பிரஜா உரிமை வழங்குவது பற்றி எந்த ஒரு சட்ட ஏற்பாடும் கிடையாது. கடுமையான தற்துணிபு அதிகாரம் வழங்கப்ப ட்டுள்ளது. 1981ஆம்ஆண்டின் குடிவரவுச் சட்டம் 41 (2) ஆம் பிரிவின்படி பிரஜா உரிமை விண்ணப்பத்தை மறுப்பதற்கான காரணங்களை உள்நாட்டுக் காரியதரிசி கூறவேண்டிய அவசியம் இல்லையெனப் பல வழக்குகளில் கூறப்பட்டுள்ளது. ஆகவே பிரஜா உரிமை வழங்க மறுத்ததற்கு எதிராக எந்த ஒரு நீதிமன்றத்திலும் கேள்வி எழுப்ப முடியாது. இந்த நாட்டில் முப்பது வருடங்கட்கு மேலாக வாழ்ந்த சிலபிரபல வர்த்தகர்கட்குப் பிரஜா உரிமை மறுக்கப்பட்ட சம்பவம் அண்மைக் காலத்தில் பத்திரிகைகளில் வெளிவந்தது சகலரும் அறிந்ததே.

## இரு நாட்டு பிரஜாவுரிமை

பிரித்தானிய நாட்டு பிரஜா வுரிமை பெற்றவருக்குத் தம் சொந்த நாட்டுப் பிரஜா உரிமை தானாகவே அற்றுப்போய் விடும். இரு நாட்டுக்கும் விசுவாசமாக இருக்க விரும்புபவர்கள் உரிய முறைப்படி விண்ணப்பம் செய்து தம் சொந்த நாட்டுப் பிரஜா உரிமையையும் வைத்துக கொள்ள முடியும். அப்படி தம் சொந்த நாட்டுப் பிரஜா உரிமையையும் வைத்துக கொள்ள விரும்பு பவர்கள் அதற்குரிய படிவத்தில் அதற்குரிய பணத்தைச் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். இலங்கைப் பிரஜா உரிமையை மீளப் பெறத் தற்போதைய கட்டணம் ஒரு இலட்சம்ரூபாய் எனத் தெரிய வருகின்றது. பன்னிரண்டு மாதங்கள் முடியுமுன்பு விண்ண ப்பிப்பது சிறந்தது. இலங் கையின் வம்சாவளிப் பிரஜா உரிமை உள்ளவர்கட்கு எந்த நேரத்திலும் தம் பிரஜா உரிமையை மீளப் பெறும் உரிமை உண்டு.

# இலங்கைத் தமிழரும், உள்துறை விவகார அலுவலகமும் உலகம் மறந்து போன உள்நாட்டுப் போரும்

# Sri Lankan Tamils, the Home Office and the forgotten war



## பாதுகாப்பு மறுக்கப்பட்ட

## PROTECTION DENIED

அகதிகள் பணியகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் தமிழாக்கத்தை அடுத்த பக்கங்களில் தருகிறோம். இதனை தமிழ் மொழியில் மொழி பெயர்த்து எமக்கு அளித்த திரு.P. சங்கரவேல் அவர்களுக்கு அகதி அதன் நன்றியைத் தெரிவிக்கின்றது.

refugee council

# நிறைவேற்று அதிகாரிகள் தரும் பிரசுரத்தின் சுருக்கம்

இங்கு இயங்கும் பல அகதிச் சமூக தாபனங்கள் அகதிச் சபையிடம் தெரிவித்த கவலைகளை அடுத்து இச்சபையின் பிரதிதிக்குழுவொன்று சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கைக்குச் சென்றது. இங்கிருக்கும் போது இக்குழு அரச படையினரதும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளினதும் கட்டுப் பாட்டிலிருக்கும் இப்பிரதேசங்களும் இணையும் நிலப்பரப்பில் அமைந்துள்ள வவுனியா நகருக்குப் பிரயாணம் செய்தது. இங்கே குழுவினர் அகதிகளின் பிரதிநிதிகள் மனித உரிமைகளைப் பாதுகாக்க உழைக்கும் தாபனங்கள் பகுதியில் கடமையாற்றும் அரசு உத்தியோ கத்தர்கள் வழக்கறிஞர்கள் 6 ராஜதந்திரிகள் ஆகியோரைப் பேட்டி கண்டது. 'பாதுகாப்பு மறுக்கப்பட்டது' என்ற பிரசுரம் அகதிச்சபை பிரதிநிதிக்குழு அதன் விஜயத்தின்போது திரட்டிய விபரங்களையும் சபையின் ஆராய்ச்சியாளரின் ஆய்வுகளையும் அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்பட்டது. இப்பிரசுரத்தில் கூறப்பட்டிரு க்கும் முடிவுகள் பின்வருமாறு-

முறையாக நடத்தப்படும் மனித உரிமை மீறற்செயல்கள் குறிப்பாக சிங்கள மக்களுக்கு எதிரானவை, குறைந்திருந்தாலும் பல பாரதூரமான செயல்கள் முக்கியமாகத் தமிழர்களுக்கெதிரானவை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன. இலங்கை அரசு இவைகளை தடுக்க விருப்பமில்லா ததாகவோ அல்லது முடியாமலிருப்பதாகவோ தெரிகிறது.

போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் மனித மீறற் செயல்களில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் கொழும்பில் ஒரு பாவமுமறியாத மக்களை குண்டுகளை வெடிக்கவைத்து பாதிப்பதும், காட்டிக் கொடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தமிழரைக் குறிவைத்து வஞ்சம் தீர்ப்பது போன்ற செயல்கள் இவர்கள் தொடர்ந்தும் அடிப்படை மனித உரிமைகளை மதிக்கிறார்களில்லை என்பதற்குபோதிய சாட்சியங்களாகும்.

மனித உரிமைகளைப் பாதுகாக்க இலங்கை அரசு எடுக்கும் முயற்சிகள் கலாச்சார முறையிலும் தாபன ரீதியாகவும் முறையான மனித உரிமை மீறற் செயல்களுக்கு வித்திட்ட செயல்முறைகள் தப்பெண்ணங்கள் ஆகியவற்றை மாற்ற முடியாமல் வேகமின்றியே நடை பெறுகின்றன. பாதுகாப்புப் படையினரைப் பொறுத்தமட்டில் இது முற்றிலும் உண்மையாகும். போரில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் அகப்பட்டு வடபகுதியிலிருந்து ஓடும் பல மக்களுக்கு நாட்டினுள் ஓடி நிம்மதியாக இருக்கக்கூடிய பலனளிக்கும் மாற்று வழி இருப்பதாகத் தெரியவில்லை.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் தானீகர் காரியாலயம் இலங்கை நிலைபற்றிய தன் அறிக்கையை உடனடியாக மீளாய்வு செய்யவேண்டும்.

இங்கே (யு.கே) 1991-1993 ஆம் ஆண்டுவரை தஞ்சம் கோரி விண்ணப்பித்த 95 விகிதம் இலங்கையருக்கு இந்நாட்டில் தங்கியிருக்க விசேட அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் 1994-1996 ஆம் ஆண்டு வரையிலான கால எல்லைக்குள் இலங்கையரின் விண்ணப்பங்கள் சம்பந்தமான உள்துறை அலுவலகம் எடுத்த முடிவுகளில் 94 விகிதமானவை மறுப்புக்களாக வேயிருக்கின்றன.

உள்துறை அலுவலகத்தின் இலங்கை நாட்டின் இன்றைய நிலை பற்றிய கணிப்பு பல தஞ்சம்கோரும் இலங்கையரின் விண்ணப்பங்கள் மறுக்கப்படுவதற்கு காரணமாயிருந்தது. இவ்வறிக்கையில் கூறப்படும் தகவல்கள் முடிவுகள் ஆகியவையின் அடிப்படையில் மேற்படி அலுவலகத்தின் இலங்கை பற்றிய கணிப்பு உடனடியாக மாற்றப்படவேண்டும். குறைந்தது முன்பு நடைமுறையிலிருந்த இலங்கை விண்ணப்பதாரர்கட்கு இங்கு தங்கியிருக்க வழங்கப்படும் விசேட அனுமதி முறை திரும்பவும் அமுல் செய்யப்படவேண்டும்.

தஞ்சம் கோருவோரை திருப்பி அனுப்ப கொழும்பு பாதுகாப்பான இடமென்று எண்ணக் கூடாது. இங்கே காரணமின்றி கைதுசெய்தல் விசாரணையின்றி தடுப்புக்காவலில் வைத்தல், சித்திரவதை ஆகிய நிகழ்வுகள் தொடர்ந்தும் நடைபெறுகின்றன.

இப்போது நடைபெறும் விரும்பத்தகாத விடயம் தஞ்சம் கோருவோர் சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்படுபவதாகும். அண்மைக்காலங்களில் இம்முறை மூலம் வருபவர் எண்ணிக்கை பெருகியுள்ளது. இதனால் இவர்கள் நாணயமற்ற கடத்துவோரின் தயவுக்காளாகிறார்கள். இம்முறை குற்றச் செயல்கள் மூலம் நடைபெறுவதால் ஐரோப்பிய நாட்டு அரசுகளை தஞ்சம் கோருவோரை மனிதாபிமான முறையில் அணுகுவதற்கு தயங்குகின்றன.

இந்நாட்டு (யு கே) அரசு இலங்கைக் குடிகள் இங்கு வந்து தஞ்சம்கோரும் நிலையில் மாற்றமேற்படுத்த விரும்பினால் போரில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரிடையே ஓர் போர்நிறுத்தத்தையும் ஏற்படுத்திப் பேச்சுவார் த்ததைகளும் நடக்கச்செய்ய தன்னாலான முயற்சிகளை எல்லாம் எடுக்க வேண்டும். ஐந்து லட்சம் தமிழர்களை அகதிகளாக்கி நாட்டைவிட்டு ஓடச்செய்த உள்நாட்டுப்போருக்கு ஓர் முற்றுப்புள்ளி வைத்து மனித உரிமை மீறற்செயல்களை இல்லாமற் செய்வதே தஞ்சம்கோருவோர் விண்ணப்பங்களை குறைக்க ஒரே வழி.

## இலங்கைத் தமிழரும் உள்விவகாரதுறை அலுவலகமும் உலகம் மறந்துபோன உள்நாட்டுப்போரும்

**முகவுரை**

உலகிலுள்ள அழகிய தீவுகளில் ஒன்றென பலராலும் வர்ணிக்கப்படும் இலங்கைத் தீவை பதினைந்து ஆண்டுகளாக சிங்கள அரசுப் படைகளுக்கும் தமிழருக்கென தனிநாடு கோரும் தீவிரவாதிகளுக் குமிடையே நடைபெற்றுக் கொண்டிருக்கும் உள்நாட்டுப் போரால் இலங்கை மக்களே பெருமளவு பாதிக்கப்படுகின்றார்கள். ஏறக்குறைய பத்துவீத மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை உருவாகியுள்ளது. பலர் தம் தாய் நாட்டைவிட்டு வெளியேறவேண்டிய நிலையும் நிர்ப்பந்தமும் உருவாகியுள்ளது

இப்படி வந்தவர்கள் எதிர்காலத்தில் என்ன நடக்குமோ என்ற ஐயத்துடன் இந்தியாவிலுள்ள முகாம்களிலும் ஐரோப்பிய நாடுகளின் தஞ்சம் கோருவோருக்கு அனுசரனைகள் அற்ற விசாரணை முறைகளுக்கு மத்தியிலும் ஓர் ஸ்திரமற்ற வாழ்க்கையை நடாத்திக்கொ ண்டிருக்கின்றனர். இலங்கையிலேயே தொடர்ந்தும் வாழும் தமிழர்கள் நங்கள். உயிர்களைப் பாதுகாத்துக்கொள்ள தமக்கு அவசியமான உடமைகளுடன் ஓர் யுத்தப் பிராந்திய த்திலிருந்து இன்னொன்றிற்கு ஓடியவண்ணம் வாழ்கின்றனர்.

இலங்கையில் 1994ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நடைபெற்ற தேர்தலில் மக்கள் கூட்டணி அரசு தெரிவானதும் பத்தாண்டுகளாக ஆயிரக்கணக் கான உயிர்களைப் பலிகொண்ட பூசல்களுக்கும் மனித உரிமை மீறல்களுக்குமோர் முற்றுப்புள்ளி வைக்கப்படுமென்ற நம்பிக்கை மக்களுக்கேற்பட்டது. ஜனாதிபதி சந்திரிக் காவின் தேர்வில் புலம் பெயர்ந்து வாழும் பல மக்களுக்கோர் நம்பிக்கை உருவாகியது. தாய்நாடு திரும்பி பயமற்றதோர் சுதந்திரமான வாழ்க்கை நடாத்தும் காலம் கிட்டிவிட்டதாக அவர்கள் எண்ணி மகிழ்ந்தனர். ஆனால் 1995 ஆம் ஆண்டு மே மாதம் விடுதலைப்புலிகள் இலங்கைக் கடற்படைக் கலங்களை தாக்கிய பின்பு நான்கு மாதங்களே அமுலிலிருந்த அரசு புலிகள் போர் நிறுத்த உடன்படிக்கை முறிந்ததும் இவர்கள் எதிர்பார்ப்புகள் யாவும் சிதைந்துபோயின.

போர் நிறுத்தம் எதிர்பாராத விதத்தில் ஏற்பட்டதால் தொடரும் ஈழப்போரின் மூன்றாவது கட்டத்தின் போது துருப்புக்கள் புலிகளின் கோட்டையான யாழ்குடாநாட்டிற்குள் நுழைந்தனர். துருப்புக்களின் நுழைவால் ஏறக்குறைய நாலு இலட்சம் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்தோடவேண்டியதாயிற்று. ஈழத்து ப்போரின் போது இடம்பெயர்ந்த மக்களில் யாழ்குடா நாட்டிலிருந்து விடுதலைப்புலிகளால் வெளியேற்றப்பட்ட ஒரு இலட்சம் முஸ்லீம் மக்களுமடங்குவர்.

இலங்கையில் தற்போது நடந்துகொண்டிருக்கும் போரில் ஈடுபட்டிருக்கும் இருதரப்பினரு க்குமிடையே ஓர் உடன்பாட்டை ஏற்படுத்த சர்வதேச மட்டத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகளினாலும் போர் நிறுத்தமொன்று ஏற்படக்கூடிய அறிகுறிகள் தென்படவில்லை.

இதற்கு மாறாக இவ்வாண்டின் ஆரம்பத்தில் தீவிரமோதல்கள் நடந்துள்ளன. இவை சாதாரண மக்களை ஆட்கொள்ளும் யுத்த தந்திரமாகவே தெரிகின்றது. இதனால் ஒரு பாவமுமறியாத குடிமக்கள் நடைபெறும் மோதல்களின் முன்னணியில் அகப்பட்டு அல்லற்பட வேண்டியிருக்கின்றது. சென்ற ஆண்டு யூலைமாதம் நவாலியில் அப்பாவித் தமிழர்களே தஞ்சம் புகுந்திருந்த தேவாலயமொன்று அரசபோர் விமானங்களின் கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்கிலக்காகி 60 பேர் உயிரிழந்ததும் 150 பேர் படுகாயமுற்றதும் இதற்கான தகுந்ததோர் உதாரணமாகும்.

### 1.1 இலங்கையும் அகதிச் சபையும்.

இலங்கையில் உள்நாட்டுப்போர் தொடங்கிய நாளிலிருந்து இங்கேயே இயங்கும் அகதிச்சபை போரினால் பாதிக்கப்பட்டோரின் நலத்தில் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றது. இது இந்நாட்டிலுள்ள

தமிழ் சமூகத்தினர் அகதி ஸ்தாபனங்களை இங்கு உருவாக்குவதற்கும் உறுதுணையாயிருந்தது. இவைதான் ஆயிர க்கணக்கான தமிழ் அகதிகள் ஐக்கிய ராச்சியத்தில் புதுவாழ்வொன்றை ஆரம்பிப்பதற்கு உதவ-யளித்திருக்கின்றன. இவைகளுட் பல அகதிச்சபையின் உறுப்பினர்களாயுமிருக்கின்றன. இச்சபையின் அலுவலகத்தில் ஒன்பது ஆண்டுகளாக இயங்குமோர் திட்டம் இலங்கைத்திட்டமாகும். இதுதான் இலங்கை மொனிட்டர் என்ற இலங்கை பற்றிய ஓர் மாதாந்த தகவற் சஞ்சிகையை வெளியிடு கின்றது. இச்சஞ்சிகை இலங்கை இனப்பிணக்கு சம்பந்தமான தகவல்களை தருவதில் சர்வதேச மட்டத்திலேயும் அங்கீகாரம் பெற்றுள்ளது. இங்கு தனியாகவே வந்திறங்கும் அகதிச் சிறுவர் சம்பந்தமாக 1994 ஆம் ஆண்டு அகதிச் சபையினால் ஆரம்பிக்கப்பட்ட ஆலோசனைக் குழு இதுவரை இரு ஒன்பது வயதுச் ஆண் சிறார்கள் உட்பட 44 இலங்கைச் சிறார்களின் சிபாரிசுக் கோரிக்கைகளைப் பெற்றுள்ளனர். இச்சிறுவர்களுட் பலர் தங்கள் பெற்றோர்க ளாலோ அல்லது பாதுகாவலர்களாலோ இவர்கள் தமிழ் புலிகளினால் தங்கள் இயக்கத்தில் சேர்க்கப்படுவதைத் தவிர்க்கவே இங்கு அனுப்பப்பட்டிருக்கலாம். இவ்வகைச் சிறுவர்கள் சம்பந்தமாக இந்நாட்டு அரசாங்கத்திற்கும் இலங்கை அரசுக்குமிடையே உடன்படிக்கை ஒன்றுண்டு. இதன்படி இவர்களது அரசியற் தஞ்சம்கோரும் விண்ணபங்கள் மறுக்கப்பட்டால் இவர்கள் திரும்பவும் இலங்கைக்கு அனுப்பப்படவேண்டும் எனினும் அகதிச் சபையின் தலையீட்டினால் இவர்கள் பிற்கால வாழ்க்கைக்கான போதிய வசதிகள் செய்யப்பட்ட பின்பே திருப்பியனுப்பப்பட வேண்டுமென்ற உறுதியொன்றைப் பெறமுடிந்தது. தஞ்சம் கோரிய சிறுவரொருவரும் இதுவரை திருப்பியனுப்பப்படவில்லை.

இலங்கை அகதி தாபனங்களின் பிரதிநிதிகள் குழுவொன்று சென்ற ஆண்டு அகதிச்சபை உத்தியோகத்தர்களைச் சந்தித்து தஞ்சம்கோரும் இலங்கைக்குடிகளின் விண்ணப்பங்கள் சம்பந்மாக உள்விவகாரத்துறை அலுவலகம் எடுக்கும் முடிவுகளில் ஏற்பட்டிருக்கும் பெருமாற்றம் பற்றிக் கவலை தெரிவித்தது. 1990–1993 வரை 96 வீதம் தஞ்சம்கோரியருக்கு இந்நாட்டில் தங்கி யிருக்க விசேட அனுமதி ஈ எல் ஆர் வழங் கப்பட்டது. இதன் பின்பு 95 வீதம் விண்ணபதாரர்களின் தஞ்சக்கோரிக்கைகளே மறுக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களைப் பெரிதும் பாதித்துக்கொண்டிருக்கும் மூன்றாவது கட்ட ஈழத்துப்போரின் தாக்கங்களும் பெருந்தொகையான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் உள்விவகாரத்துறை அலுவலகத்தின் செயற் பாட்டில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. கொழும்பிலும் வடபுலத்திலும் வாழும் தமிழர்கள் 1995 ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்ததை விட மோசமான நிலையொன்றை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறதென பல அவதானிகள் எடுத்துக் கூறியும் தஞ்சம் கோருவோர் பற்றிய உள்துறை அலுவலகத்தின் கொள்கையில் எவ்வித மாற்றமும் உண்டாகியதாகத் தெரியவில்லை.

சென்ற ஆண்டு அகதி தாபனங்களின் பிர-திநிதிகளடங்கிய குழுவொன்று ஐக்கியநாடுகளின் அகதிகளுக்கான உயர் தானிகர் காரியாலயத்திற்கும் தஞ்சம் கோருவோர் விண்ணப்பங்கள் பற்றி முடிவெடுக்கும் உள்விவகாரத்துறை அலுவலகத்தின் தேசிய குடிவரவுப் பிரிவுக்கும் சென்று தஞ்சம் கோருவோர் பிரச்சனைகள் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் விவாதிப்பதற்கான ஓர் சந்தர்ப்பத்தை அகதிச்சபை ஏற்படுத்திக் கொடுத்தது. இதைத் தொடர்ந்து அகதிச்சபையின் தலைமை நிர்வாகியும் சபையின் சர்வதேச விவகாரப்பகுதியின் பணிப்பாளரும் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கை சென்றனர். அங்கே அகதிகளையும் மனித உரிமை தாபனங்களையும் அரசாங்க உத்தியோகத்தர்களை வெளிநாட்டுத்தூதுவர்கள் ஆகியோரைச் சந்தித்து உரையாடினர். இதன் பின்பு இவர்கள் மேற்கொண்ட முடிவுகளையும் சபையின் ஆய்வுக்குழு நடாத்திய ஆய்வுகளையும் ஆதாரமாகக் கொண்டே இவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அறிக்கை தயாரிப்பதற்காக பேட்டிகண்டோரின் பெயர்கள் இவர்கள் இனங்காணப்படக் கூடியதென்ற காரணத்திற்காக வெளியிடப்படவில்லை.

## 2. உண்மையில் நடந்ததென்ன?

### 2.1 போருக்காண பாதை அமைந்தது

இலங்கை 1948 ஆண்டு சுதந்திரம் பெற்ற பின்பு அங்கு வாழ்ந்த பெரும்பான்மைச் சிங்களவர்க ளுக்கும் சிறுபான்மை தமிழர்களுக்குமிடையிலான வேறுபாடுகள் இவ்விரு இனங்களின் தேசிய அபிலாசைகளினால் மூடிமறைக்கப்பட்டன. சுதந்திரத்திற்குப் பின்பு மிதவாதத் தமிழ் தலைவர்களுக்கும் சிங்கள அரசுகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் மூலம் சிறு பான்மையினரின் உரிமைகளுக்கு போதிய உத்தரவாதங்கள் கிடையாததினாலேயே 1997ஆம் ஆண்டிற்குப் பின்பு தீவிர தமிழ் தேசியவாதம் உருவாகியது. இச்சூழ் நிலையிலும் தமிழர்களுக்கு எதிரான விரோத நடவடிக்கைகள் அதிகரிக்கத் தொடங்கியதால் மிதவாதத்

தமிழ் தலைவர்கள் அரசியலிலிருந்து ஒதுக்கப்பட்டு தீவிரவாத தமிழ் குழுக்கள் இனப் பிரச்சனைகளுக்கான விவாதத்தில் முக்கிய பங்கேற்கும் ஓர் நிலை உருவாகியது.

இன்றைய இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரத்துங்காவின் தாயார் சிறிமா பண்டாரநாயக்காவின் அரசு 1972 ஆம் ஆண்டு பதவியிலிருந்தது. இவ்வரசு தமிழர்களுக்கும் இலங்கை அரசியலில் போதிய அதிகார பங்களிக்கக் கூடிய உத்தரவாதமளிக்கும் அரசியல் யாப்பொன்று வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்க மறுத்தது.இதற்கு மாறாக இதே ஆண்டு ஓர் ஒருபட்சமான புதிய அரசியல் யாப்பொன்றை அமுல் செய்தது. இதன் மூலம் புத்தமதம் அரச மதமாக்கப்பட்டு சிங்கள மொழிக்குமோர் உயர் அந்தஸ்துக் கொடுக் கப்பட்டது அல்லாமல் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு பாதுகாப்பளிக்கும் பழைய யாப்பின் சரத்துக்களுக்கும் அகற்றப்பட்டன. சிங்கள அரசின் இந்நடவடிக்கைகளினால் தமிழ் அரசியற் கட்சிகள் ஒன்று சேர்ந்து தமிழ் ஐக்கிய முன்னணி-யொன்றை உருவாக்கின. பழைய தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்குப் பதிலாக உருவாக்கிய இவ்வணி 1976 ஆம் ஆண்டு தன் வட்டுக்கோட்டைப் பிரகடனம் மூலம் முதன் முதலாக தமிழருக்கு என ஒரு தனிநாடு கோரத் தொடங்கியது. இதேவேளை பல தமிழ் இளைஞர் குழுக்களும் ஆரம்பிக்கப்பட்டன. இக்குழுக்களிலொன்று தமிழ் புதிய புலிகளாகும். வேலுப்பிள்ளை பிரபாகரினால் ஆரம்பிக்கப்பட்ட இக்குழுவே பின் விடுதலைப்புலிகள் இயக்கமாக மாறியது.

இலங்கைத் தீவிலே 1997ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி பதவி யேற்ற பின்பு தமிழருக்கோர் நம்பிக்கை ஏற்பட்டது. மிதவாதத் தமிழ் தலைவர்கள் இரு இன அரசியற் பகிர்விற்கு வழிவகுக்கும் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஏற்படுத்துவதற்கான திட்டமொன்றை அமுல் நடத்த பெருமுயற்சி எடுத்தனர். ஆனால் அப்போது பதவியிலிருந்த ஜனாதிபதி இச்சபைகளுக்கு போதிய அதிகாரங்களை வழங்கத் தவறியதாலும் தீவிரவாத தமிழ் இளைஞர்களின் நடவடிக்கைகளாலும் சிங்கள தமிழ் இனங்களுக்கு இடைய தீர்க்கமான ஓர் உடன்படிக்கை ஏற்படுமென்ற நம்பிக்கைகள் நாசமாயின. மாவட்ட அதிகார சபைத் திட்டமும் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டது இச்சம்பவங்களினால் இலங்கை வாழ் பல்லினங்களும் பங்குபெறக் கூடியதும் சிறுபான்மையினர் உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கக்கூடியதுமான ஓர் அரசியலமைப்பை

சிங்கள அரசுகளினால் ஆக்கமுடியாத அவைகளின் கையாலாகாத்தனம் அம்பலமாயிற்று. ஆயுதமேந்திய தமிழ் இளைஞர்கள் ரோந்து சென்ற சிங்கள அரசுப்படையின் வாகன மொன்றை தமிழர்கள் செறிந்து வாழும் யாழ்ப்பாணக்குடாநாட்டில் 1983ஆம் ஆண்டு வழி மறித்துத் தாக்கிய பின்பு இலங்கையில் இனக்கலவரங்கள் மூண்டன. இக்கலவரங்களின் போது கொழும்பிலும் வேறுபல தென்புல நகரங்களிலும் வாழ்ந்த தமிழர்களை சிங்களக் காடையர்கள் மிருகத்தனமாகத் தாக்கினர். மேலும் தமிழர்களின் வீடுகளையும் கடைகளும் வர்த்தக நிலையங்கள் சிங்களக்கும்பல் தங்களுக்கு சிங்கள உத்தியோகத்தர்கள் கொடுத்த வாக்குப் பதிவு இடாப்புக்கள் மூலம் அடையாளம் கண்டு உடைத்துச் சேதமாக்கினர் இந்நிகழ்ச்சிகளின் எதிரொலியே இன்று இலங்கையில் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும் உள்நாட்டுப் போராகும். தொடர்ந்து நாலாண்டுகள் நடைபெற்ற இப்போர் சிங்களவர்களின் தமிழர்களினதும் உறவு முறைகளில் ஏற்கனவே ஏற்பட்டிருந்த விரிசல்களை மேலும் விரிவாக்கிற்று. இப்போரினால் பல ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர். இவர்களுட் பலர் தம் உறைவிடங்களையே விட்டோடவேண்டிய சூழ்நிலையொன்றும் உருவாகியிற்று. 1987ஆம் ஆண்டு அமைதி காக்கும் படையொன்றை இலங்கைக்கு அனுப்பியதன் மூலம் இந்தியா இத்தீவின் உள்நாட்டுத் தகராறில் நேரடியாகத் தலையீடு செய்தது. மேலும் இந்திய அரசு ஜனாதிபதி ஜயவர்த்தனாவை ஓர் அரைகுறையான சமஸ்டி முறையொன்றை அமுல் நடத்தச் செய்து தமிழர்கள் வாழும் பிரதேசங்களுட் சகல மாகாணங்களுக்கும் ஓரளவு சுயாட்சியை வழங்கச் செய்தது.

இலங்கை இனப்பிரச்சனையில் இந்திய அமைதிப்படையினர் காலப்போக்கில் சம்பந்தம் கொண்டதினால் இவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மேற்பட்ட மேதல்களினாலும் ஏறங்கனவே நடைமுறையிலிருந்த கூட்டுடன்படி க்கையிருந்த புலிகள் வெளியேறியதாலும் மீண்டும் போர் தொடங்கியது. ஏழாண்டுகள் தொடர்ந்து நடந்த இப்போரின் பின்பு சந்திரிக்கா குமாரத்துங்காவின் மக்கள் முன்னணிக்கட்சி குறுகிய பெரும்பான்மையுடன் தெரிவுசெய் யப்பட்டது. இதைத் தொடர்ந்து நடந்த ஜனாதிபதி தேர்தலில் சந்திரிக்காவும் பெரும் வெற்றியீட்டியதால் இலங்கையின் அமைதித் தீர்வேற்படும அறிகுறிகள் தென்பட்டன. தேர்தல் பிரசாரங்களின் போது சந்திரிக்கா நாட்டின் இனப்பிரச்சனைக்கு ஓர் முற்றுப்புள்ளி வைத்து இன ஒன்றுமையை நிலைநாட்ட வேண்டிய அவசியம் பற்றி வலியுறுத்தியதால் மக்கள் முன்னணி அரசு மிதவாதத்

தமிழ் அரசியற் கட்சிகளின் ஆதரவைப் பெற்றது. ஜனாதிபதி சந்திரிக்கா பதவியேற்றதும் வடபுலத்தின் ஓர் பகுதியில் நடைமுறையிலிருந்த பொருளாதாரத் தடையை ஓரளவு தளர்த்த விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தார். இதன் பயனாக அரசுக்கும் புலிகளுக்குமிடையியே ஓர் போர் நிறுத்த நடவடிக்கை ஏற்பட்டதால் உள்நாட்டுப் போர் நிறுத்தப்பட்டது. தொடர்ந்து இரு தர ப்பினருக்குமிடையே நான்கு சுற்றுப்பேச்சு வார்த்தைகள் நடந்தன. பின்பு முறிவடைந்தன கிழக்குப் பிராந்தியத்திலுள்ள திருகோண மலைத் துறைமுகத்தில் தங்கியிருந்த இரு இலங்கைக் கடற்படைக்கப்பல்களை புலிகள் 1995ஆம் ஏப்பிரல் மாதம் தாக்கியதும் போர் மீடும் தொடங்கியது. இதைத் தொடர்ந்து போர் மூலம் சமாதானத்தை அடையப்போவதாகவும் பிரகடனம் செய்த இலங்கை இதே ஆண்டு ஒக்டோபர் மாதம் விடுதலைப் அரசு புலிகளின் கைவசமிருந்த அவர்கள் கோட்டையான யாழ்குடாநாட்டிலே ஓர் பாரிய முப்படைத் தாக்குதலை மேற்கொண்டது. கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக இலங்கையில் நடைபெறும் உள்நாட்டுப் போரினால் இதுவரை 60,000 பேர் வரை உயிரிழந்துள்ளனர். இன்னும் பல ஆயிரக்கணக்கானோர் ஊனமுற்றுள்ளனர். சர்வதேச மன்னிப்புச்சபையுட்பட வேறுபல சர்வதேச தாபனங்களும் இலங்கைப் போரில் ஈடுபட்டுள்ளன. இருதரப்பினரும் உரிமை மீறற்சம்பவங்களில் ஈடுபட்டிருப்பதாக தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகின்றன.

## 2.2 ஐக்கிய நாட்டு அரசாங்கத்தை நோக்கி இலங்கையர் ஓட்டம்


சிங்கள அரசுக்கும் தனிநாடு கோரும் விடுதலைப் புலி இயக்கத்திற்குமிடையே நடக்கும் போரினால் ஐந்து இலட்சம் இலங்கை மக்கள் அகதிக-ளாக்கப்பட்டுள்ளனர். தம் புகலிடங்க ளையும் நாட்டையும் விட்டோடிவந்த இவ்வகதிக ளில் 35 ஆயிரமபேர் ஐக்கிய நாட்டு அரசாங்கத்தையும் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பேர் ஐரோப்பாவிலுள்ள ஜேர்மனி பிரான்சு சுவிற்சலாந்து போன்ற நாடுகளிலும் 150,000பேர் தென் இந்தியாவிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இலங்கைக்கும் ஐக்கிய நாட்டு அரசாங்கத் திற்குமுள்ள சரித்திர சம்பந்தமான காரணங்களுக்காகவும் இங்கு ஏற்கனவே ஓர் நிரந்தர தமிழ் சமூகத்தினர் குடியிருப்பத னாலேயுமே இந்நாட்டிற்கு பல அகதிகள் வந்துள்ளனர். இங்கு வருகை தந்தோரின் எண்ணிக்கை இலங்கைப் போர் கடுமையாகும் போது கூடியும் மோதல்கள் தணியும் போது குறைந்தும் காணப்படுகின்றது. கடந்த பதினாறு ஆண்டுகளாக இந்நாட்டில் தஞ்சம்கோரி விண்ணப்பித்தோரின் இலங்கையரின் எண்ணிக்கையை ஈழப்போரின் மூன்று கட்டங்களம் ஆரம்பித்த காலங்களையும் ஒப்பிடும்போது ஓர் ஒருமைப்பாட்டினைக் காணலாம். 1993ஆம் ஆண்டு உள்நாட்டுப்போர் ஆரம்பமாகியதும் இங்கு வந்து தஞ்சம்கோரி விண்ணப்பிப்போர் தொகை அதிகரித்தது. 1995 ஆம் ஆண்டிற்குப் பின்பு இப்படியானோரின் எண்ணிக்கை குறைந்துகொண்டே போகிறது. இப்படிக் குறைவதற்கு இரு காரணங்களைக் கூறலாம். முதற் காரணம் வடக்கிலுள்ள போர் பிரதேசத்திலிருந்து வெளியேறுவதில் மக்கள் எதிர்நோக்கும் வில்லங்கங்கள் இரண்டாவது அகதிகள் இந்நாட்டை வந்தடைய முடியாமல் அரசு ஏற்படுத்தியுள்ள தடைகள் இலங்கைக் குடிகள் இங்கு வந்திறங்க நுழைவனுமதி (விசா) முறை 1985 ஆண்டிலிருந்து அமுலாக்கப்பட்டமை முதற்தடையாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட விசா முறையும் மற்றைய தடைகளும் தஞ்சம்கோருவோரை இங்கு சட்ட விரோதமாகக் கொண்டுவரும் வழிவகைகள் வளரச் செய்தன. இதனால் இங்கு வரும் அகதிகள் அபாய-கரமான பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. சென்ற ஆண்டு நத்தார் பண்டிகைத் தினத்தன்று மத்தியதரைக் கடலில் தஞ்சம்கோர வந்தோர்கள் கப்பலொன்று மூழ்கியதால் தென் ஆசியாவைச் சேர்ந்த 280 பேர் உயிரிழந்தனர். இவர்களுள் 2 பேர் இலங்கைக் குடிகளாவர். இவர்கள் பயணம் மேற்கொண்ட கப்பலை கள்ளக் கடத்தற்காரர் வேண்டுமென்று மோதியதால் இது நீர் மூழ்கியது.

இலங்கையிலிருந்து 1993ஆம் ஆண்டு வரை இங்கு வந்து தஞ்சம்கோரி விண்ணப்பித் தோர்களில் அனேகமானோருக்கு இந்நாட்டில் வாழ விசேட அனுமதி ஈ எல் ஆர் வழங்கப்பட்டது. உள்விவகாரத்துறை அலுவலகம் தஞ்சம்கோரி விண்ணப்பிப்போருக்கு ஐக்கிய நாடுகளின் 1951ஆம் ஆண்டுச் சாசனத்தின் சரத்துக்கமையவே அகதி அந்தஸ்து வழங்குகிறது. இவைகளுக்கேற்ப விண்ணப்ப தாரர்கட்கு தகுதியில்லையெனக் இந்த அலுவலகம் கருதினால் மனிதாபிமான அடிப்படையில் இங்கு தங்கியிருக்க விசேட அனுமதி அளிக்கிறது. இவ்வகை அனுமதி இரண்டாம் தரஅகதி அந்தஸ்து பலத் கருதினாலும் அதன் மூலம் பிரிந்திருக்கும் அகதிக் குடும்பங்கள் ஒன்று சேர வழியேற்பட்டுள்ளது. 1993ஆம் ஆண்டிற்குப் பின்பு தஞ்சம் கோரியோரின் 93 வீதம் விண்ணப்பங்கள்

மறுக்கப்பட்டுள்ளன. உள்விவகாரத்துறை அலுவலகம் தன் விசேட அனுமதி வழங்கும் கொள்கையில் மாற்றமேற்பட்டதே இதற்குக் காரணமெனக் கூறுகின்றது.




தஞ்சம்கோரி விண்ணப்பித்த இலங்கைக்குடிகள் 1980 தொடக்கம் 96 மேற்காணப்படும் வரைபடத்திலிருந்து சென்ற பதினாறு ஆண்டுகளாக தஞ்சம்கோரி விண்ணப்பித்த இலங்கையரின் எண்ணிக்கைக்கும் அந்நாட்டில் நடைபெறும் உள்நாட்டு போரின் மூன்று கட்டங்களுக்குமுள்ள ஒருமைப்பாட்டினைக் காணலாம். உள்நாட்டுப்போர் 1983ஆம் ஆண்டு தொடங்கியதும் அதிகரிக்கத் தொடங்கிய தஞ்சம்கோரி விண்ணப்பித்தோர் தொகை இந்திய அமைதிப்படையின் வருகைக்குப் பின்பு குறையத்தொடங்கியதைக் காணலாம். ஈழப்போரின் இரண்டாம் கட்டம் ஆரம்ப மாகியதும் மீண்டும் கூடுகிறது. எனினும் 1994ஆம் ஆண்டிற்குப் பின்பு தஞ்சம்கோருவோர் தொகை வீழ்ச்சி அடைவதையும் காணலாம். இவ் வீழ்ச்சிக்கு இரு காரணங்களைக் கூறமுடியும். ஒன்று வடபுலத்தில் வாழும் தமிழர்கள் அப்பகுதியைவிட்டு வெளியேற ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகள். அடுத்தது இந்நாட்டுக்குள் தஞ்சம் கோருவோர் வருகையை மட்டுப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள கொள்கை மாற்றங்கள் இவைகளினால் முன்பு தங்குதடையின்றி வழங்கப்பட்ட விசேட அனுமதி மாற்றப்பட்டு தஞ்சம்கோரும் ஒவ்வொருவருக்கும் தமக்கு அகதி அந்தஸ்து பெறும் தகைமையுண டென்பதை நிரூபிக்கவேண்டும். இப்போது இங்கிருக்க வழங்கப்படும் விசேட அனுமதி மனிதாபமான அடிப்படையில் மட்டுமே கொடுக்கப்படுவதாக கூறப்படுகின்றது. சென்ற ஆண்டு ஏப்பிரல் மாதம் நடந்த கொன்சவேட்டிவ் கட்சி மகாநாட்டில் உள்துறை அலுவலக அமைச்சர் இதனை மிகவும் அழுத்தமாகக் கூறினார். இவ்வடிப்படையில் சென்ற ஆண்டு சோமாலியாவிலும் யுகோஸ்சிலாவியாவிலிருந்து வந்து தஞ்சம்கோரியோருக்கு மட்டுமே விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது இது இவ்வாறிருந்து போதிலும் சென்ற ஆண்டு மேல் நீதிமன்றம் தனது தீர்ப்பொன்றில் உள்விவகாரத்துறை அலுவலகம் இலங்கைக்குடிகளின் தஞ்சம்கோரும் விண்ணப்பங்களை பிழையான காரணங்க ளுக்காக மறுத்துள்ளதெனத் தெரிவித்துள்ளது. இத்தீர்ப்பில் சம்பந்தப்பட்ட இரு விண்ணப் பதாரரும் இலங்கை அரசினால் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டபோதிலும் உள்விவகார அலுவலகம் இவர்களின் விண்ணப்பங்களை ஏற்க மறுத்தது. இவ்வி ருவரும் கொழும்பிற்கு திருப்பி அனுப் பப்படுவார்களெனவும் தெரிவித்தது. தீர்ப்பில் சம்பந்தப்பட்ட இரு விண்ணப்பதாரரும் இலங்கை அரசினால் கைதுசெய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டபோதிலும் உள்விவகார அலுவலகம் இவர்களின் விண்ணப்பங்களை ஏற்கமறுத்தது. இவ்விருவரும் கொழும்பிற்கு திருப்பி அனுப்பப்படுவார்களெனவும் தெரிவித்தது மேற்குறிப்பிடப்பட்ட உயர் நீதிமன்றத் தீர்ப்பை அளித்த நீதவான் தமிழ் இளைஞர்ளும் யுவதிகளும் இலங்கை அரச படைகளினால் கொடுமைக்குள்ளாகிறார்கள் என்பதை நிரூபிக்க சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படை யிலேயே தனது தீர்ப்பை வழங்கினார்.

## 2.3 நிரூபிக்க வேண்டிய பொறுப்பு

தற்போது இங்கு தஞ்சம்கோரி விண்ணப்பிப்போர் ஒவ்வொருவரும் அகதி அந்தஸ்தைப் பெறவேண்டுமானால் இவர் தம் சொந்த நாட் டிற்குத் திருப்பியனுப்பப்பட்டால் இம்சைக்குள் ளாவார்களென ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கும்படி வேண்டப்படுகின்றனர். வடபுலத்திலிருந்தோடி வந்து தற்காலிகமாக கொழும்பில் தங்கியிருக்கும் தமிழர் அங்கும் தாம் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக லாமென்ற பயத்துடன் இங்கு வரும்போது தாம் திருப்பியனுப்பப்படலாமென்ற அச்சமும் அவர்களுக்குண்டு. இம்மனநிலையில் இங்கு வருபவர்கள் உள்விவகாரத்துறை அலுவலகம் கேட்கும் நிருபணங்களை தமது விண்ண ப்பத்திற்கு அனுசரணையான சாட்சிப் பத்திரங்களாகக்

கொண்டுவருவார்களென எதிர்பார்க்கமுடியாது.

உள்துறை விவகார அலுவலக உத்தியோகத்தர்கள் தஞ்சம்கோருவோர் விண்ணப்ப மொன்றையும் பரிசீலனை செய்யும்போது பல விடங்களிலிருந்து பெற்ற தகவல்களையும் ஆதாரமாகக்கொண்டே இவைகளின் அடிப்படையிலேயும் முடிவெடுப்பதாகக் கூறிகின்றனர். இவர்கள் பின்வரும் இடங்களிலிலுருந்து தகவல்களை பெறு கின்றனர். இலங்கைப் பிரித்தானிய உயர்தானிகர் காரியாலயம் பொதுநல நாடுகளின் தகவல்நிலையும் சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கை மொனிட்டர் இலங்கை தின ஏடுகள் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் தானிகர் காரியாலயம் பல வெளிநாட்டுச் சஞ்சிகைகள்.

உள்துறை விவகார அலுவலகம் தஞ்சம்கோருவோரின் விண்ணப்பங்களை தனித்தனியாக பரிசீலனை செய்வதாக உறுதியாகக் கூறும் இதே நேரத்தில் விண்ணபதாரர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரே மாதிரியான பதிலையே அனுப்புவதாகத் தெரிகின்றது. இலங்கையைப் பொறுத்தமட்டில் இந்நாட்டு நிலைமை பற்றி இவ்வலுவலகம் தயாரித்துள்ள தன் கொள்கை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே பதில்கள் அனுப்பப்படுகின்றன. இப்படியனுப்பப்பட்ட பதில் கடிதமொன்றிற் காணப்படும் பொதுவாசமொன்று பின்வருமாறு.

"அரசுச் செயலாளரின் அபிப்பிராயப்படி இலங்கை அதிகாரிகள் மேற்கொள்ளும் வழமையான நடவடிக்கைகள் விசாரணைகள் ஆகியவை பற்றி தமிழர்களுட்பட குடிமக்கள் எவரும் அச்சங்கொள்ளவேண்டியதில்லை'. மேலும் உள்விவகாரத்துறை அலுவலகம் தமிழர்கள் ஓர் துன்புறுத்தப்படும் இனத்தினர் அல்லவென்றும் இதனால் இவர்கள் அகதி அந்தஸ்துப் பெறத் தகுதியற்றவரென்றும் அழுத்தமாகக் கூறுகிறது. இந்நிலையை முறைப்படுததுவதற்கு ஐக்கிய நாடுகளில் அகதிகளுக்கான உயர் தானீகர் காரியாலயத்தினதும் இலங்கை உள்ளூர் மனித உரிமை தாபனங்களின் கருத்துக்களை மேற்கோள் காட்டுகிறது. ஐக்கியநாடுகள் உயர்தானீகர் காரியாலயம் இலங்கை நிலைப்பற்றி வெளியிடும் அறிக்கைகள் பற்றி இங்குள்ள அகதி தாபனங்களும் அங்கேயுள்ள அரசு சார்பற்ற சர்வதேச தாபனங்களும் தொடர்ந்து குறைகூறி வருகின்றன. உதாரணமாக 1995ஆம் ஆண்டு யூன் மாதம் கொழும்பிற்கு அயலிலுள்ள வொல்கொடை ஏரியில் சித்திரவதைக்குள்ளளான சடலங்கள் பல காணப்பட்ட போதிலும் இதே மாதம் வெளியான இலங்கை நிலைபற்றிய ஐக்கிய நாடுகள் அரச உயர்காரியாலயத்தின் அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"இலங்கை காவற்துறையினர் மனித உரிமை மீறல்கள் பற்றி தமக்கெதிரான ஏற்பட்டுள்ள தப்பபிப்பிராயத்தை தவிர்க்குமுகமாக இம்மீ றல்களைத் தவிர்க்க வேண்டுமென உணர்ந்துள்ளதால் இவர்கள் மக்களைத் துன்புறுத்துகின்றார்கள் என்ற தகவல்கள் இல்லாமலே போய்விட்டன.

மேலும் 1996ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வெளியான இக்காரியாலயத்தின் அறிக்கையில் பின்வரும் வாசகம் காணப்படுகின்றது.

கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டி ருப்பவர்கள் சரியான முறையிலேயே நடத்தப்படுகின்றார்கள். இவர்கள் காவற் துறையினராலும் இராணுவத்தினராலும் சித்திரவதை செய்யப்படுவதோ அல்லது இம்சைப்படுத் தப்படுவதோ இல்லை.ஆனாலும் இவ்வறிக்கை வெளியாகி இரண்டு மாதங்களுக்குப் பின்பு இலங்கை உயர் நீதி மன்ற நீதிபதி ஒருவர் காவல்நிலையங்களில் காவல்துறையினரின் சித்திரவதை-களை தொடர்ந்தும் தங்குதடையின்றி நடைபெற்று க்கொண்டேயிருப்பதாகக் கூறியுள்ளார்.

இதன் பின்பும் மேற்குறிப்பிட்டுள்ள ஐக்கிய நாட்டு அகதிகள் உயர் காரியாலய அறிக்கையில் எவ்வித திருத்தங்களும் செய்யப்படவில்லை. இதேகாரணங் களுக்காக இலங்கை மனித உரிமை மீறல்களை கண்காணிக்கும் அரசுசார்பற்ற சர்வதேச தாபனங்கள் இலங்கை நிலைபற்றி ஐக்கியநாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகர் காரியாலயம் வெளியிடும் அறிக்கைகள் உண்மைக்குக் புறம்பானவையா என்ற கேள்வியை எழுப்பத் தொடங்கியுள்ளன. தஞ்சம்கோரி விண்ணப்பிப்போரின் விண்ணப்பங்கள் மறுக்கப்பட்டு வெளிநாட்டு விவகாரத் தூதுவர் அலுவலகத்தினால் அனுப்பப்படும் கடிதங்களில் தரப்பட்டிருக்கும் காரணங்களையும் இவர்கள் சட்டத்தரணிகளுடன் உரையாடும்போது வெளிவரும் கருத்துக்களையும் ஒன்றிணைத்துப் பார்க்கும்போது ஒரு உண்மை புலப்படுகின்றது. இது யாதெனில் இலங்கை நிலை பற்றி உள்நாட்டு விவகார அலுவலகம் தீர்க்கமான முடிவொன்றை மேற்கொள்வதற்கு ஐக்கியநாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிக காரியாலய அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் அபிப்பிராயங்களும் கருத்துக்களும் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றன

என்பதாகும். பிற்குறிப்பிடப்பட்டுள்ள காரியாலயம் அகதி- களைப் பாதுகாக்கவேண்டிய கடமையை உடைய ஓர் சர்வதேச தாபனமாகும். இம்முறையில் இக்காரியாலயம் வெளியிடும் அறிக்கைகளில் வெளியாகும் கருத்துக்கள் தஞ்சம்கோரி விண்ணப்பிப்போரின் மீளாய்வுக் கோரிக்கைகளை விசாரிக்கும் விசாரணைச் சபையின் விசாரணைகளின்போது இலங்கையிலுள்ள உண்மை நிலையை எடுத்துக்காட்ட சமர்ப்பிக்கப்படக்கூடிய ஆவணங்களாக இருக்கவேண்டும். ஆனால் இதற்குமாறாக இவை தஞ்சம்கோரிய ஆயிரக்கணக்கான இலங்கைக்குடி மக்களின் பாதுகாப்புக்காக. இங்கேயே தங்கியிருக்கக் கூடாதென்ற உள்நாட்டு விவகார அலுவலகத்தின் வாதத்திற்கே உறுதுணையாகின்றன. இலங்கை அரசு மனித உரிமை மீறல்களை கண்காணித்து துரித நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு பணிக்குழுவை நியமித்த பின்பு இவ்வகையான உரிமை மீறல்கள் தற்போது குறைந்துள்ளது என உள்விவகார தூதுவர் அலுவலகம் சதாசுட்டிக் காட்டிக்கொண்டே இருக்கின்றது. சென்ற பத்தாண்டுகள் நடைபெற்ற மனித மீறல்சம்பவங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவை குறைந்திருந்தாலும் தொடர்ந்தும் நடைபெற்றுக கொண்டிருப்பவை தென்படுகின்றன. மனித உரிமை பற்றிய ஐக்கிய நாடுகள் சாசனச் சரத்துக்களுக்கு முரணாக நடைபெறுப வைகளாகவே தென்படுகின்றன. இவ்விடயம் பற்றி ஐக்கிய நாடுகள் தாபனம் தன் அறிக்கை ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

'இலங்கையில் தற்போது நடைபெறவிருக்கும் சட்டமுறை ஐக்கியநாடுகள் சாசனத்தின் சரத்துக்களில் கூறப்பட்டுள்ள மனித உரிமைகளை உள்ளடக்கியதாகவோ அல்லது இச்சரத்துக்கள் நிர்ணயித்துள்ள உரிமை மீறல் தாண்டப்படுவதை தடுத்து நிறுத்தும் ஒன்றாகவோ அமையவில்லை' . மேலும் இவ்வறிக்கையில் குறிப்பிடும் ஆவணங்களும் , பேட்டி கண்டோரின் உரையாடல்களும் இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடை- பெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதற்கு போதிய சான்றுகளாகும். உதாரணமாக 1996ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் மனித உரிமை மீறல்களை பின்வருமாறு கூறுகின்றது. ' கடந்த பல ஆண்டுகளாக திட்டமிட்டு நடத்தப்பட்ட பரவலான மனித உரிமை மீறல்சம்பவங்களோடு தற்போதுள்ள நிலைமையை ஒப்பிடும்போது கவனிக்கக்கூடிய முன்னேற்றமொன்று ஏற்பட்டிருப்பதை வரவேற்கின்றது.எனினும் இலங்கை அரசு மனித உரிமை மீறல்பற்றி தனது உத்தரவாதங்களை காப்பாற்றாததையிட்டு சபை கவலையும் கொண்டுள்ளது. இலங்கையின் சட்டத்திற்குப் புறம்பான மரணதண்டனைகளும் பலர் திடீரென காணாமல்போவதும் சித்திரவதைகளும் காரணமின்றி மக்கள் கைதுசெய்யப்படுவதும் தொடர்ந்தும் நடை பெற்றுக்கொண்டேயிருக்கின்றன. மேலும் முன்பு நடந்த மனித உரிமைச் சம்பவங்களுக்கு பொறுப்பாயிரு ந்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அரசு கொடுத்த வாக்குறுதியிலிருந்து தற்போது விலகிச்செல்வதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. மேற்குறிப்பிட்டுள்ள மனித உரிமை மீறல்சம்பவங்கள் பற்றி ஐக்கிய நாட்டு அரசு கவலை கொள்வதாக அதன் வேறுபல திணைக்களங்கள் வெளியிடும் அறிக்கைகள் மூலம் தெளிவாகின்றது. சென்ற ஆண்டு நவம்பர் மாதம் இவ்வரசின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி வில்லியம் பொக்ஸ் அவர்கள் இலங்கை மனித உரிமை மீறல் சம்பவங்கள் பற்றி பாராளுமன்றத்தில் குறிப்பிடும்போது இவை தனக்கு கவலை தருவதாகக் கூறியுள்ளார்.

இலங்கையில் மேலே குறிப்பிட்டுள்ள மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்ந்து நடந்துகொண்டேயிருப்பதாலும் இங்கு தஞ்சம்கோரும் இலங்கைக் குடிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு அவர்களுக்கு இங்கிருக்க அனுமதி மறுக்கப்படுவதாலும் இரு கேள்விகள் உருவாகின்றன. முதலாவது இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டால் இவர்களுக்கு என்ன ஆகும் என்பது. மற்றையது இவர்களுக்கு ஏன் இங்கேயே தங்கியிருக்க மனிதாபிமான அடிப்படையில் விசேட அனுமதி வழங்கக்கூடாதென்பது. இக்கேள்விகளுக்கு விடை காணவே அகதிச் சபையின் விசேட குழு வொன்று சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கைக்குச் சென்றது.

அங்கு சென்ற இக்குழு பின்வரும் விடயங்களில் தன் கவனத்தைச் செலுத்தியது.

1.வடபுலத்தில் தான் துன்புறுத்தப்படலாம் என்ற காரணத்தினால் அங்குள்ள தன் வீடுகளை விட்டோடி வரும் மக்கள் இலங்கையின் வேறு ஒரு பகுதியில் வாழ முடியுமா?

2.இம்மக்களும் இலங்கைக்கு வெளியே நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்படுவோரும் கொழும்புக்குச் சென்றால் உண்மையில் அவர்களுக்கு என்ன நடக்கும். ?

***'யாழ்குடாநாட்டைக் கைப்பற்றிய இலங்கை அரசுப் படைகள் 1995ஆம் ஆண்டு பிற்பகுதியில் மேற்கொண்ட தாக்குதல்கள் மூலம் மனித உரிமைகள் நிலை நாட்ட அரசு நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளின் தரம் குறையவில்லை.'***

## 3.1 போர் மூலம் சமாதானம்

சாவகச்சேரிப் பிரதான பாதை மூலம் யாழ் நகர எல்லையுள் நுழையுமிடத்தில் 'யாழ்ப்பாணம் உங்களை வரவேற்கின்றது' என்னும் வாசகம் தாங்கிய வளைவு ஒன்று காணப்படுகின்றது.

இவ்விடத்தில் தான் கிரிசாந்தி குமாரசாமி என்ற 18 வயது மாணவி இலங்கை ராணுவத்தினர் பலரினால் கூட்டாக கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். இவரைப்பற்றி விசாரிக்க ராணுவக் காவல்நிலையத்திற்கு சென்ற இவரது தாயார் , சகோதரர் அயல்வீட்டுக்காரர் ஆகியோரும் கொலைசெய்யப்பட்டனர். இவ்விரு சம்பவங்களும் யாழ்குடா நாட்டில் தற்போது வாழும் தமிழர்கள் ஏன் பயந்தே சீவிக்கின்றார்கள் என்பதை மிகத் தெளிவுபடுத்துகின்றன. இதே பகுதிக்குச் சென்று வந்த அரச சார்பற்ற தாபனங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் கூற்றும் இது எத்தன்மையான பிரதேசம் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இவர்கள் எங்கும் ஆயுதம் தாங்கிய படையினரைக் கண்டதாகவும் முழுப்பிரதேசமும் ராணுவ நடவடிக்கைப் பிராந்தியமாக காட்சியளிப்பதாகவும் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணம் பல ஆண்டுகளாக விடுதலைப் புலிகளின் கோட்டையாகவே இருந்தது. இதுவுமின்றி இம்மாநகரமே புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த வட இலங்கைப் பிரதேசத்தின் தலைநகரம் எனவும் கருதப்பட்டது. இலங்கை ராணுவம் 1995 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் யாழ்நகரின் மீது ஒரு முழு அளவில்-ான தாக்குதலை மேற்கொண்டது. இந்நகரை இங்கே வாழும் எல்லா மக்களுடனும் கைப்பற்றி புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தும்போது தமக்குப் பயன்தரக்கூடிய சாதனமாக்கிக் கொள்வதே இத்தாக்குதலின் முக்கிய நோக்கமாயிருந்தது. மக்கள் சேவையாற்ற இலங்கை இயங்கும் தாபனமொன்று யாழ் தாக்குதல் பற்ற பின்வரும் கருத்து தெரிவித்துள்ளது. இலங்கை மக்களுக்கு மன அதிர்ச்சி தரும் சம்பவக்கோர்வையில் இத்தாக்குதல் ஒரு பிந்திய சம்பவமாகும். .இதனால் ஏற்கனவே விரிசல் அடைந்துள்ள பல்லின உறவு முறைகள் மேலும் மோசமாகியுள்ளன.

இலங்கை ராணுவம் யாழ்நகரின் கடைசிப்பகுதிகளை கைப்பற்றியபோது ஏறக்குறைய நகரம் முழுவதுமே வெறிச்சோடிக்கிடந்தது. 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் நகரை விட்டு வெளியேறத் தொடங்கினர். இப்படி வெளியேறியவர்களில் பலர் தங்கள் வீடுகளையும் உடமைகளையும் விட்டுச் செல்லுமாறு விடுதலைப்புலி இயக்கத்தினால் நிர்ப்பந்திக்கப்பட்டனர். உதவி வழங்கும் உத்தியோகத்தர்கள் கருத்துப்படி மக்கள் இவ்வாறு வெளியேறியதனாலேயே சாதாரண மக்கள் பலர் உயிர் பிழைத்துள்ளார்கள் எனத் தெரியவருகின்றது.

ஈழத்துப் போரின் மூன்றாவது கட்ட முதல் மோதல்கள் காரணமாக 1995ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கடைசி நாள்வரை 3,50000 – 4,50000 மக்கள் வரை யாழ்குடா நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.இவர்களில் பெரும்பான் மையானவர்கள் இன்று தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களிலேயே தங்கியிருக்கின்றார்கள். எனினும் இவர்கள் யாழ்ப்பாணம் திரும்புவதையே இலங்கை அரசு விரும்புகின்றது. ஆனால் ராணுவக்கட்டுப்பாட்டிலிருக்கும் பகுதிகளில் நடைபெறுவதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்களும் ஏற்கனவே கூறப்பட்ட இரு பயங்கர நிகழ்ச்சிகளும் திரும்பிப்போக எண்ணுபவர்களை போகாதவாறு தடுக்கின்றன. இவர்கள் நாட்டின் வேறு பகுதிகளுக்கு செல்லும் வாய்ப்புக்களுக்கும் ஈழப்போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் முட்டுக்கட்டை போடுகின்றனர். வடபகுதியை விட்டு வெளியேறிய பலர் தாங்கள் மீண்டும் வடபகுதிக்குச் சென்றால் விடுதலைப் புலிகளின் தண்டனைக்குள்ளாகலாம் என்ற பயத்தினால் திரும்பிச் செல்லத் தயங்குகின்றனர். சர்வதேச தாபனங்கள் பல புலிகள் சாதாரண மக்களின் மனித உரிமை மீறல்களுக்கு காரணமாய் இருந்திருக்கின்றார்கள் என கண்டித்துள்ளது இங்கே குறிப்பிடவேண்டிய ஒரு விடயமாகும்.

துர்அதிஸ்டவசமாக அப்பாவி மக்களை போர்புரியும் இரு ராணுவங்களுக்கும் இடையே அகப்பட்டு திண்டாடுகின்றனர். இவ்விருபகு தியினரும் இவர்களை மனிதாபிமான கண்கொண்டு பார்ப்பதில்லை. போர் சமாதானம் ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்படவேண்டிய அரசியல் பகடைக்காய்களாகவே கருதுகின்றனர்.

## 3.2 துர்ப்பிரயோகத்திற்குள்ளாகும் மக்கள்.

இலங்கையின் வடபகுதியில் மக்கள் காணாமல் போகின்றார்கள். அநீதியாகக் கொல்லப்படுகின்றார்கள் என்னும் குற்றச் சாட்டுகள் சென்ற ஆண்டு முழுவதுமே கிடைத்துள்ளன. புலிகளால் 1996 ஆம் ஆண்டு ஜுலை மாதம் நிகழ்த்தப்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவங்களின் பின்பு அங்கு வாழ் மக்களைப் பழிவாங்கும் செயல்கள் பலவற்றில் ராணுவம் ஈடுபட்டது. இதுபற்றி 1996ஆம் ஆண்டு ஒகஸட் மாதம் வெளியான இலங்கை மொன–ிட்டர் இவ்வாறு கூறியது.

'யாழ்ப்பாணக்குடா நாட்டில் இலங்கை ராணுவத்தினால் 1995ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடாத்தப்பட்ட சூரியக்கதிர் நடவடிக்கையின் பின்பு 200 இளைஞர்களும் யுவதிகளும் காணாமல் போய் உள்ளார்கள் என மனித உரிமை தாபனங்கள் பல அச்சம் கொள்கின்றன. இவைகளில் பல யாழ்ப்பாணத்தில் பரவலாக உருவாகும் இராணுவவிசாரணை நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இங்கிருந்து இலங்கை சென்ற அகதிச்சபையின் விசேட குழுவிடம் தகவல் தெரிவித்த பிரபல பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இதுவரை 500 பேர்வரை காணாமல் போயுள்ளதாக கூறினார். இதை உறுதிப்படுத்தும் முகமாக மற்றுமோர் தலையாய பாராளுமன்ற உறுப்பினர் யாழ் குடா நாட்டில் நிலைமை மிக மோசமாக இருப்பதாலும் அங்கே காரணமின்றி பலர் கைதுசெய்ய ப்படுவதாகவும் கூறினார். இவரின் எண்ணி க்கைப்படி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களின் தொகை 800 ஆகும். இலங்கையில் அரசு சார்பற்ற தாபனமொன்றில் கடமையாற்றும் உதவி வழங்கும் உத்தியோகத்தர் ஒருவரின் கூற்றுப்படி யாழ்ப்பாணத்தில் காணாமல் போவோரின் எண்ணிக்கை வாராவாரம் அதிகரித்துக்கொண்டே போகின்றது. கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவரின் விசாரணையின் போது மற்றைய மூன்று இளைஞர்கள் மூவரின் முன்னிலையில் ராணுவத்தினரால் உதைத்து கொல்லப்பட்ட சம்பவம் ஒன்று ஒரு மனித உரிமைத் தாபனத்தினால் விபரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கொலையுண்ட இளைஞரின் சொந்தக்காரர் அப்பகுதி ராணுவ தலைவரிடம் சென்று வினவியபோது இவர் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். தொடர்ந்து இவர் பற்றிய விபரங்களைத் தருமாறு பல கோரிக்கைகளை விடுத்ததன் பின்பே அவர் கொல்லப்பட்டதாக ஒப்புக் கொண்டார். மேற்குறிப்பிட்ட தாபனத்தின் பிரதிநிதி ஒருவர் யாழ்குடா நாட்டின் நிலைமை மோசமாகிக்கொண்டே போவதாக அகதிச் சபைக்கு கூறினார். தொடர்ந்தும் கூறியவர் ராணுவத்தினரிடையே ஒழுங்கை நிலைநாட்டுவது கடினம் எனவும் இலங்கையின் அரசு பதவியிலிருந்த அரசைவிட கடுமையான போர் ஒன்றை நடத்துவதாகவும் இப்படியான சூழ்நிலையில் அரசுக்கு மனித உரிமைகள் ஓர் முக்கியமான விடயம் அல்ல எனவும் குறிப்பிட்டார். மேற்கூறிய நிகழ்ச்சிகளை உறுதிப்படுத்திய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் திரு யோசப் பரராஜசிங்கம் அவர்கள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருக்கு எழுதிய கடிதமொன்றில் அநீதியான கொலைகளும் சித்திரவதைகளும் காணாமல் போகும் எண்ணிக்கையும் அதிகரிப்பதாக கூறியுள்ளார். மேலும் அவர் செப்டெம்பர் மாதம் 15ஆம் நாளுக்கு முந்திய மூன்று வாரங்களில் மாத்திரம் 200க்கும் அதிகமான இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக் கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். இதே மாத முற்பகுதியில் யாழ்நகரிற்கு கிழக்கில் ஐந்து மைல் தூரத்திலுள்ள கைதடி என்னும் நகரில் இருந்து ஆறு பேர் காணமல் போனதாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது. இதன்பின்பு காணாமல் போன 70 பேரின் பெயர்விலாசங்கள் பற்றிய கைதுசெய்யப்பட்ட திகதிகள் போன்ற எல்லாத் தகவல்களும் பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் அவர்கள் ஜனாதிபதிக்கு தெரிவ–ித்துள்ளார். மனித உரிமை மீறல் சம்பவங்கள் யாழ்குடாநாட்டிற்கு அப்பாலும் நடைபெறுகின்றன. சர்வதேச மன்னிப்புச் சபை தரும் விபரங்களின் படி 24 குடிமக்கள் சென்ற வருடம் பெப்ரவரி மாதம் 11ஆம் நாளான்று திருகோணமலையிலுள்ள ஊரொன்றில் இலங்கை ராணுவத்தினால் அநீதியாகக் கொல்லப்பட்டதாக தெரிகின்றது. மேலும் இதே சம்பவத்தின் போது காயமுற்று திருமலை பொதுவைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவரும் 25 பேரில் பல மனித உரிமை தாபனங்களில் பணிபுரியும் உத்தியோகத் தர்களிடம் ராணுவத்தினர் எவ்விதம் யன்னல்களையும் கதவுகளையும் உடைத்து மிருகத்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்பதை விபரித்துள்ளதாகவும் மன்னிப்புச் சபையின் அறிக்கை கூறுகின்றது. இத்துப்பாக்கிச் சூட்டின் போது ஒரு கற்பிணித்தாயும் கொலையுண்டதாக தெரிகின்றது ராணுவத்தினால் கைதுசெய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்ட எட்டு இணைஞர்களின் சடலங்கள் தென்மராட்சியிலுள்ள ஒரு புதைகுழியில் இருந்து ஒகஸ்ட் மாதம் முற்பகுதியில் மீட்கப்பட்டன. டிசம்பர் மாதங்களில் பாடசாலைச் சீருடைகளுடன் காணப்பட்ட பல சடலங்கள்

முல்லைத்தீவு கடற்கரையில் வந்தடைந்ததை செஞ்சிலுவைச் சங்கம் உறுதிப்படுத்தியுள்ளது. இவ்வகையான மனித உரிமைச் சம்பவங்களில் இலங்கை முற்படையினர் மாத்திரம் ஈடுபட்டிருக்கவில்லை. தம்பு ராமலிங்கன் என்ற முன்னாள் உதவி அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் சென்ற ஆண்டு யூலை மாதம் இரு இளைஞர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் 1995ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அரச படைகள் யாழ்நகரை மீண்டும் கைப்பற்றியதையொட்டி நடாத்தப்பட்ட உத்தியோகபூர்வமான விழாக்களில் பங்குகொண்டதாக தெரிகின்றது. இதற்கு இரு வாரங்களுக்குப் பின்பு திருமதி சரோஜினி என்ற மற்றுமொரு தமிழ்ப்பெண் விடுதலைப் புலிகளினால் கூட்டுக்கொள்ளப்பட்டார். அவர் சடலத்தின் பக்கத்தில் விடுதலைப் புலி இயக்கத்தைக் காட்டிக் கொடுத்ததற்கான தண்டனை எனக் கூறும் சீட்டொன்று காணப்பட்டது. சர்வதேச மன்னிப்புச்சபை புலி இயக்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள இடங்களில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பல நடந்திருப்பதாக தொ-ிவித்து ள்ளனர். இப்பகுதிகளில் அப்பாவிச் சிங்கள மக்கள் பலர் திட்டமிடப்பட்டு கொலை செய்யப்பட்டிருப்பதாகவும் துரோகிகள் எனக் கருதப்படும் தமிழர் பலர் விசாரணையின்றி கொல்லப்பட்டதாகவும், கைதிகள் துன்புறுத்தப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதாகவும் சிறுவர்கள் பலவந்தமாகவோ அல்லது ஏமாற்றப்பட்டோ ஆயுதமேந்திய குழுக்களில் சேர்க்கப்ப டுவதாகவும் மன்னிப்புச்சபை கூறுகின்றது.

இதற்கான சாட்சியங்கள் இச்சபையிடம் இருப்பதாக கூறுகின்றது.

## 3.3 அச்சத்திற்கான காரணி

இலங்கையில் இயங்கும் மனித உரிமை நடவடிக்கைக்குழு யாழ்ப்பாணத்தில் ஏறக்குறைய 400 பேர் காணாமல் போயுள்ளதாக அகதி பணியக பிரதிநிதி குழுவிடம் கூறியுள்ளது. இவர்களது மறைவு பற்றி ராணுவத்தினர் விளக்கம் தருகையில் இவர்கள் விடுதலைப்புலிகளினால் கொலைசெய்யப்பட்டி ருக்கலாம் அல்லது ஏற்கனவே கொலையுண்ட இவர்கள் மரணம் பற்றிய தகவல் நஸ்ட ஈட்டுப்பணம் பெறுவதற்காக இப்போது தான் தரப்பட்டிருக்கலாம் அல்லது இவர்கள் அனைவரும் இப்பகுதியைவிட்டு வெளியேறியி ருக்கலாம் எனவும் கூறினார். இம்மறைவுகள் பற்றி எப்படி எல்லாம் விளக்கங்கள் அளிக்கப்பட்டபோதிலும் இவை இப்பகுதி வாழ் மக்களை மிகவும் பாதித்துள்ளன என்பதை மறைக்க முடியாது. ஐக்கிய அமெரிக்க நாட்டின் அகதிகளுக்கான குழு இம்மறைவுகள் பற்றி இப்படிக் கூறுகின்றது. யாழ்ப்பாணத்தில் வாழும் பலர் பாதுகாப்புப் பற்றி அஞ்சுகின்றனர். பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் காணாமல் போய்விட்டதாக அறிவிக்கப்படுகின்றது. இவர்களில் பலர் ராணுவத்தினரால் தடுத்துவைக்கப்பட்டிலுக்கலாம் . இருந்தும் இவர்களை தடுத்து வைத்திருப்பதாக ராணுவம் ஒப்புக்கொள்ளாததினால் இவர்களது குடும்பங்கள் பெரிதும் குழம்பிப்போயிருக்கின்றன.

இளம் பெண்கள் பலர் இலங்கை ராணுவ வீரர்களினால் கற்பழிக்கப்பட்டுள்ளார்கள் என வரும் செய்திகளைக் கேட்டு யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள் மேலும் பயப்படுகின்றார்கள். சென்ற ஆண்டு நவம்பர் மாதம் பத்து வயதுச் சிறுமி ஒருத்தி ராணுவத்தினரால் கூட்டாக கற்பழிக்கப்பட்டாள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சர்வதேச மன்னிப்புச்சபை அறிக்கை ஒன்றின்படி கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் திருகோணமலைக் கிராமம் ஒன்றில் நடந்த ஒரு சம்பவத்தின்போது அருமைத்துரை தனலட்சுமி என்ற பெயருள்ள பெண் ஒருத்தி கடைஒன்றில் இருந்து வெளியே இழுத்துவரப்பட்டு அருகிலுள்ள பால் சேகரிக்கும் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு கற்பழிக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டதாக தெரிகின்றது.

பெண்கள் உரிமைகளுக்காக உழைக்கும் ஒரு தலையாய தொண்டர் கூற்றின்படி யாழ்ப்பாணத்தின் ராணுவத்தலைவர், விடுதலைப்புலிகள் கடந்த ஆண்டு யூலை மாதம் வெடிக்கவைத்த குண்டுக்குப் பலியாகி இறந்த பின்பு புதிதாக நியமிக்கப்பட்ட தலைவர் தன் வீரர்களை கட்டவிழ்த்துவிட்டாராம். இது பற்றி அவர் தொடர்ந்து கூறும்போது ' அதிகமான இராணுவத்தினர் கற்பழிப்பு சர்வசாதாரணமாய் நடைபெறும் பகுதிகளிலிருந்து வந்திருப்பதினால் இங்கும் இவர்கள் மக்களை அடித்து துன்புறுதல்களும் கற்பழிப்புக்களும் இடம்பெறுகின்றன. மேற்கத்தைய நாட்டு தூதுவர் ஒருவர் வவுனியாவில் யாழ்ப்பாண அகதிகள் இருக்கும் இரு அகதி முகாம்களுக்குச் சென்றிருந்தார். அவர் அங்கே கேட்டறிந்ததை இவ்வாறு கூறினார். ' இரு முகாம்களிலும் இருந்தவர்களிடம் நாங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆட்சியின் கீழ் வாழ உங்களுக்கு விருப்பமா எனக் கேட்டோம். அவர்கள் தாம் புலிகளின் ஆட்சியையே விரும்புவதாக கூறினார்கள். மேலும் அவர்கள் இலங்கை ராணுவத்தினால் பல சாதாரண மக்கள் கொலை செய்யப்படும் விபரங்களை விளக்கி பல பெண்கள் கற்பழிக்கப்படுவதாகவும் சொன்னார். அகதி

ஒருவர் புலிகள் தங்கள் பணத்தை எல்லாம் எடுத்தபோதிலும் உயிரோடு வாழ விட்டார்கள் எனவும் தங்கள் பெண்களுக்கு எந்த விதமான தீங்கும் விளையவில்லை எனவும் சொன்னார்.

## 3.4 மினுக்கி மறைக்கின்றார்கள்.

இலங்கை அரசு சர்வதேச சமூகத்தினரிடம் நாட்டு நிலைமை பற்றி கூறும்போது யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள் பயந்தே வாழ்கின்றார்கள் என்ற அறிக்கைகள் பற்றி மௌனம் சாதிக்கின்றது. இவ்வரசின் இந்நிலைமை புரிந்துகொள்ளக்கூடியதொன்றாகும்.

சென்ற ஆண்டு ஒக்டோபர் மாதம் பீ பீ சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்கள் யாழ் நிலைமை பற்றி இவ்வாறு கூறியுள்ளார்.

'யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களும் இலங்கை ராணுவமும் தற்போது மிக அந்நியோன்னியமாக பழகுகின்றார்கள் . இதனால் அங்கு அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடப்பதில்லை எனக் கூறவில்லை ஆனால் கடந்த ஐந்து ஆறு வருட பிரச்சனைகளுடன் இவைகளை ஒப்பிடும்போது பெரிதெனச் சொல்லமுடியாது.' இதேபோன்று லண்டனிலுள்ள இலங்கை தானீகர் 1996 நவம்பர் மாதம் யாழ்ப்பாண நிலைமை பற்றி குறிப்பிடும்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கை கிளைப்பொறுப்பாளர் கூறுவதென தெரிவிக்கும் ரொயிட்டர் செய்தித் தாபனத்தின் 1996 ஆம் ஆண்டு நவம்பர் வெளியிடப்பட்ட செய்தி அறிக்கையில் காணப்படும் பின்வரும் பகுதியை அரசுக்குச் சாதகமாக குறிப்பிட்டுள்ளார். இலங்கை ராணுவத்தினருக்கும் சாதாரண குடிமக்களுக்கும் இடையேயான உறவு முறைகள் நன்றாகவே இருக்கின்றன. எனினும் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் அசம்பாவிதங்கள் நடக்கின்றன என அவர் ஏற்றுக் கொண்டார். யாழ்ப்பாணத்தில் நடக்கும் மனித உரிமை மீறல் சம்பவங்களைப் பற்றி பல பத்திரிகையாளர் தகவல் தர முயற்சிக்கும்போது இவர்களது அறிக்கைகளுக்கு இலங்கை அரசு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இதுபற்றிய செய்தித் தடைகளுக்கு எதிரான சர்வதேச நிலையம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. ' பொதுவாக இலங்கை அரசும் ராணுவமும் மோதல்கள் நடத்தும் போதும் அவ்விடங்களுக்கு செய்தியாளர்கள் செல்லாமல் செய்யும் தமது தந்திரோபாயத்தை வெற்றிகரமாகவே நடைமுறைப்படுத்தியுள்ளன. தடைகளையும் மீறி நடப்பதை அவதானித்த செய்தியாளர்கள் தாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த விளைவுகள் பற்றி சொல்லும்போது இத்தகைய விளைவுகள் போர் நடந்துகொண்டிருக்கும் எந்த நாட்டிலும் எந்தவொரு அனுபவமிக்க செய்தியாளரும் அனுபவித்ததில்லை எனக் கூறியுள்ளார். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அறிக்கையில் பின்வரும் குறிப்புக்கள் காணப்படுகின்ற . மனித உரிமை மீறல்களை கண்காணிக்கும் தாபனங்கள் மனிதாபிமானக் கண்கொண்டு தாங்கள் சந்தேகிக்கும் மனித உரிமை மீறல் சம்பவங்களையும் மனித உரிமைச் சட்டத்திற்கு எதிரான நிகழ்ச்சிகளையும் வெளியிட முயற்சிக்கும்போது அரசின் வெளிப்படையான கண்டனத்துக் குள்ளாகின்றனர். இலங்கையில் நடைமுறை யிலிருக்கும் உத்தியோகபூர்வமானதும் உத்தியோகபூர்வமல்லாத செய்தித் தணிக்கை முறைகள் மக்கள் யாழ் சம்பவங்கள் பற்றி அரசு வெளியிடும் ஒருதலைப்பட்சமான செய்திகளை மட்டுமே அறியக்கூடியவாறு நிட்சயப்படுத்தியுள்ளன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தணிக்கை முறைகள் எவ்விதத்தில் பயன்படுத்தப்படுகின்றன என்பதை பின்வரும் சம்பவங்கள் தெளிவாக்குகின்றன. அரச விமானங்கள் கண்மூடித்தனமாக நடாத்திய குண்டுவீச்சினால் யாழ்ப்பாணம் நவாலியிலுள்ள தேவாலயமொன்றில் சரணடைந்திருந்த அப்பாவி மக்களில் 65 பேர் கொல்லப்பட்டதையும் 150 பேர் காயமடைந்ததையும் வெளியுலகத்திற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எடுத்துக் கூறியபோது வெளிவிவகார அமைச்சு இச்சங்கம் இலங்கையில் இயங்காதவாறு தடைசெய்யப்போவதாக பயமுறுத்தியது. இலங்கை அரசின் மனித உரிமைகளை பாதுகாக்கவேண்டிய கடமை பற்றி மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றது. கதிர்காமர் அவர்கள் இவ்விடயமாக பீ பீ சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் 'நாங்கள் ராணுவத்தினரிடம் மனித உரிமைகள் பற்றி மிகவும் அவதானமாக இருக்கவேண்டுமெனக் கூறியுள்ளோம். இவர்களுக்கு தொடர்ச்சியாக மனித உரிமைகள் சம்பந்தமாக எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.' எனக் கூறினார்.மேலும்.இதேவிடயமாக இங்குள்ள இலங்கை உயர்தானீகர் யாழ் செஞ்சிலுவைச் சங்கப் பொறுப்பாளர் லிஸ்ட் வூட் ரியோஸ்ட் இவ்வாறு கூறியதாகச் சொன்னார். ' கற்பழிப்புக் கொலை சம்பவங்களுக்கு காரணமாயிருந்த எல்லா ராணுவ வீரர்கள் மீதும் அநேகமாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவே நான் கூறுவேன்.'

## 3.5 சட்டபூர்வமான பாதுகாப்புக்களில்லை.

சாவகச்சேரியில் நடந்த சம்பவம் பற்றி சர்வதேச மன்னிப்புச்சபை அறிக்கை பின்வரும் விபரங்களைத் தருகின்றது. சாவகச்சேரி கச்சாய்ப் பாதையில் வாழ்ந்த இளம் கணவன் மனைவி இருவரும ராணுவத்தினால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டார்கள். பின்பு ராணுவவீரர்கள் கணவனை குத்திக்கொன்றுவிட்டு அவரது மனைவிையயம் கற்பழித்து கொலைசெய்தனர். இச் சம்பவத்திற்காக சம்பந்தப்பட்ட இராணுவப்பிரிவின் தலைவர் மன்னிப்புக் கேட்டு வாழ்ந்த கிராம மக்களை சம்பவத்தில் பங்குபற்றிய ராணுவவீரர்களை அடையாளம் காட்டுமாறு கேட்டதாக சொல்லப்படுகின்றது. இவர் இப்படிக் கேட்டும் அடையாளம் காட்ட முன்வரவில்லை. பின்விளைவுகளுக்கு அஞ்சி இவர்கள் இப்படி நடந்துகொண்டனர்.

இலங்கை பீ பீ சி செய்தியாளர் புளோரா வொற்ஸ் போட் அவர்கள் சென்ற ஆண்டு செப்டெம்பர் மாதம் தன் செய்தி அறிக்கையில் 'ராஜதந்திரிகளும் உதவி அளிக்கும் உத்தியோகத்தர்களும் இலங்கையின் வடகிழக்குப் பிரதேசங்களில் அதிகரிக்கும் காணாமல்போவோர் கைதுசெய்யப்படுவோர் ஆகியோர் எண்ணிக்கைகளையிட்டு கவலை தெரிவித்ததினால் அரசு இரு புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டது.

1. இவைபற்றி விசாரணை செய்ய மூத்த ராணுவ உத்தியோகத்தர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டமை.

2. பல பிரஜைகள் குழுக்கள் பலவலாக உருவாக்கப்பட்டமை.

கடைசியாக கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அரசின் மனித உரிமைகள் நடவடிக்கைக்கு ழுவிற்கு யாழ்ப்பாணத்தில் ஒரு அலுவலகம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டது, அரசினால் தனக்கு மனித உரிமைகளைப் பாதுகாக்கும் விடயத்திலுள்ள ஆர்வத்தை வெளிக்காட்ட அமைக்கப்பட்ட இக்குழுவிற்கு பின்வரும் சட்டபூர்வ அதிகாரங்கள் உண்டு. பயங்கரவாதச் தடைச்சட்டம் அல்லது அவசர கால விதிகளின் கீழ் கைதுசெய்யப்பட்டபோது அல்லது தடுத்து வைக்கப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ளல். எந்த நேரமும் இவர்கள் தடுத்துவைக்கப்பட்டோ அல்லது பூட்டிவைக்கப்பட்டோ இருக்கும் இடங்கள் அல்லது காவல் நிலையங்களுக்கு செல்லக்கூடிய உரிமை. இவர்கள் அதிகாரங்கள் சம்பந்தமாக வெளியான ஒரு அறிக்கையின்படி பல சந்தர்ப்பங்களில் இக்குழுவிற்கு கைதுசெய்யப்பட்ட அல்லது தடுத்து வைககப்பட்டோரை காணவோ அல்லது தொடர்பு கொள்ளவோ முடியாமல் போயிற்று. இருந்தும் இக்குழுவினர் இதுபற்றி பெரும் அக்கறை கொள்வதாகவும் தெரியவில்லை. மொத்தமாக இவ்வறிக்கை இக்குழு பற்றி கூறும்போது இக்குழுவினர் சட்டப்படி இவர்களின் மேல் சுமத்தப்பட்ட கடமைகளை நடைமுறையில் செயல்ப்படுத்த தவறியுள்ளதாக குற்றம்சாட்டியுள்ளது. இக்குழுவிற்கு அளிக்கப்பட்ட ஆணை போதுமானதாகவில்லை என்றும் இவ்விசாரணை நிறைவேற்றுவதில் குழு உத்தியோகத்தர்களுக்கும் போதிய ஆர்வம் இல்லை என்றும் இக்குழுவிற்கு எதிராக கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 3.6 உயிர்வாழ்வதே ஒரு போராட்டம

ஏற்கனவே எடுத்துக்கூறப்பட்ட காரணங்களிலிருந்து போரினால் வெளியேற்றப்பட்ட பலருக்கு தங்கள் புகலிடங்களுக்கு திரும்பிப்போக ஏன் விருப்பமில்லை என்பது புலனாகின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிப்பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்த மக்கள் ராணுவம் புலிகளின் வசமிருந்த கிளிநொச்சி நகரினைத் தாக்கியதும் மீண்டும் நகரும்படியாயிற்று. மனிதாபிமான சேவைக்காக இயங்குமோர் தாபனத்தின் அவதானிப்பின்படி உலக மோதல்களை ஆராய்பவர்கள் கூற்றின்படி , கிளிநோச்சி நகர்த்தாக்குதலே உலகில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மோதல்களில் மிகக் கடுமையானதாகும். மேலும், இதை வியட்நாம் போரில் நடந்த 'ரெட்'தாக்குதலுக்கு ஒப்பிடலாமெனவும் இவர்கள் அபிப்பிராயப்படு கின்றார்கள். அரச சார்ப்பற்ற தாபன அறிக்கைகளின்படி கிளிநொச்சித் தாக்குதலால் 3.50000 க்கும் அதிகமான மக்களுக்கு வன்னிப்பிரதேசத்தின் உட்பகுதிகளுக்கு ஓடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஓடிய மக்களுக்கு இப்பகுதிகளில் தங்குமிடம் கண்டுபிடிப்பதே. வாழ்வுக்கும் சாவுக்கு மிடையிலான பெரும் போராட்டமாகி போயிற்று என்று இவ்வறிக்கைகள் மேலும் கூறுகின்றன. இவ்வகதிகளில் பலர் மரங்களின் கீழ் வெய்யிலையும் மழையையும் தடுப்பதற்கு சேலைகளை இருத்திக்கொண்டே பெரும் கஸ்டங்களுக்கு மத்தியில் சீவிப்பதாகவும் வேறும்பல அறிக்கைகள் கூறுகின்றன. இவர்களது அவல நிலை அரசின் தொடரும் உணவு மருந்துக்கள் சம்பந்தமான தடைகளினால் மோசமடைகின்றது.

மனித உரிமைகளுக்கான யாழ்ப்பான சர்வதேச பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்னியில் துன்பப்படும் அகதிகளை பலாத்காரச் சக்கரங்களுக்கிடையே நசிபட்டு துன்பப்படும் மக்கள் என வர்ணிக்கின்றது. இவர்களில் சிலர் தென்னிந்தியாவுக்கு ஓட முயற்சித்தனர். இதன் பயனாக 8000 அகதிகள் சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் வரை தமிழ் நாட்டை வந்தடைந்தனர். இவர்களில் பலர் தங்கள்உடமைகளை எல்லாம் விற்றுபய ணக்கட்டணமான 160 டொலர் பெறமுடிந்தது. இப்படிப் பணம் பெற்று படகுகளில் பயணம் செய்த சிலர் தங்களது பயணத்தை முடிக்கமுடியாததோர் துர்ப்பாக்கியமும் ஏற்பட்டது. ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி 110 பயணகளை ஏற்றிச் சென்ற படகு ஒன்று மன்னார் தீவுக்கருகாமையில் கவிழ்ந்ததால் எட்டுக் குழந்தைகள் உட்பட 14 பேர் நீரில் மூழ்கினர்.

ஐக்கிய அமெரிக்க நாட்டின் அகதிக்குழு தனது இவ்வருட ஜனவரி மாத அறிக்கையில் வன்னியில் இடம் பெயர்ந்து வாழும் பலர் வாழ்க்கையில் நம்பிக்கை இல்லாமை ஏமாற்றம் ஆகியவை வெளிப்படையாகவே தெரிகின்றன. இவர்கள் ஒருதரமல்ல மூன்று நான்கு முறை இடம்பெயர்ந்தவர்கள். அரச படைகள் மேலும் தாக்குதல்களை மேற்கொண்டால் மீண்டும் இடம்பெயர்ந்து ஓடவேண்டுமோ என அஞ்சிவாழ்பவர்கள். இப்படி ஓடினால் எங்கே போகலாம் எப்படிப் பிழைக்கலாம் என்ற கேள்விக்குறியோடு பிழைப்பவர்கள்.' இப்படி இவர்கள் பற்றிக் குறிப்பிடும் மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க அறிக்கை 'ராணுவத்தினராலும் விடுதலைப்புலிகளினாலும், தங்கள் விருப்பப்படி நகர போதிய சுதந்திரமில்லாத மக்கள் இவர்கள்.இதனால் இவர்கள் கடுமையாக சுரண்டப்படுவதுமல்லாமல் பல மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கும் ஆளாகின்றார்கள் என இவர்களை வர்ணிக்கின்றது. .இதே அறிக்கையின்படி மேலும் பல சாதாரண மக்கள் சாகவேண்டும். செத்தவர்கள் எண்ணிக்கை இன்னும் போதாது. மற்றைய நாடுகளில் பெரும் குடிமக்கள் இறந்த பின்பே சுதந்திரம் பெற்றார்கள் என விடுதலைப்புலிகள் மக்களிடம் சொல்லியிருப்பதாக தொ-்கின்றது.

மீண்டும் தொடங்கியுள்ள ஈழப்போர் பல்லாயிரக் கணக்கான மக்களை துன்பத்தை அனுபவித்து துன்புறுத்தல்களுக்கு பயந்து வாழும் ஆதரவற்ற அநாதைகளாகவே ஆக்கியுள்ளது. தங்களுடைய பிரச்சனைகளுக்கு இராணுவ நடவடிக்கை மூலமே தீர்வு காணமுடியுமென அடம்பிடிக்கும் இரு பிரதான தரப்பினர் மத்தியில் அகப்பட்டு திண்டாடும் மக்களுக்கு தாங்கள் இருக்குமிடத்திலேயே தரித்திருப்பதைவிட வேறு மாற்று வழி இருப்பதாகத் தெரியவில்லை. மீண்டும் தங்கள் வீடுகளுக்கு திரும்பிச் சென்றால் கைதாகலாம் அல்லது துன்புறுத்தப்படலாம் தமது பெண்கள் கற்பழிக்கப்படலாம் என்ற பயம் அவர்களை போகாமல் தடுக்கின்றது. பலர் தம் பார்வையை நாட்டின் தென்பக்கம் செலுத்துகின்றனர். இங்கு சென்றால் போர்ப்பிரதேசத்தில் இருந்து பல மைல்களுக்கு அப்பால் வாழ்க்கை மீண்டும் ஆரம்பிக்கக்கூடிய ஒரு சாத்தியக்கூறு பற்றிய நினைப்பே இப்பார்வை. ஆனால் பின்தொடரும் அத்தியாயத்திலிருந்து இவர்கள் நாட்டின் தென்புலத்தை நோக்கி செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் மிகக் குறைவு என்பதையும் நடைபெறும் உள்நாட்டுப் போரில் இருந்து ஓய்வு கூட மிகச்சிறிதாகவே இருக்கும் என்பதையும் உங்களால் கிரகிக்க முடியும்.

## 4 நுழைவாயில

***'பல இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் போர் பிரதேசத்திற்கு வெளியிலுள்ள பகுதிகளில் தொடர்ந்து வாழ்வதாக அராசாங்க செயலாளருக்குத் தெரியும். மேலும் இதுவரையும் இவர்களுக்கும் இன்றி மற்றைய இனத்தவர்களுக்கும் இப்பகுதியில் சாதாரண வாழ்க்கை நடாத்துவதற்கு போதிய பாதுகாப்பு உண்டென்பதும் அவருக்குத் தெரியும்.'***

### 4.1 பாதைகள் சந்திக்குமிடத்தில்

அகதிச் சபை பிரதிநிதிகள் குழு வவுனியாவிலுள்ள அகதி முகாம்களுக்குச் சென்ற போது ஒரு தமிழ்ப் பெண்மணியைச் சந்தித்தார்கள். இப்பெண்மணி தாம் விடுதலைப் புலிகள் அரசுப் படை ஆகியோரின் கட்டுப்பாட்டிலிருக்கும் பிரதேசங்கள் இணையும் இடத்திலுள்ள இராணுவச் சோதனை நிலையத்தை வந்தடைந்ததும் தன் மகனுக்கு என்ன நடந்ததென்பது பற்றி குழுவுக்கு விளக்கிக் கூறினார். தனது மகன் சோதனை நிலையத்தில் விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டதாகவும் இதன் பின்பு தொடர்ந்து பதினெட்டு நாட்களாக இவனைப் பற்றிய தகவலுக்காகச் இன்று சென்ற போது இராணுவத்தினால் தாக்கப்பட்டதாகவும் விளக்கினார். இவருடைய முகத்தில் இவர் தாக்கப்பட்டதற்கான அறிகுறிகள் தென்பட்டன. முகத்திற் பல காயங்கள் காணப்பட்டதுமல்லாமல் இவருடைய பற்கள் பலவற்றையும் காணவில்லை. தன் மகன் சோதனை நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட

பின்பு என்ன நடந்ததென இதுவரையும் இவருக்குத் தெரியாது.

வடபகுதியில் இருந்து சடுதியாக இங்கு வரும் பெருந்தொகையான அகதிகள் சேமநலனுக்காக வவுனியா நகரிலும் அதன் சுற்றுப்புறத்திலும் பதினொரு முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுள் ஒன்றுதாண்டிக்குளம் அகதி முகாமாகும். வவுனியா நகர் அரசு புலிகளிடமிருந்து மீட்டெடுத்த பிரதேசத்திற்கும் விடுதலைப்புலிகள் ஒன்றிணையும் கட்டுப்பாட்டிலிருக்கும் பிரதேசமும் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது. வடக்கிலிருந்து கொழும்புக்குச் செல்ல விரும்புமெவரும் இம்முகாம்களைக் கடந்தே செல்லவேண்டும் இங்கே தான் இராணுவத்தினராலும் அவர்களுடன் சேர்ந்து இயங்கும் ஆயுதமேந்திய தமிழ் குழுக்களினாலும் கடந்து செல்வோரின் எல்லா விபரங்களும் சேகரிக்கப்படுகின்றன. இதன் பின்பே இவர்கள் கொழும்பு நோக்கிச் செல்ல அனுமதிக்கப்படுகின்றார்கள். இவ் அனுமதி வழங்கப்படுவதற்கான பொறுப்பு இப்பகுதி இராணுவ பிறிகேடியருக்குத்தானுண்டு. மாவட்ட அரசாங்க அதிபருக்கில்லை.

சென்ற ஆண்டு ஒக்ரோபர் மாதம் 22ஆம் நாள் தென் புலத்திற்கு சாதாரண மக்கள் செல்வதிற்கான தடைகள் தற்காலிகமாக நீக்கப்பட்டன. இது இருகாரணங்களுக்காக நிகழ்ந்திருக்கலாம். அதிக எண்ணிக்கையிலான அகதிகள் கடல் கடந்து இந்தியாவிற்கு ஓடிச் செல்வதால் இந்திய அரசின் ஆட்சேபனைகளின் பயனால் இப்படி நடந்திருக்கலாம் அல்லது இராணுவ நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளுக்காக தடைகள் நீக்கப்பட்டிருக்கலாம்.

இவ்விளைஞர்கள் இராணுவத்தின் கட்டுப்பாடில்லாத பிரதேசத்திற்கு அனுப்பப்படுகின்றார்கள். கிடைத்திருக்கும் விபரங்களின்படி கைதுசெய்யப்பட்ட பன்னிரண்டு இளம் வயதினர் பற்றி அவர் பெற்றோர்கள் வினவியபோது இவர்கள் தங்கள் கட்டுப்பாட்டிலில்லாத பகுதிக்கு திருப்பி அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது இருந்தும் இவர்களில் மூவரைத் தான் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் கண்டுபிடிக்க முடிந்தது. மற்றவர்கள் பற்றி எனக்கோ மாவட்ட அரசாங்க அதிபருட்பட மற்றவர்களுக்கோ தெரியாது எனக் கூறினார். தாண்டிக்குளம் முகாமில் சென்ற ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் நாள் வரை 1881 இளம் வயதினர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். இவர்களில் 308 பேர்களையே இராணுவத்தினர் வெளியே செல்லக் கூடியவரெனத தீர்மானித்துள்ளனர். எனினும் இவர்களும் தொடர்ந்து இந்த முகாமிலேயே வைக்கப்பட்டிருக்கின்றனர்.

தாண்டிக்குளம் நிகழ்வுகள் பற்றி கொழும்பிலுள்ள வழக்கறிஞர் ஒருவரைஅகதிச் சபை குழு பேட்டி கண்டது. இப்பேட்டியின் போது இவர் தாண்டிக்குளத்திலுள்ள முகாமில் ஏழு பேர் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனரென்றும் சித்திரவதைகள் பற்றிய சத்தியக்கடதாசிகளை தாம் கண்டதாகவும் கூறினார். இவர் மேலும் கூறுகையில் தாண்டிக்குளம் முகாம் சுவர்களில் இரத்தக்கறைகள் இருப்பதாகவும் எவ்வித சித்திரவதைகள் இங்கு நடைபெறுகின்றன என்பதையும் விபரித்தார். பொலித்தீன் பைகளில் பெற்றோலை நிரப்பி சந்தேகப்படுவோரின் தலை மறைய இழுத்துவிடுவதும் பெண்களின் மறைவிடங்களில் போத்தல்களை புகுத்துவதும் மலக் குடலில் மிளகாய்களைத் திணிப்பதும் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் வரை தலைகீழாக கட்டித் தூக்குவதும் இம்முகாமில் நடைபெறும் சித்திரவதைகள் என விளக்கினார். கடைசியாக இவ்வழக்கறிஞர் இவ்வாறு கூறினார். கைதுசெய்யப்படும் எல்லா இளவயதினரும் சித்திரவதைக்குள்ளாகின்றனர். இவர் கூறிய தெல்லாம் உண்மையென தமிழ் ரைம்ஸ் என்ற பத்திரிகையில் எழுதப்பட்ட ஒரு கட்டுரை உறுதிப்படுத்தியுள்ளது இக்கட்டுரையில் இப்பகுதி பிரஜைகள் குழுத்தலைவரின் பின்வரும் கூற்று பிரசுரிக்கப்பட்டுள்ளது.

'மக்கள் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்படும் ஒரு இரகசிய முகாமுண்டு. மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இரு சித்திரவதை முகாம்கள் இருப்பதாக தன் அறிக்கையில் தெரிவித்துள்ளனர். 'இவைகளில் ஒன்று தமிழ் ஈழ மக்கள் விடுதலை முன்னணியின் கீழ் இயங்கும் மலர் மாழிகை முகாம் மற்றையது அரசின் நாசக்கார நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் பகதியின் கீழ் இயங்கும் ஆகாயப்படை நிலையத்தினுள் அமைந்துள்ள இரம்யகவுள் முகாம் எனவும் இவ்வறிக்கை கூறுகின்றது. இச்சங்கம் பாதுகாப்புப் படைகளின் அட்டூழியம் பற்றிக் குறிப்பிடும்போது இவர்கள் மக்களை அடித்தும் வேறு வகையிலும் துன்புறுத்துகின்றனர் என்றனர். வவுனியா விலுள்ள மற்றைய முகாம்களிலும் பெண்கள் கற்கழிக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் கிடைத்துள்ளன.

முகாம்களிலுள்ள இளம் பெண்கள் அச்சத்துடன் வாழ்வதாகவும் பெற்றோர்கள் இவர்களைப் பற்றி தடைநீக்கப்பட்ட இரு நாட்களில் 6,000 மக்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தை வந்தடைந்தனர். கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஐந்தாம் நாள் வரை 26,629 பேர் வவுனியா வந்துள்ளனர். இப்படி வருவோர் எல்லோரும் தாண்டிக்குளம் இராணுவ சோதனை நிலையத்தை கடந்தே வந்தனர். இந்நிலையம் யாழ்ப்பாணப் பிரதான பாதையில் வவுனியாவுக்கு வடக்கே 4 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.: வவுனியா வருபவர்கள் எங்கிருந்து வருகின்றார்கள் என்ற அடிப்படையிலேயே இங்குள்ள அகதிகள் சேம நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றார்கள். யாழ்ப்பான வாசிகள் வேப்பங்குளத்திலுள்ள சேமநிலையத்திற்கு அனுப்பப்படுதல் இதற்கான உதாரணமாகும்.

இவர்கள் பற்றி தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்.
'தாண்டிக்குளம் வந்து சேருவோரில் அதிகமானோர் ஓர் குறுகிய காலத்தினுள் பல இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றவர்கள். முதலில் யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்கும் பின்பு இங்கிருந்து கிளிநொச்சி ஓமந்தை தாண்டிக்குளம் ஆகிய இடங்களுக்கும் நகர்ந்தவர்கள் இவர்கள் தாண்டிக்குளத்திற்கு வரும் போது உடல்தளர்ச்சியடைந்து மனச்சோர்வுமுற்று இனிமேல் தங்களுக்கு என்ன நடக்குமோ என்ற மன ஆதங்கத்துடன் வந்து சேருபவர்கள்.

தாண்டிக்குள நிலையத்தில் சோதனை செய்யப்பட்டவர்கள் இரு பிரிவாக பிரிக் கப்படுகிறார்கள். குடும்பங்கள் வேப்ப ங்குளத்திலுள்ள குடும்ப முகாம்களுக்கும் இளம் வயதினர் இவர்களுக்காக ஒதுக்கப்பட்ட முகாம்களுக்கும் செல்லுமாறு பணிக்கப்படு கின்றனர். அகதிச்சபை பிரதிநிதிக்குழு இளம் வயதினர் தங்கியிருக்கும் முகாம்களில் நிலவும் நிலைபற்றியே கவலைதரும் தகவல்களைப் பெற்றுள்ளது.

## 4.2 சித்திரவதைகள் பற்றிய குற்றச் சாட்டுக்கள்.

வேப்பங்குளத்திலுள்ள முகாம்கள் பற்றிய பிரதான கவலை தாண்டிக்குளம் சோதனை நிலையத்தில் நடைபெறும் சித்திரவதைகள் காணாமற்போனோர் சம்பந்தமான குற்றச்சாட்டுக்களினால் ஏற்பட்டதேயாகும். இச்சோதனை நிலையத்தில் சோதனைகள் தொடங்கும்போதே 15- 30 வயதுடையோர் பிரித்து வைக்கப்படுகின்றனர். இப்படிக் பிரித்துவைக்க ப்பட்டவர்கள் பின்பு கடுமையாகச சோதிக்கப்படுகின்றார்கள். விடுதலைப் புலிகள் தம் பிடியிலிருக்கும் பிரதேசத்திலிருந்து குடும்பங்களை வெளியேறிவிடும்போது தம் போராளியொருவரையும் கூட்டிசெல்லுமாறு பணிப்பதாக பாதுகாப்புப் படையினர் சந்தேகிக்கின்றனர். இளம் வயதினர் கடுமையாகச் சோதிக்கப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாக நம்பப்படுகின்றது. அகதிச்சபை பிரதிநிதிகள் வவுனியா சென்றிருந்தபோது அவர்களிடம் இப்பகுதி மூத்த அரசு உத்தியோகத்தர்கள் சோதனை நிலைய முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்களில் 60 பேர் காணாமற் போனதிற்கு யார் பொறுப்பெனக்கண்டுபிடியாததையிட்டு பெரும் கவலை தெரிவித்தனர்.

காணாமற்போனவர் பற்றி அரசு உத்தியோகத்தர் அச்சம் கொள்வதில் நியாயமுண்டென வவுனியா சென்றிருந்த ஒரு மேற்கத்திய இராஜதந்திரியொருவர் அங்கிருக்கும்போது உறுதிப்படுத்தினார். மேலும் அவர் முகாம்களிலிருப்பவர்கள் சட்ட விரோதமாகச் கைதுசெய்யப்பட்டவர்கள் இவர்கள் கைது பற்றி எவ்வித தகவலும் தரப்படாமலேயே கவலை கொண்டுள்ளதாகவும் ஒரு மேற்கத்திய இராஜதந்திரி சொல்லியுள்ளார். இதுபற்றிக் குறிப்பிடும்போது இவர் இவ்வாறு கூறியுள்ளார்.

'பூந்தோட்ட சேமநிலையத்திலிருந்து 17 வயது இளம் பெண் காவற்படையினரால் (பொலிசினால்) கூட்டாகக் கற்பழிக்கப்பட்டதாக மக்களுக்குத் தெரியும். இதுபற்றி நாங்கள் அரசு மாவட்ட அதிபரிடம் வினவியபோது அவர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

## 4.3 பயமின்றி அடாத செயல்களில் ஈடுபடுகின்றனர்.

மனித உரிமை மீறற் செயல்களில் ஈடுபடும் குழுக்களிலொன்று தமிழ் ஈழ மக்கள் விடுதலை முன்னணி என (புலொட்) நம்பப்படுகின்றது. 'தீவிரவாத தமிழ்க்குழு' என்று மனித உரிமைகளுக்கான யாழ்ப்ல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தால் விபரிக்கப்படும் புலொட் இலங்கை ஆயுதப்படைகளுடன் 1990 ஆம் ஆண்டிலிருந்து மிக அன்யோன்னியமாக இணைந்து செயற்படுகின்றது. வவுனியாவில் இயங்கும் புளொட் உறுப்பினர் பலர் மாலைதீவில் 1988 இல் நடந்த அரசை கவிழ்க்கும் சதி முயற்சியில் ஈடுபட்டதற்காக இந்திய அரசினால் சிறைத்தண்டனை பெற்றவர்கள்

இர்களில் இரு வேண்டத்தகாத பேர்வளிகள் (நபர்கள்) மாணிக்கதாசனும் அலவங்குதாசனுமாவார். இவர்கள்தான் பல கொலைகளுக்கு பொறுப்பென பரவலாக நம்பப்படுகின்றது. உள்ளூர் பிரஜைகள் குழுத்தலைவர் புளொட் குழு பற்றி இவ்வாறு கூறுகிறார்.

'இவர்கள் (புளாட்) மக்களிடமிருந்து பணம் பறிக்கின்றார்கள். எவரையும் கொலை செய்துவிட்டும் இவர்களால் தப்பிக்கொள்ள முடியும்.

பாதுகாப்புப் படைகளுடன் இணைந்து இயங்கும் மற்றுமொரு தமிழ்க்குழுக்குழு டெலோ என்று அழைக்கப்படும் தமிழ் ஈழ விடுதலை முன்னணியாகும். இக்குழுவும்மனித உரிமை மீறல் செயல்களில் ஈடுபடுகின்றது. இவ்விரு தமிழ்க்குழுக்கள் பற்றி சர்வதேச மன்னிப்புச்சபை அதன் 1996ஆம் ஆண்டு டிசம்பர் அறிக்கையிலி இவ்வாறு கூறியுள்ளது. 'அரச படைகளின் கட்டுப்பாட்டில் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள பகுதிகளில் தன்னிச்சையாக பலர் கைதுசெய்யப்படுதல் பற்றியும் மக்கள் சித்திரவதை செய்யப்படுவது சம்பந்தமாகவும் சட்டவிரோதக் கொலைகளையொட்டியும் அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இவைகளுள் அநேகமானவை பாதுகாப்புப் படைகளுடன் இணைந்து செயல்ப்படும் ஊர்க்காவல் படையினராலும் புளொட் ரொலோ ஆகிய இயக்கங்களின் உறுப்பினராலும் செய்யப்பட்ட தாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இதுபோலவே இச்சம்பவங்கள் பற்றி மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் பின்வருமாறு வலியுறுத்திக் கூறியுள்ளது. வவுனியா நகரில் ராணுவத்தினருடன் இணைந்து இயங்கும் புலொட் ரொலோ என்ற தமிழ்க் குழுக்கள் இங்குள்ள மனித உரிமைகளுக்காக உழைப்பவர்களைத் துன்பு றுத்துவதிலும் ஊழல்களிலும் ஈடுபட்டுள்ளனர். மேலும் இவர்கள் கொலைகளையும் செய்வதாக சந்தேகிக்கப்பட்டள்ளனர். ' சென்ற ஆண்டு செப்டெம்பர் திங்களில் வவுனியா நகரின் பிரதான சந்தைக்கருகாமையில் பல குண்டுக்காயங்களுடன் ஒரு உடல் கண்டெடுக்கப்பட்டது . இதைத் தொடர்ந்து திருகோணமலையைச் சேர்ந்த இரு முஸ்லீம்களின் சடலங்களும் ஒரு தமிழரின் சடலமும் மன்னார் பிரதானபாதையில் கிடந்த ஒரு வாகனத்தில் இதே மாதம் கண்டெடுக்கப்பட்டன.கைகளும் கால்களும் கட்டப்பட்ட இவர்களது உடல்களின் தலைகளில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன. சென்ற ஆண்டு மிகவும் பகிரங்கப்படுத்தப்பட்ட நிகழ்வு கொழும்பில் புடவை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஒரு பிரபலவ-யாபாரி சுப்பிரமணியம் சம்பந்தப்பட்டதாகும். விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பெயரில் இவர் கொழும்பில் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். பின்பு இவர் வவுனியாவிற்கு கொண்டுவரப்பட்டார். இங்கே நான்கு மாதங்கள் சிறையில் இருந்தபின் அடிப்படை உரிமைக-ளின் கீழ் தாக்கல் செய்த மனு ஏற்கப்பட்டதால் விடுதலை செய்யப்பட்டார். விடுதலைக்குப் பின் தனது அடையாள அட்டையைப் பெறுவதற்காக வவுனியாவில் இயங்கும் நாசகாரச் செயல்களைக் கட்டுப்படுத்தும் பாதுகாப்புப் படைப்பிரிவுக்குச் சென்ற இவர் திரும்பிவரவேயில்லை. மூன்று நாட்களுக்குப் பின்பு இவரது பிணமென நம்பப்படும் கருகிய உடல் ஒன்று இவர் காணாமல் போன பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்டது இச்சம்பவம் பற்றி மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இவ்வாறு கூறியுள்ளது.

பொது அபிப்பிராயங்கள் பற்றி ஒருவித அக்கறையுமின்றி செய்யப்பட்ட இக்குற்றம் வவுனியாப்பிராந்தி யத்தில் இன்றுள்ள நிலைமையைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. இவ்வகைக் குற்றச் சம்பவங்கள் தற்போது நடைமுறையில் இருக்கும் முறையினுள் எவ்வளவு ஆழமாகப் பதிந்துள்ளன என்பதையும் பிரதிபலிக்கின்றது.
புளொட் இயக்கத் தலைவர் திரு ச. சிர்த்தார்த்தன் அவர்களை அகதிச்சபை பிரதிநிதிகள் சந்தித்தபோது இவ்வியக்கத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் உண்மையா என அவரிடம் கேட்டபோது இவ்வாறு பதிலளித்தார். புளொட் உறுப்பினர்கள் ஆயுதமேந்தி நடமாடுவதாலேயே மக்கள் இவ்விதம் குறைகூறுகின்றார்கள். மேலும் ராணுவ ஒற்றர்கள் பலர் எம்முள் ஊடுருவியுள்ளனர்.

தொடர்ந்து கூறிய அவர் தம் இளம் உறுப்பினர்கள் கெட்டநிமித்தங்கள் உள்ளவர்க ளௌன்ற கருத்துப்பட பையன்கள் பையன்களாகத் தானே இருப்பார்கள் என முடித்தார்.

சர்வதேச மன்னிப்புச்சபை கூறியதுபோன்று புளொட் ரெலொ ஆகிய இயக்கங்களின் உறுப்பினர்கள் சில பகதிகளில் தங்குதடையின்றி தன் இச்சைப்படி இயங்குவது புலனாகின்றது. வவுனியாப் பிராந்தியத்தில் நடைபெறும் குற்றச் செயல்களைப் புரிவோர் சித்திரவதைகளைச் செய்கின்றர்கள் என்ற சந்தியக்கடதாசிகளை அகதிச்சபைப் பிரதிநிதிக்குழு படித்துள்ளது. இவைகளில் அடங்கிய சாட்சியங்கள் இச்செயல்களைப் புரிபவர்களுக்கெதிரான நடவடிக்கை எடுக்கப்போதாதென

தெரிவிக்கப்பட்டது. அரசு பாராளுமன்றத்திலுள்ள தனது பெரும்பான்மையை நிலைநிறுத்த புளொட் பாராளுமன்ற உறுப்பினர் தயவை நம்பியிருப்பதாலேயே தாமே ஆயுதங்களை வழங்கிய இயக்கத்தவர்கள் செய்யும் அடாவடித்தனங்களை மூடி மறைக்கப்படுகின்றன. என்றதோர் அச்சம் இங்கு நிலவுகிறது.

சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் முடிவு நாள் வரை 26,000 அகதிகள் வவுனியா வந்தடைந்தனர். இவர்களுள் மிகச் சிலரே கொழும்புக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். இம்மாவட்ட அரச அதிபர் தரும் தகவல்கள் மூலம் 96 டிசம்பர் மாதம் 5ஆம் நாள் வரை 644 பேர்களே கொழும்பு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்களெனத் தெரிகிறது. வவுனியா வந்தவர்களில் 6,000 பேருக்கும் அதிகமானோர் திருகோணமலையிலுள்ள ஓர் புதிய அகதி முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்திற்கு திருப்பி அனுப்பப்படும்வரை இவர்கள் இம்முகாமிலேயே தங்கியிருக்க வேண்டும். யாழ்ப்பாணத்திற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நடாத்தும் கப்பற்சேவை மூலமே செல்லமுடியும். வாரத்திற்கொருமுறை நடைபெறும் இச்சேவையின் ஊடாக ஒரே தடவையில் 200 பேர் மாத்திரமே போக முடியும். எனவே அனேகமானோர் மாதக்கணக்காக திருகோணமலையிலுள்ள அகதி முகாம்களில் கிடந்து வாடவேண்டியதோர் நிலைக்குள்ளாக்கப்பட்டள்ளனர்.

போர்ப்பிரதேசமொன்றிலிருந்து ஓடிவந்த அனேக அகதிகள் ஓர் புதிய நகரப் பிரதேசத்தினுள் பிரவேசித்துள்ளதாகவே கருதுகின்றனர். இங்கே இவர்கள் கண்மூடித்தனமான கைதுகள் கைதுசெய்து தடுத்துவைத்தல் சித்திரவதைகள் போன்ற ஆக்கினை-களை நாள்தோறும் எதிர்நோக்கவேண்டியிருக்கின்றது. அகதிச்சபைத் தூதுக்குழுவவுனியா சென்றிருந்த போது சந்தித்த 64 வயது பெண்மணியின் உண்மைக்கதை இங்கு நடைபெறும் மனிதாபிமானமற்ற செயல்களைப் பிரதிபலிக்கின்றது. இவர் வேப்பங்குளம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார். இவரது கணவரோ கொழும்பிலுள்ள ஆசுபத்திரி ஒன்றில் மரணப்படுக்கையிலிருக்கின்றார். இப்படியான ஓர் இக்கட்டான நிலையிலும் கூட இவருக்கு கொழும்பு செல்ல அனுமதிவழங்கப்படவில்லை.

வவுனியா முகாம்களிலிருந்து கொழும்புக்கு போக அனுமதி பெற்றவர்கள் கூட ஓர் பயங்கர சூழ்நிலையே அங்கும் காண்கின்றார்கள். மேலுமொரு போர்ப்பிரதேசத்திற்கு செல்லும் இவர்கள் தமிழர்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக சந்தேகத்துள்ளாவது மட்டுமின்றி அடிப்படை மனித உரிமைகள் மீறற் செயல்களுக்கும் ஆளாகின்றனர்.

## 5 கொழும்பு மாநகர வாழ்க்கை

***'மனித உரிமைகள் சம்பந்தமாக இதுவரை அரசு சாதித்தமை நிலைநாட்டப்பட்டதுமல்லாமல் காவற்துறையினர் பாதுகாப்புப்படையினர் ஆகியோர் தனிப்பட்டவர்களை நடத்தும் முறையிலும் முன்னேற்றமேற்பட்டுள்ளது. இடையிடையே கொழும்பிலுள்ள இளம் தமிழ் ஆண்கள் பாதுகாப்புப்படையினரால் தடுத்து வைக்கப்படுவது உண்மையே. எனினும் இது இவர்களை அடையாளம் காண்பதற்காகவே ஏறக்குறைய எப்போதும் நடக்கிறது மேலும் இப்படித் தடுத்துவைக்கப்படுபவர்களில் அனேகமானோர் அதிகாரிகளால் நியாயமான முறையிலும் மனிதாபிமானத்துடனே நடத்தப்படுகின்றார்கள்.'***

## 5.1 சந்தேகத்தினால் பாதிக்கப்படுபவர்கள்

அகதிச்சபை பிரதிநிதிக்குழு ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினரைப் பேட்டி கண்டபோது அவர் சொன்ன கதை இலங்கையின் தலைநகரில் வாழும் தமிழர்கள் எதிர்நோக்கும் சூழ்நிலையை பிரதி-பலிக்கின்றது. இவர் தமிழர்கள் நாள்தோறும் அனுபவிக்கும் வீதிச் சோதனைகள் அயல்வாசிகளின் தகவலின் அடிப்படையில் காரணமின்றி தடுப்புக்காவலில் வைக்கப்படுவது போன்ற இன்னல்களை விபரித்துக் கூறினார். விசேடமாக இவர் ஒரு தமிழ் காப்புறுதி இலிகிதருக்கு நடந்தது பற்றி விளக்கினார் . இவ்லிகிதருக்கு இவருடைய திறமையான சேவைகளுக்காக ஜனாதிபதி பதக்கம் வழங்கப்பட்டது பதக்கங்கள் வழங்குவதற்காக நடாத்தப்பட்ட விழாவில் கலந்துகொண்டு தன் பதக்கத்தை பெற இவர் செல்லும்போது கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். அடுத்த ஆண்டும் இவருக்கு இதே கதி நேர்ந்தது. இவர் அரசினால் சம்பிரதாயப்படி எழுத்து மூலம் கௌரவிக்கப்பட்டாலும் கொழும்பிலுள்ள வீதிகளில் நடமாடும் தமிழினத்தைச் சேர்ந்த ஒருவரென்ற முறையில் சந்தேகத்துக் குள்ளானார். 1990ஆம் ஆண்டு தொடக்கம் வடக்கிலிருந்து ஓடிய மக்களில் 15,000 தமிழர்கள் கொழும்பு வந்தடைந்துள்ளனர். ஏற்கனவே கொழும்பில் வாழும் 3,50000 தமிழருடன் இவர்களும் சேர்ந்துள்ளனர். இதனால் இங்கு வாழும் மக்கள் தொகையும் 25 விதிதத்தினர் தமிழர்களாகக் கணிக்கப்பட் டுள்ளனர். இது

பாதுகாப்புப் படையினருக்கும் ஒரு தலையிடியை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் இத்தமிழர்களுடன் தமிழ்ப்புலிப்படையின் குண்டுகளை வெடிக்கவைக்கும் தற்கொலை ப்பிரிவு உறுப்பினர்களும் சேர்ந்து வாழ்கின்றார்கள் என இவர்கள் எண்ணு கின்றார்கள். இது தற்கொலைப்பிரிவினர் செயல்ப்பட வடக்கிலுள்ள தம் தலைவர்களிடம் இருந்து ஏற்கனவே ஒழுங்கு செய்வதற்கேற்ப சமிக்கைகளை எதிர்பார்த்திருக்கின்றனர் என்பது பாதுகாப்புப் படையினரின் கணிப்பும் அச்சமும். இதேவிதமான அச்சம் நடுநிலை ஆய்வாளர் மத்தியிலும் நிலவுகின்றது. இவர்களும் தமிழ்ப்புலிப்படையினர் தலைநகருக்குள் ஊடுருவியிருக்கின்றனர் என நம்புகின்றனர்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதி பிரேமதாஸ படுகொலை செய்யப்பட்டதும் கொழும்பு மத்தியவங்கித் தகர்ப்பும் தமிழ்ப்புலிகளால் தங்கள் போரை தலைநகர் வரை விஸ்தரிக்கமுடியும் என்பதற்கு தகுந்த உதாரணங்களாகும். சிங்களவர்களின் ஆதிக்கத்திலுள்ள பத்திரிகைச் செய்திகளும் தமிழர்கள் மீது கொண்டுள்ள சந்தேகத்தை மிகைப்படுத்துகின்றன. அகதிச்சபை பிர–திநிதிக்குழு கொழும்பு செல்வதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு அரசு மூலம் விடப்பட்ட ஒரு கடிதம் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்டது. இதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. 'சென்ற மூன்று ஆண்டுகளாக கொழும்பிற்கும் சுற்றுப்புறங்க ளுக்கும் வந்து வசிக்கும் தமிழர்களில் கணிசமான எண்ணிக்கையினர் தமிழ்ஈழ விடுதலைப் புலிகளுக்கு தகவல் கொடுப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து 1993ஆம் ஆண்டு தொடக்கம் கொழும்பிற்கு வந்து நிரந்தரக் குடித்தனம் நடத்துபவர்களில் 50 வீதமானோர் விடுதலைப்புலிகளினால் அனுப்பப்பட்டுள்ளனர். சுவிற்கலாந்தில் 1994ஆம் ஆண்டு இலங்கையின் மனித உரிமை மீறல்களை அங்கிருந்து தஞ்சம்கோரி நிராகரிக்கப்பட்டோர் திருப்பி அனுப்பப்பட்டால் அவர்களுக்கான பாதுகாப்பு ஆகியவை பற்றி விசாரிக்க சுவிஸ்நாட்டு அகதிகளுக்கு உதவி வழங்கும் தாபனத்தினால் ஓர் பிரதிநிதிகள் குழு கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டது . இக்குழுவின் அவதானம் இதுவாகும். எல்லாத் தமிழருக்கும் அபாயம் உண்டு. அவர்கள் சமுதாய பொருளாதார அந்தஸ்து கூட இவ்வபாயத்தை தடுக்க முடியாது. இதற்கு ஓர் ஆண்டிற்குப் பின்பு வெளியான ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்தானீகர் காரியாலயம் இவ்வாறு கூறியது. காவல் துறையினரின் தமிழ்ப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் எப்போதும் குறிக்கோளை அடைய நடைபெறாததால் பல நிரபராதி மக்கள் தேடுதலின் போது கைதுசெய்யப்பட்டோ அல்லது வேறு விதங்களிலோ பாதிக்கப்பட்டு அசௌகரியத்திற்கு உள்ளாகின்றார்கள்.

ஐக்கிய அமெரிக்காவிலிருந்து 20 ஆண்டுகளுக்குப் பின்பு நாடு திரும்பிய பேராசிரியர் எஸ் இரத்தினஜீவனின் அனுபவம் இந்த சந்தேக சூழ்நிலை தொடர்கின்றது என்பதை உறுதிப்படுத்துகின்றது. இவர் தமிழ் ரைம்ஸ் பத்திரிகைக்கு எழுதும்போது தனது சகோதரியும் அவரது கணவரும் பஸ்நிலையத்தில் எவ்வாறு காவற்படைச் சோதனையின்போது அகப்பட்டு அவஸ்தைப்பட்டார் என்பதை பின்வருமாறு விளக்குகின்றார் என்னுடைய சகோதரியின் முழங்கையில் பழையகாயத்தின் தழும்பொன்றைக் கண்ட பொலிசார் அவர் தமிழ் ஈழ விடுதலைப்புலிப்படையில் பயிற்சி பெற்றதாக குற்றம் சாட்டி வேறுபல தழும்புகள் உள்ளனவா என்று தேடுவதாகவும் தமது சகாக்கள் கூடியுள்ள கூட்டத்தின் முன்னிலையில் எனது சகோதரியை பாவாடையை முழங்காலுக்குமேல் தூக்குமாறு கட்டளையிட்டார். மூன்று நாட்களுக்குப் பின்பு தான் பேராசிரியருக்கு இவரது சகோதரியும் அவரது கணவரும் எப்படிக் கைதுசெய்ய ப்பட்டார்கள் என்பது தெரியவந்தது.சிறைச்சாலை ஊழியர் ஒருவரின் அநாமதேய தொலைபேசிச் செய்தியே இதற்குக் காரணமாய் இருந்தது. பேராசிரியருக்கு அரசு மட்டத் தொடர்பிருந்ததால் கைதுசெய்யப்பட்ட சகோதரியையும் கணவரையும் விரைவில் விடுவிக்க முடிந்தது. எனினும் இவர்களைக் கைதுசெய்த பொலிஸ்காரர்கள் பற்றிய புகார் ஒன்று பதிவுசெய்ய இவர் எடுத்த முயற்சி புறக்கணிக்கப்பட்டது. பேராசிரியர் தனது உறவினரை விடுவிக்க நீதிமன்றத்தில் விசாரணை நடந்தபோது தான் அவதானித்த இரு சம்பவங்கள் பற்றி இவ்வாறு கூறுகின்றார்.இவ்விரு சம்பவங்களும் நாட்டில் நடப்பவைகளை பற்றி ஒட்டுமொத்தமாக எனக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றன. ஒரு மூத்த பொலிஸ் உத்தியோகத்தர் பலர் காணாமற் போன குற்றச்சாட்டுகளுடன் நீதி மன்றத்தில் பிரசன்னமாயிருந்தார். இவர் இப்படி குற்றஞ்சாட்டப்பட்டதாலேயே இவருக்கு விடுதலை கிடைக்கும்போல் தெரிந்தது. ஏனெனில் இவர் வழக்கமாக குற்றவாளிகள் நிற்கவேண்டிய கூண்டில் நிறுத்தப்படவில்லை இதற்கு மாறாக கோட்டும் ரையுமான முழு உடையுடன் கம்பீரமாக திருப்தியான முகத்துடன் நின்றதைப் பார்க்கப் பயங்கரமானதாயிருந்தது. 'எனது பழைய இந்து நண்பர் ஒருவர் களவுபோன தங்கச் சங்கிலி வழக்கில் சாட்சியம்

அளிப்பதற்காக வந்திருந்தார். அவருக்கு அங்கே நடந்ததுபற்றி ஒன்றுமே தெரியவில்லை. ஏனெனில் எல்லாம் சிங்களத்திலேயே நடந்தது. இந்த வழக்கு கூப்பிட்டு பல நிமிடங்களுக்குப் பின்பே இது பின்போடப்பட்டுள்ளதென்றும் தான் தொடர்ந்தும் அங்கிருக்கவேண்டிய அவசியமில்லை என்பதும் அவருக்குத் தெரிந்தது இச் சம்பவம் தமிழர்களுக்கு போதிய உரிமைகள் தரப்படுமென்று கூறப்பட்டபோதிலும் இவர்கள் மனிதர்களாகக் கருதப்படுவதில்லை என்பதை எடுத்தக் காட்டுகிறது.

பேராசிரியர் கடைசியாக இப்படிக் கூறி முடிக்கின்றார். 'தமிழர்கள் காவற்துறையினரின் (பொலிஸ்) துன்பு றுத்தல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்பவர்களுக்கு சமூக அரசியற் தொடர்புகளோ அல்லது கொடுக்கப்பட்ட பணமோ தேவை. இவை இல்லாவிடின் இவர்கள் துன்பக்கடலில் நீச்சலடிக்க வேண்டியதுதான். எங்களைப் பொறுத்தமட்டில் நாட்டைவிட்டு வெளியேறும்போது கனம் குறைந்தவர்களாகவே போகிறோம்.

அகதிக்குழு பிரதிநிதிகள் கொழும்பில் நடத்திய வேறு உரையாடல்கள் மூலம் தமிழர்களை எப்போதும் பாதுகாப்பப் படையினர் கண்காணித்தவண்ணம் இருக்கின்றார்கள் என்றும் தெரியவந்தது. ஒரு தமிழன் என்பதற்காகவே தான்கேள்விக்கணைகளுக்கும் சோதனைகளுக்கும் ஆளாவதாக ஒரு உதவி வழங்கும் ஊழியர் கூறியது இதற்குத்தகுந்ததோர் எடுத்ததுக்காட்டாகும். தமிழர்கள் நிலைபற்றி கொழும்பிலுள்ள ஓர் மேற்கத்திய இராஜதந்திரி இதை உறுதிப்படுத்துகையில் அதிகமான பயங்கரவாத செயல்கள் தமிழர்கள் செய்வதினாலேயே இவ்வாறு தமிழர்கள் வேறுபடுத்தப்பட்டு இவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவென சொன்னார்.

சர்வதேச மன்னிப்புச்சபையும் ஆமோதித்துள்ளது சென்ற ஆண்டு இதுபற்றி சபை தன் அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

'தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் செய்கின்றார்கள் என கூறப்படும் நிகழ்வுகளுக்குப் பின்பு குறிப்பாக தலைநகரில் கைது செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகமாகிறது. இளம் தமிழ் ஆண்களும் பெண்களுமே இப்படிக் கைதாகக் கூடிய பெருவாய்ப்புண்டு. விசேடமாக அண்மையில் வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து இங்கு வந்தவர்களே இப்பாதிப்புக்குள்ளாகின்றனர். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அடையாள அட்டைகள் உள்ள தமிழர்களே இப்படியாக அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

## 5.2 வழக்கமாக நடைபெறும் தடுப்புக் காவல்கள்

பாதுகாப்புப் படையினர் அச்சம் கொள்வது விளங்கிக்கொள்ளக்கூடிய ஒரு விடயமாகும். இதேநேரத்தில் மனித உரிமைகள் பற்றிய அரசின் அக்கறை குறைவது கவலையளிக்கின்றது. 1995 ஆம் ஆண்டு 600 தமிழர்கள் சட்டவிரோதமாக கொழும்பிலுள்ள சிறைச்சாலைகளிலும் காவற்துறை நிலையங்களிலும் வைக்கப்பட்டிருப்பதாக மனித உரிமைகளுக்கான தாபனங்களின் அறிக்கைகள் தொ-விக்கின்றன. இவர்கள் வைக்கப்பட்டிருக்கு மிடங்கள் சனநெருக்கடி உள்ளவைகளென்றும் சுகாதாரமற்றவை என்றும் இவ்வறிக்கைகள் மேலும் கூறுகின்றன. இன்னும் 800க்கும் அதிகமான தமிழர்கள் கொழும்பிற்கு வெளியிலுள்ள மகசீன் களுத்துறை ஆகிய சிறைச்சாலைகளில் கடந்த நான்கு ஆண்டுகளாக தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் என கணிக்கப்பட்டுள்ளது. ஒரு ஆண்டிற்குப் பின்பும் 'தமிழர்கள் காலவரை இன்றி தடுத்து காவலில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் அவர்களின் கூற்றுப்படி 76 இளைஞர்கள் மூன்று மாதங்களுக்கு மேல் காவற்துறையினரால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மனித உரிமைகளுக்காக உழைப்பவரின் கணக்குப்படி ஒவ்வொரு மாதமும் 500-1000 வரையிலான தமிழர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்படுகின்றார்கள் எனக் கூறப்படுகின்றது.

ஒரு வழக்கறிஞர் ஒருவர் தனது வாடிக்கையாளரான மாணவ மாணவி பரீட்சை எழுதுவதற்காக கண்டி சென்றபோது நடந்த கதை ஒன்றைக் கூறினார். இம்மாணவி அவசரகால சட்டவிதிகளுக்கு இணங்க தன்வரவைப் பதிவுசெய்து கொள்வதற்காக காவல் நிலையம் சென்ற போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். இதன் காரணமாக தொடர்ந்து இரண்டரை மாதங்களுக்கு காவல் நிலைய அறைகளுக்கான நடைபாதையில் இவர் படுத்து உறங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானார். வெளியேற முடியாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவருக்கு இடையிடையே மூங்கிற் கம்பினால் அடியும் விழுந்தது. தமிழ் மாத்திரம் தெரிந்த இவரிடமிருந்து காவல்துறையினர் தாம் எடுத்த நடவடிக்கைகளிலிருந்து

தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு சிங்களத்தில் ஓர் வாக்குமூலத்தை பலவந்தமாகப் பெற்றனர். கடைசியாக இவருக்கு பிணை வேண்டுமெனில், உயர்நீதிமன்றத்தில் மனித உரிமைகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இவரது மனு திருப்பிப்பெறப்படவேண்டுமென இவரிடம் கூறப்பட்டது.

இதே மாதிரியான நிகழ்வு 1995ஆம் ஆண்டு யூலை மாதத்திலும் நடந்தது. வி. சச்சிதானந்தன் என அழைக்கப்படும் கொழும்பு வாசியான ஒரு வங்கி ஊழியர் காரணமின்றி கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். இவர் சிங்களத்தில் எழுதப்பட்டிருந்த தன் குற்றத்த ஒப்புக்கொள்ளும் ஒரு வாக்குமூலத்தில் கையொப்பமிட மறுத்தார். 1995ஆம் ஆண்டு மார்ச் கைதுசெய்யப்பட்டு தொடர்ந்து தடுப்புக்காவலிலிருந்த இன்னுமொரு தமிழரான கந்தசாமி தியாகராசா தன்னை மகசீன் சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யுமாறு கோரி உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். இவருடைய கூற்றுப்படி தன்னை விடுவிக்கக்கோரி முறையீட்டு நீதிமன்றத்தில் ஓர்கருணை மனு தாக்கல் செய்யப்பட்டபின்பு தான் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதை நியாயப்படுத்தும் முகமாக ஓர் ஒப்புதல் வாக்குமூலம் பலவந்தமாக இவரிடமிருந்து பெறப்பட்டதாகும். இவ்வகையான நிகழ்ச்சிகள் கொழும்பில் மாத்திரம் நடைபெறுவதில்லை வேறுபல தென்புலப்பகுதிகளிலும் மலைநாட்டிலும் கைதுசெய்யப்பட்ட தமிழர்களும் சிறைச்சாலை களிலும் காவல்நிவையங்களிலும் விசாரணையின்றி வருடக் கணக்காக வாடுகின்றார்கள்.

## 5.3 தகாதசெயல்கள் தொடர்கின்றன.

வாடிவதங்கிய உருக்குலைந்த இளவயது தமிழர்களின் சடலங்கள் 1995ஆம் ஆண்டு யூன் மாதம் கொழும்பிற்கு தெற்கே காணப்படும் வொல்கொடை ஏரியில் மிதக்கத்தொடங்கின. இதன் பின்பு பல வாரங்களாக வேறு பல சடலங்கள் மர்மமான முறையில் தலைநகருக்கு அருகாமையிலுள்ள ஆறுகளிலும் பாலங்களிலும் தென்பட்டன. இப்படிக் காணப்பட்ட 31 சடலங்களுக்குரியவர்களில் அனேகர் கழுத்த நெரிக்கப்பட்டோ அல்லது நீரில் மூழ்கியோ இறந்தவர்களாவர். ஆண் பெண் இருபாலாரின் தலைமொட்டையடிக்கப்பட்டிருந்தது. இவர்களில் பெரும்பாலானோர் கொழும்பிலுள்ள பொலிஸ் அதிரடிப்டை தலைமை நிலையத்திலேயே கொலைசெய்யப்பட்டார்கள் இப்படையினால் கைதுசெய்யப்பட்ட ஒரு மாணவன் எப்படியோ தப்பிவிட்டார். இது அவருடைய நல்லகாலம் என்றே சொல்லவேண்டும். இவர் தடுப்புக் காவலில் வைக்கப்படுமுன்பு காவற்துறையினரால் ஓர் புகையிரத நிலையத்தின் முன்பு பிடிக்கப்பட்டவர். இதன் பின்பு தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது இவருடைய தலைமயிர் வழிக்கப்பட்டு கண்கள் கட்டப்பட்டு நிர்வாணமாக விடப்பட்டிருந்தார். இவருடன் இதேநிலையில் இன்னும் மூன்று இளம் தமிழர்களும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். இவர் தப்பியோடியதால் மற்றவர்களுக்கு நடந்த சித்திரவதையை இவர்அனுபவிக்கவில்லை.

இலங்கை உயர்நீதிமன்ற நீதவான் திரு பீ இராமநாதன் அவர்கள் சென்ற வருடம் நவம்பர் மாதம் இவ்வாறு கூறினார். 'சட்டத்தை அமுலாக்கும் உத்தியோகத்தர்கள் செய்யும் சித்திரவதைகள் மனிதாபிமானமற்ற மற்றைய செயல்கள் ஆகியவை பற்றி நீதிமன்றத்தில் நீதவான்கள் பல தடவை கண்டனம் தெரிவித்துள்ளனர். இருந்தும் காவல் நிலையங்களில் சித்திரவதைகள் தங்குதடையின்றித் தொடர்கின்றன. இப்படி நடப்பதாக அகதிச்சபை பிரதிகள் குழு கொழும்பில் சந்தித்த வேறு பலரும் உறுதிப்படுத்தினர். இவ்விடயமாக மேற்கத்தைய உயர்நிலை இராஜதந்திரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் கைதாகும் ஒவ்வொருவரும் கடுமையாகவே நடத்தப்படுகின்றார்கள் என்பதை ஏற்றுக்கொண்டார். சுவிஸ் அகதிகளுக்கு உதவி வழங்கும் தாபனம் விடுத்த தன் அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

'பாதுகாப்பு படையினர் கைதாகித் தடுப்புக் காவலில் வைப்பவருக்கென்ற பல இடங்களை நிர்மானித்துள்ளனர். இவ்விடயங்களில் கையாளப்படும் முறைகளை தேசிய அல்லது சர்வதேச தாபனங்களால் கண்காணிக்கமுடியாது மேலும் தடுத்து வைக்கப்படுபவர்களுக்கு ஒரு பாதுகாப்பும் கிடையாது. உயிரோடு இருக்கும் கைதிகள் இவ்விடயங்களில் எல்லாம் சித்திரவதைகள் சர்வசாதாரணமென்று சொன்னார்கள். இப்படியான இரகசிய தடுப்பு நிலையங்கள்இப்போதும் இருக்கின்றன என்பது பற்றித் தெரியாது. எனினும் சித்திரவதை பற்றிய குற்றச்சாட்டுக்கள் தொடர்கின்றன. இவைகளுள் 72 வயதுக்காரர் ஒருவர் சங்கிலியால் தாக்கப்பட்ட குற்றச்சாட்டும் 59 வயதானவர் மகசீன் சிறைச்சாலையிலிருக்கும் போது சிகரட்டக்களினால் சுடப்பட்டு அவரது தலைமயிரும் பிடுங்கப்பட்டு கைவிரல்களும் உடைக்கப்பட்ட சம்பவங்கள் பற்றிய குற்றச்சாட்டும் அடங்குகின்றன..

சென்ற ஆண்டின் மனித உரிமைகள் மீறல்கள் பற்றிக் குறிப்பிடும்போது சர்வதேச மன்னிப்புச்சபை இவ்வாறு கூறுகின்றது.

'மோதல்கள் மீண்டும் ஆரம்பமானதின் பின்பு பாதுகாப்புப்படைகளினால் கைதுசெய்ய ப்படுபவர்கள் சித்திரவதைக்குள்ளாவது மட்டுமல்லாமல் காணாமலும் போகின்றார்கள். கிழக்கிலும் கொழும்பிலும் இப்படிக் காணாமற் போனோர் எண்ணிக்கை 60க்கும் மேலாகும். இச்சம்பவங்கள் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் ஒரு தெளிவான அமைவு முறையில் நடைபெறுகின்றன. என்பதை பிரதிபலிக்கின்றன. இராணுவ கொலை அமைப்புக்கள் திரும்பவும் தலைநகருக்குத் திரும்பியுள்ளதாகப் பலர் அஞ்சுகின்றனர். சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் நாள் மகாதேவா எனும் பெயருடைய இளைப்பாறிய தமிழ்ப் பொறியியலாளர் ஒருவர் வெள்ளை வான் ஒன்றில் அவருடைய பம்பலப்பிட்டி இல்லத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்டார். இவர் என்னானார் என்று எவருக்கும் தெரியாது.

## 5.4 பயமின்மைக் கலாச்சாரம்

மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்ற குற்றசாட்டுக்களிருந்தபோதிலும் இலங்கை அரசு எல்லாப் பிரஜைகளினதும் மனித உரிமைகளை பலப்படுத்தும் கடமை தனக்கு உண்டென எல்லாருமறிய தெளிபுபடுத்தியுள்ளது. அரசின் இந்த மனப்போக்கு உள்த்துறை அலுவலகம் நிராகரிக்கப்பட்ட தஞ்சம்கோருவோருக்கு அனுப்பியுள்ள கடிதங்கள் மூலம் பிரதிபலிக்கின்றது. இக்கடிதங்களில் இலங்கை அரசு மனித உரிமைக் பாதுகாப்புக்காக எடுத்த பல செயற்பாடுகள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. இவை அமைப்பினாலும் பாதுகாப்புப் படையினரிடையே இவ்வுரிமைகள் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டதாலேயுமே முடிந்ததெனவும் இக்கடிதங்களில் கூறப்பட்டுள்ளது.

அரசு மனித உரிமைகளைப்பலப்படுத்த எடுத்த நடவடிக்கைகள் மூலம் தடுப்புக் காவலில் வைப்போர் நடத்தப்பட வேண்டிய முறைகள் பற்றி விளக்கும் அவசரகாலச்சட்ட விதிகளில் இதற்கான பல அம்சங்களைச் சேர்த்துள்ளது. இவை பல காரணங்களுக்காக சர்வதேச மன்னிப்புச்சபையின் கண்டனத்துக்குள்ளா கியுள்ளன. முக்கிய காரணம் பின்வருமாறு–

இப்புதிய அம்சங்கள் மூலம் விசாரணை செய்யும் உத்தியோகத்தர்களுக்கு சித்திரவதைகள் உட்பட பல வழிகளையும் கையாண்டு தகவல் அல்லது ஒப்புதல் எடுக்க உற்சாகமளிக்கப்படுகிறது. இதுபற்றி இன்னுமோர் தாபனம் இவ்வாறு கூறுகின்றது. 'சட்டவிதிகள் தொடர்ச்சியாக மாற்றப்படுவதால் இராணுவக்காவற்துறை நிலையங்கள் ஆகியவற்றில் கடமைபுரிபவர்களுக்கு இவை பற்றி அண்மையில் தரப்பட்ட தீர்ப்புக்கள் தெரிவதில்லை. மேலும் இவர்களின் முற்று முழுதான நோக்கு யாதெனில் சித்திரவதைகள் அநியாயச் செயல்களல்ல என்பதாகும். இவை தமிழ் பயங்கரவாத செயல்களை கட்டுப்படுத்துவதற்கு சட்டபூர்வமான கையாளவேண்டிய முறைகளென்ப இவர்கள் நோக்கமாகும்.

இலங்கை ஜனாதிபதியின் கட்டளைகளின் பிரகாரம் கைதுசெய்யப்படுமொருவர் தனது உறவினர் அல்லது நண்பருடன் தொடர்பு கொண்டு தான் எங்கிருக்கின்றரென்பதை பெற்றோருக்குத் தெரிவிக்க நியாயமான வழிமுறைகள் செய்யப்படவேண்டும்.

ஏற்கனவே மேற் கூறப்பட்ட நிகழ்வுகள் மூலம் இப்படி எப்போதும் நடப்பதில்லை என்பது தெளிவாக–ின்றது. மனித உரிமைகளுக்கான செயற்குழுவினால் சென்ற ஆண்டு ஒக்ரோபர் மாதம் காணாமற்போனரென்று அறிவிக்கப்பட்ட 18 பேர்களில் 6 பேரை தான் கண்டுபிடிக்க முடிந்தது. மேலும் கைதுசெய்யப்பட்ட அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட ஒருவரின் வாக்குமூலம் அவர் விரும்பிய மொழியில் பதியப்பட்டபின்பே அவர் இதில் கையாளப்படுமாறு கேட்கப்படவேண்டும் என்ற கட்டளை புறகன்கணிக்கப்பட்டதென்பதும் மேற்கூறப்பட்ட நிகழ்வுகள் மூலம் தெளிவாகின்றது.

பாதுகாப்புப்படையினரால் புரியப்படும் குற்றச்செயல்களுக்கு ஒருவித கட்டுப்பாடு மில்லை. என்பது பேராசிரியர் இரத்தினஜீவன் அவர்கள் நீதிமன்றத்தில் அவதானித்த மூத்த பொலிசு உத்தியோகத்தர் சம்பந்தப்பட்ட வழக்கு மூலம் இவ்வுத்தியோகத்தருக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் குற்றஞ்சாட்டப்பட்ட மற்றைய உத்தியொகத்தர்களுக்கும் அளிக்கப்ப டுவதகாகவே தென்படுகின்றது. ஜே.வி.பீ கலவரங்களின்போது 1989ஆம் ஆண்டு எம்பிலிப்பிற்றியாவிலுள்ள 35 சிங்களப்பாடசாலை மாணவர்களின் உறவினர் கூற்றுப்படி மாணவர்களது கொலைகளில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டும் எட்டுத்துருப்பினரும் இப்பகுதியிலேயே கடமையாற்றுகின்றார்கள்.

இதேபோன்று 1995ஆம் ஆண்டு கொலையுண்டு பின் கொழும்பிலுள்ள பலவிடயங்களில் மிதந்து கிடந்த சடலங்களுக்குரிய 31 தமிழர்களையும் கொலையில் சம்பந்தப்பட்டவர்களென்று கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட 22 உத்தியொகத்தர்களும் பிணையில் விடப்பட்டு திரும்பவும் கடமையில் ஈடுபட்டுள்ளார்கள் . இவர்களுள் சிலர் யாழ்ப்பாணக்குடா நாட்டில் சேவை செய்வதாக அறிவிக்கப்படுகின்றது.

## 5.5 வந்தவர்கள் திரும்பிச் செல்ல முடியுமா?

அகதிச்சபை 1995ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இங்கு தஞ்சம்கோரிய பல இலங்கையர்களை பேட்டிகண்டபோது இவர்களில் இருவர் தாங்கள் கொழும்பில் சித்திரவதை செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். இதில் 70 வயதான ஒருவர் தான் ஒருவித குற்றமுமின்றி ஆறுவாரங்கள் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ந்து சித்திரவதைக்கு ள்ளாவதாகக் கூறினார். மற்றவர் 19 வயது இளம் பெண். அவர் தனது பெற்றோர்கள் கொலையுண்ட பின் குடியிருந்த முழு ஊருமே நாசமாக்கப்பட்டதால் கொழும்புக்கு ஓடவேண்டிய நிலையேற்பட்டதென விளக்கினார். இங்கே இவர் மூன்று தரம் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டபோது அடித்துத் துன்புறுத்தப்பட்டு சிகரட்டினாலும் சுடப்பட்டார். எனினும் இங்கே அவர் தஞ்சம்கோரிச் செய்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது. கொழும்புக்கு திருப்பி அனுப்பக்கூடிய சாத்தியக்கூறுகளால் மன நிம்மதி இழந்திரு க்கின்றார்.

தஞ்சம் மறுக்கப்பட்டவர்களை கொழும்புக்கு திருப்பி அனுப்பும் விடயம் பற்றி சர்வதேச அரசு சார்பற்ற தாபனங்கள் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் தானீகர் காரியாலயம் ஐரோப்பிய அரசாங்கம் ஆகியவற்றிடையே பல ஆண்டுகளாக ஒரு விவாதம் நடந்துகொண்டே இருக்கின்றது. இலங்கை சென்ற சுவிஸ் நாட்டு அகதி தாபனங்களின் பிரதிநிதிகள் குழு தனது 1994ஆம் ஆண்டு அறிக்கையில் இப்படிக் கூறுகின்றது 'அரசினால் நிறுவப்பட்ட மனித உரிமைகளுக்கான செயற்குழு அகதிகள் திருப்பியனுப்பப்படுவதுக்கு எதிராக கடும் எச்சரிக்கை செய்தது. எங்களிடம் இதற்கான காலம் இன்னும் வரவில்லை என்றும் தெரிவித்தது. ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் தாபனம் யூ என் எச் சீ ஆர் காரியாலயம் 1992 ஆண்டு தென் இந்தியாவில் இருந்து அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு ஒப்புதல் அளித்த பின்பு பல ஐரோப்பிய நாடுகளின் அரசுகள் தஞ்சம் மறுக்கப்பட்ட அனேக அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான முயற்சிகளை ஆரம்பித்தன. இவ் இலங்கையர்களை ஐரோப்பிய நாடுகள் திருப்பியனுப்பினால் அவர்களுக்கு ஆபத்தில்லை என்பது தான் ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் தாபனம் யூ என் எச் சீ ஆர் காரியாலயத்தின் நிலை. இப்படி அனுப்பப்படுபவர்களைப் பல பாதுகாக்க பலநடவடிக்கைகள் வேண்டுமென்றும் இக்காரியாலயம் சுட்டிக்காட்டுகின்றது. இதில் ஒன்று இவர்களைப் பற்றி சட்டப்படி சரியான பத்திரங்கள் வழங்கப்படுவதாகும்.

அகதிகள் பற்றி யூ என் எச் சீ ஆர் , ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் தாபனம் காரியாலயம் கொண்டுள்ள நிலையே பல அகதிச் சமூக தாபனங்கள் முதன் முதலாக அகதிச் சபையிடம் எதிர்ப்பும் கவலையும் தெரிவிக்கச் செய்தது. கிளமன்ட் அருளானந்தன் என்ற தமிழர் 1995ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் சுவீடனில் தஞ்சம் மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டார். இவர் கொழும்பு சென்றதும் விமான நிலையத்தில் வைத்து பாதுகாப்புப் படையினால் அடித்துத் துன்புறுத்தப்பட்டார். இதற்கு இரு மாதங்களுக்கு பின்பு ஜேர்மனியிலிருந்து தஞ்சம் மறுக்கப்பட்டு கொழும்புக்கு திருப்பி அனுப்பப்பட்ட இருவர் விமானநிலையத்தில் கைதுசெய்யப்பட்டனர். இச்சம்பவங்களுடன் தலைநகரில் நடைபெறும் மனித உரிமை மீறற் செயல்களையும் சேர்த்துப் பார்க்கும் போது இலங்கை அகதிச் சமூக தாபனங்கள் ஏன் தஞ்சம்கோரி மறுக்கப்பட்டோரை திருப்பி அனுப்பும் கொள்கை பற்றி அங்கலாய்ப்புக்கொண்டு கண்டனமும் தெரிவிக்கின்றார்கள். என்பது நன்றாக விளங்குகின்றது.

கொழும்பில் இருக்கும் போது அகதிச் சபை குழுப் பிரதிநிதிகளுக்கு மேற்கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக விசாரிக்கக் கூடியதோர் சந்தர்ப்பம் கிட்டியது. இவர்களுக்கு சென்ற ஆண்டு யூலை மாதம் சுவிற்கலாந்திலிருந்தபோது தஞ்சம் மறுக்கப்பட்டு இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட ஒருவரின் சத்தியக்கடதாசி காட்டப்பட்டது. இவர் திரும்பியதும் இவரைச் ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் தாபனம் காரியாலயப் பிரதி நிதி ஒருவரோ அல்லது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியோ விமான நிலையத்தில் சந்தித்திருக்க வேண்டும் ஆனால் இவர்கள் அங்கு பிரசன்னமாயிருக்கவில்லை. இதனால் இவர் கொழும்பிலுள்ள ஒரு விடுதிக்குச் செல்ல வேண்டியிருந்து. இங்கிருக்கும்போது இவரைப் பற்றி

அனுப்பப்பட்ட அனாமதேய கடிதமொன்று காவற்துறையினர் கையில் கிட்டியதும் இவர் கைவ-லங்கிடப்பட்டு விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டார்.

விசாரணைகள் நடத்துவோரால் விசாரணைய-ின் போது அதிகாலை 3 மணி மட்டும் நான் மேசைக்கால் ஒன்றுடன் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தேன். இதன் பின்பு நான் வேறு ஒரு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டேன். இந்த இடத்திற்கருகில் மூன்றரையடி உயரமுள்ள தண்ணீர் தொட்டியொன்று காணப்பட்டது. இத்தொட்டியின் ஒரு பக்கத்தில் மூங்கிற் கம்புகள் அடுக்காக நடப்பட்டிருந்தன. என்னுடைய கால்கள் இக்கம்புகளில் இறுக்கமாகக்கட்டப்பட்டு நான் பல வந்தமாக தொட்டியிலுள்ள தண்ணீரில் அமுக்கப்பட்டதும் மூச்சடைக்கத் தொடங்கியது. இதேவேளையில் வேறு ஒருவர் எனது பின் பக்கத்தில் காலால் உதைத்தார். காலை 8 மணி மட்டும் நான் இச்சித்திரவதைக்குள்ளானேன். என இவர் தன் சத்தியக்கடதாசியில் கூறியுள்ளார்.

சித்திரவதைக்குள்ளான இவர் ஆறு நாட்களுக்குப் பின்பு விடுதலை செய்யப்பட்ட போது தனக்குநடந்ததை யாரிடமும் சொல்லக்கூடாதென கேட்கப்பட்டார். இவரது தனது சத்தியக்கடதாசியில் கூறியதை இவரைப் பரிசோதித்த வைத்தியரின் சாட்சியம் உறுதிப்படுத்துகின்றது. மேலும் இவர் தொடர்ந்தும் நெஞ்சு நோவினால் அவஸ்தைப்படுகின்றார். இந்நோ இவர் சித்திரவதை செய்யப்பட்டதாலேயே தான் ஏற்பட்டது. இவருக்கேற்பட்ட துன்புறுத்தலுக்குப் பின்பு சுவிஸ் அரசு பிரகடனம் செய்யாமலேயே அகதிகளை திருப்பியனுப்புவதை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

இலங்கை அரசு மனித உரிமைகளை பாதுகாக்க முயற்சிகள் எடுத்த போதிலும் அதன் பாதுகாப்பு படையினரின் தமிழர்கள் பற்றி சந்தேகம் அவர்கள் கலாச்சாரத்தினுடன் ஊறிப் போயிருக்கிறது. இச்சந்தேகத்தினால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் இளம் ஆண்களே எனினும் எல்லாத் தமிழரும் ஆண் பெண் இளைஞர் வயதானவர் என்ற வித்தியாசமின்றி சந்தேகிக்கப்படுகின்றனர் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளினால் தமிழர் சந்தேசகக்கப்படுவது விளங்கிக்கொள்ளக்கூடிய ஒரு விடயமாகும். ஆனால் தொடர்ந்தும் பலர் விசாரணையின்றி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதும் அவசரகால சட்ட விதிகளுக்கு முரணாக ஒப்புதல் வாக்கு மூலங்கள் இவர்களுக்குத் தெரியாத மொழியில் பதியப்பட்டு கையொப்பம் பெறப்படுவதும் பாதுகாப்புப்படையினர் சம்பந்தப்பட்டுள்ளாரென நம்பப்படும் சட்ட விரோதமான கொலைகளும் பெரும் கவலையளிக்கின்றன. மனித உரிமை மீறற் செயல்கள் குறைக்கப்பட்டதனால் சிங்கள மக்கள் தான் அதிக நன்மையடைந்துள்ளார்கள்.

தமிழருக்கு எதிரான இச்செயல்கள் தொடர்ந்தும் கொழும்பில் நடைபெறுகின்றன. அரசு இவைகள் நடப்பதை தடுப்பதற்கு விரும்புவ தாகவோ அல்லது தடுத்து நிறுத்துவதாகவோ தெரியவில்லை. இக்காரணத்திற்காக கொழும்பு இலங்கைத்தமிழர்களுக்குப் பாதுகாப்பான இடமென்று நினைப்பது சரியாகாது.

## செயற்படச் செய்வோம்

அகதிகள் பணியகம் வெளியிட்ட 'மறுக்கப்பட்ட பாதுகாப்பு' என்னும் தலைப்பிலான தமிழ் அகதிகள் தொடர்பான அறிக்கையை -பிரிட்டிஷ் உள்நாட்டு அலுவலக குடிவரவுப்பகுதி கவனத்தில் கொள்ள வேண்டும், பரிந்துரைளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் அகதிகளுடன் தொடர்பான அனைவரையும் ஒன்றிணைத்து கூட்டான பிரச்சாரம் ஒன்றை அகதி சஞ்சிகை முன் எடுத்து நடத்தியது. கடந்த பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி பிரிட்டிஸ் பாராளுமன்ற கூட்ட மண்டபத்தில் அகதிகள் பணியக நிறைவேற்று இயக்குனர் திரு நிக்காட்விக் அவர்கள் தனது அறிக்கையை வெளியிட்டு வைத்தார். பாராளுமன்ற உறுப்பினர்கள் சர்வதேச தேசிய உதவி வழங்கும் தாபனங்களின் பிரதிநிதிகள் தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட அழைக்கப்பட்டோரின் முன்னிலையில் இவ்வறிக்கை வெளியிடப்பட்டது. ' தமிழ் சமூகத்தின் பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கு இணங்க அகதிகள் பணியகத்தின் சார்பில் இலங்கைக்குச் சென்று வந்தேன். கடந்த சில வருடங்களாக இலங்கைத் தமிழ் அகதிகளின் தஞ்சக்கோரிக்கை தொடர்பாக உள்நாட்டு அலுவலக அதிகாரிகள் கையாளும் தன்மை எமக்கு பெரும் கவலையை தந்துள்ளது. 1993ஆம் ஆண்டு வரை காலத்தில் 98 வீதமான தஞ்சம்கோருவோர் குடிவரவு விதிகளுக்கு புறம்பான வகையில் மனிதாபிமான அடிப்படையில் இருப்பிட அனுமதி வழங்கப்பட்டன.

ஆனால் இப்போது 98 வீதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன. இவ் நிராகரிப்புக்கான காரணங்களில் தெ-ரிவிக்கப்படும் கருத்துக்கள் தொடர்பாக உண்மை நிலைமையை நேரில் கண்டறிவதே எமது விஜயத்தின் நோக்கமாகும் . நாம் நேரில் பார்த்தவற்றை -கேட்டு அறிந்தவற்றை தகுந்த ஆதாரங்களுடன் சேர்த்து இவ்வறிக்கையை தயாரித்து இங்கு வெளியிட்டுள்ளேன்.இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகளை அதிகாரிகள் ஏற்றுக்கொள்ள செய்யவேண்டியதன் பொறுப்பு இங்கு வாழும் தமிழ் சமூகத்தைச் சேர்ந்ததாகும்.' என்று குறிப்பிட்டார் அகதிகள் பணியக இயக்குனர் அவர்கள்.

# இது ஒரு ஆயுதம்

இவ்வறிக்கை வெளியீட்டு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய தென் இலண்டன் நலன்புரி அமைப்பின் தலைவர் திரு எஸ் ஸ்ரனிசிலஸ் அவர்கள் 'இவ்வறிக்கை உமது தமிழ்ச்சமூகத்திற்கு கிடைத்த ஓர் ஆயுதம், எமது கரிசனையை கவலையை வேண்டுகோளை கவனத்திற்கொண்டு ஆபத்து நிறைந்த ஒரு விஜயத்தை இலங்கையில் செய்து வந்துள்ளார். தமிழ்ச்சமூகத்தின் சார்பில் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம். இவ்வறிக்கையை பயன்படுத்த வேண்டியதன் பொறுப்பு தமிழ்ச்சமூகத்திற்கு உரியது. இது எமக்குக் கிடைத்த ஒரு ஆயுதம். எவ்வாறு பிரயோகிக்கவேண்டும் என்பதை நாம் தீர்மானிப்போம் எனக் குறிப்பிட்டார் .

ஆம்! இது ஓர் ஆயுதம் தான். இதை நாம் எப்படிப் பாவிக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கும் பொறுப்பை தமிழ்ச்சமூகத்தின் சார்பில் அகதி தனது பங்கை அளிக்க முன்வந்தது. இலங்கை பிரச்சனை தொடர்பாகவும், அங்குள்ள இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பாகவும் சர்வதேச மட்டத்தில் பல்வேறு அறிக்கைகள் வெளிவந்தவண்ணம் இருக்கின்றன. ஆனால், பிரித்தானியாவில் வாழும் நிராகரிக்கப்பட்ட தமிழ் அகதிகளைப் பற்றி கரிசனை கொண்டு கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை இது ஒன்று என்பதினால் இவ்வறிக்கை முக்கியத்துவம் பெறுகின்றது. நிராகா-ிக்கப்படும் தமிழ் அகதிகளின் விண்ணபங்கள் தொடர்பாக உள்நாட்டு குடிவரவுக் காரியாலயம் தெரிவிக்கும் காரணிகளை மறுத்து உண்மைக்குப் புறம்பானவை என ஆதாரபூர்வமாக தகவல்களைக் கொண்டுள்ள இவ்வறிக்கை முக்கியத்துவம் பெறுகின்றது. திருப்பி அனுப்பப்படும் தமிழ் அகதிகளுக்கு எதிராக கொழும்பில் வன்முறைகள் பாவிக்கப்படுகின்றன எனவும் யுத்தம் நடக்கும் வடகிழக்கு மாகாணங்களில் இருந்து ஓடும் தமிழர்களுக்கு இலங்கையில் வேறு ஒரு பாதுகாப்பான இடம் இல்லை என்று கூறும் இவ்வறிக்கை முக்கிய இடத்தை வகிக்கின்றது. தமிழ் அகதிகளின் வருகையை தடைசெய்வதானால் பிரிட்டிஷ் அரசு இலங்கை தமிழர் பிரச்சனையில் தலையிட வேண்டும் என்றும் இதனால் மாத்திரமே தமிழ் அகதிகளின் வருகையை குறைக்க முடியும் என சிபார்சு செய்த அறிக்கையும் இதுவே. எனவே ஆயுதம் எனும் இவ்வறிக்கையை உபயோகப்படுத்துவது தமிழ்ச்சமூ கத்திற்கு உரியது.

# செயல்ப்படச் செய்வோம் பிரச்சாரம்

இவ்வறிக்கையை பல்வேறு கோணங்களில் எடுத்துச் செல்லக்கூடிய வாய்ப்புக்கள் தமிழ்ச்சமூகத்தினிடம் இருந்தன. தமிழ் அகதிகளின் பிரச்சனைகளில் தங்களை ஈடுபடுத்தி எவ்வித பிரதியுபகாரங்களையும் எதிர்பாராது சேவை புரியும் பல்வேறு தாபனங்களின் பிரதிநிதிகள் தனிப்பட்டவர்கள் பத்திரிகைகள் வானொலி போன்றவற்றின் ஒத்துழைப்புடன் அகதிப்பத்திரிகை ஒரு பிரச்சார இயக்கத்தை நடாத்துவதென தீர்மானித்து காலதாமதமின்றி அதை முன்னெடுத்துச் சென்றது. தமிழ் அகதிகள் செறிந்து வாழ்கின்ற லண்டனின் பல்வேறு பகுதிகளிலும் அங்கு அமைந்துள்ள தமிழ் அமைப்புகளின் உதவியுடன் பிரச்சாரக் கூட்டங்களை நடாத்துவதென தீர்மானித்தது. இதன் நோக்கம் முதலில் தமிழ் அகதிகளுக்கு இவ்வறிக்கை பற்றி தெரியப்படுத்துதல் அதன் முக்கியத்துவத்தை அறியச்செய்தல் அதைத் தொடர்ந்து இவ்வறிக்கை சென்று அடையவேண்டிய இடங்களை அவர்கள் மூலமே அடையச்செய்ய வேண்டும் என்பதாகும். இதன் அடிப்படையில் வட இலண்டன் எட்மண்டனில் அமைந்துள்ள தமிழ் அகதி நிலையம் முதலாவது பிரச்சாரக் கூட்டத்தை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்தது.

எதிர் பார்க்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிக அளவிலானோர் கூட்டத்திற் கலந்துகொண்டனர். கலந்துகொண்டவர்கள் அகதிப்பத்திரிகையின் பிரச்சார இயக்கத்தின் நோக்கை புரிந்துகொண்டு தங்கள் நேரடிபங்களிப்பை அளித்தது இப்பிரச்சார இயக்கத்தில் ஈடுபட்டோருக்கு பெரும் உற்சாகத்தை அளித்தது. இக்கட்டத்தில் மேலும் பல கூட்டங்கள் தொடர்ந்து நடத்துவதற்கான வாய்ப்புக்கள் சாதகமாக இருந்தன. இதன் இரண்டாவது மூன்றாவது கூட்டங்களை மேற்கு லண்டன் பகுதியில் நடாத்துவதற்கான ஒழுங்குகளை லண்டன் தமிழ் அக்கடமி ஏற்பாடுகளை செய்தது. நான்காவது கூட்டம் ஈஸ்காம் பகுதியில் நடாத்துவதற்கு நியூகாம் ஐக்கிய தமிழர் கழகமும் , ரெட்பிறிஜ் பகுதியில் மற்றுமொரு கூட்டத்தை ரெட்பிறிஜ் தமிழர் நிலையமும் ஒழுங்கு செய்தது, அகதி சஞ்சிகையின் ஆறாவது பிரச்சாரக் கூட்டம் தென் இலண்டன் தமிழர் நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் விம்பில்டனிலும் லூசியம் வாழ்தமிழர்களுக்காக அப்பகுதி இளைஞர் அமைப்பு ஏழாவது கூட்டத்தையும் ஒழுங்கு செய்து நடாத்தின. இக்கூட்டங்களின் போது சுமார் 500க்கும் மேற்பட்ட கரிசனையுள்ள தமிழர்கள் கலந்தகொண்டு தங்கள் நேரடியான பங்களிப்பைச் செய்தார்கள். அவ்வப்பகுதி பாராளுமன்ற தேர்தல் போட்டியாளர்களை நேரடியாக சந்தித்து அறிக்கையின் பிரதிகளை கையளித்து தமிழ் அகதிகளின் பிரச்சனை பற்றி தெரியப்படுத்தப்பட்டது, பல சந்தர்ப்பங்களில் இலங்கை தமிழர் பிரச்சனையிலும் தமிழ் அகதிகள் பிரச்சனையிலும் புதிய புரிந்துணர்வுகளை வெளிப்படுத்தியமை காணக்கூடியதாக இருந்தது. 'செயல்ப்படச் செய்வோம்' என்ற சுலோகத்தின் கீழ் முக்கிய நோக்குகளாக பின்வரும் விடயங்கள் கையாளப்பட்டன.

1.சகல தமிழ் மக்களும் முக்கியமாக நிராகரிக்கப்பட்ட அல்லது முடிவுகளை எதிர்பார்த்திருக்கின்ற தஞ்சம்கோரியோர் இவ்வறிக்கை பற்றி அறியச் செய்தல்.

2. இவர்களது தஞ்சம்கோரும் விண்ணப்பங்களுடன் இவ்வறிக்கையின் பிரதி ஒன்றை குடிவரவுக் காரியாலய கோவைகளுக்கு அனுப்பச் செய்தல்.

3. சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இவ்வறிக்கையின் பிரதி ஒன்றை நேரடியாகக் கையளித்தல்.

4. நடந்துமுடிந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கும் இவ்வறிக்கை ஒன்றை நேரடியாகக் கையளித்தல்.

பல்வேறு இடங்களிலும் இடம்பெற்ற பிரச்சாரக் கூட்டங்கள் பற்றிய அறிவிப்புக்களை சண்றைஸ் வானொலி வரையறையற்ற அறிவிப்புக்களைச் செய்து தெரியப்படுத்தியமை தமிழ் அகதிகளின் பிரச்சனையில் அதன் கரிசனையை வெளிக்காட்டியதை இங்கு குறிப்பிடவேண்டியது முக்கியமானதாகும்.

இப்பிரச்சாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றிய சட்டவல்லுனர்கள் தமிழ் அகதிகளின் விண்ணப்பங்களில் ஓர் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் அவர்களின் எதிர்காலத்தில் புதிய நம்பிக்கை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்கள். பிரான்ஸ் ஜேர்மனி , டென்மார்க் கனடா போன்ற நாடுகளிலிருந்து இவ்வறிக்கை பற்றிய செய்திகளையும் தகவல்களையும் அகதி சஞ்சிகையிடம் இருந்து கேட்டு அறிந்தது மாத்திரமின்றி இவ்வறிக்கையின் பிரதிகளை பெற்றுக்கொண்டதும் வெளிநாடுகளில் இவ்வறிக்கை ஏற்படுத்திய முக்கியத்துவத்தை அறியக்கூடியதாக இருந்தது.

தேர்தல் முடிந்ததும், தொழில்க்கட்சி ஆட்சியமைத்ததைத் தொடர்ந்து, தமிழ் அகதிகளின் விடயத்தில் எவ்வாறான நோக்கை கடைப்பிடிப்பார்கள் என்பதை அகதி சஞ்சிகை பொறுத்திருந்து பார்க்கும். தொடர்ச்சியான பிரச்சார இயக்க நடவடிக்கைகளை கொண்டு நடாத்தவேண்டுமென அகதிக்கு பெருமளவிலான வேண்டுகோள்கள் வந்தவண்ணம் இருக்கின்றன. அகதி சற்று ஓய்வு எடுத்துள்ளது என்றே சொல்லக்கூடியதாக உள்ளது. இச்சந்தர்ப்பத்தில் அகதியின் செயற்படச்செய்வோம் பிரச்சார இயக்கத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களித்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றது.

# TUTORS WANTED

Enfield education & Training Centre is providing support classes for school students and training for adults.

You need a qualification and / or experience in teaching Maths, Science and English for school students or Teaching ESOL Computer NVQ levels with experience and knowledge of the delivery and assessment of competence based learning and qualification in D32/ D33

ALL VACANCIES ARE PARTTIME AND HOURLY PAID
SALARY £16PER HOUR
IF YOU ARE INTERESTED SEND YOUR CV TO
CENTRE MANAGER
Enfield Education & Training Centre
Edmonton Green
69 North Square
Edmonton N9.

# THANA &CO
## SOLICITORS

**ADMINISTRATORS OF OATHS**

***CONTACT: T.THANA***

***WE SPECIALISE IN***

**IMMIGRATION * CRIME **
*CONVEYANCING * MATRIMONIAL*
** STATE BENEFITS * TRAFIC OFFENCES*
** ADVICE & ASSISTANCE AT POLICE STATION*

Legal Aid

Legal Aid

140 PARK LANE, TOTTENHAM, LONDON N17 0JP
***TEL: 0181 8081218 FAX: 0181 8081240***

LEGAL AID WORK UNDERTAKEN

# IVAN KRAMA & CO.
# Solicitors

**ADMINISTRATORS OF OATHS**

**Mr. Parakhma Ranasinghe**

**Mr.Man Perera**

***We Specialise in***

**** Immigration & Nationality***

****Crime***

****General Litigation***

**** Conveyancing Housing Welfare Benefits***

Legal Aid

**Leigal Aid work undertaken**
**Contact for all your legal services**

**348A Kilburn High Road**
**London NW6 2RT**
**Tel: 0171 - 624 8814**
**FaX: 0171 - 624 8813**

# தமிழர்களின் தில்லுமுல்லுகள்

கடந்த அகதிச் சஞ்சிகையில் வெளியான தலைமறைவாகும் தமிழர்களின் தில்லுமுல்லுகள் உண்மைச் சம்பவத்தின் தொகுப்பை வாசித்து பல வாசகர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்திருக்கின்றார்கள். அவர்களுக்கு அகதி நன்றி கூறுகின்றது. அதேவேளை அவர்களுடைய கருத்துக்களை கூடியவரை மதிப்பளிக்க அகதி முயல்கின்றது. அகதியில் வெளியிடப்பட்ட இச்சம்பவம் எமது சமூகத்தில் புரையோடிக்கிடக்கின்ற சமுத்திரத்தின் ஒரு துளியே. தில்லுமுல்லுகள் பல ஆயிரம் அவற்றை வெளிக்கொணர அகதி போன்ற பத்திரிகை தொடர்ந்தும் முன்வரவேண்டும் என்பது என் அவா என ஒரு அன்பர் கருத்து தெரிவித்து மடல் ஒன்றை அகதிச் சஞ்சிகைக்கு அனுப்பியிருந்தார். பாதிக்கப்பட்ட பல நூறு அப்பாவித் தமிழ் அகதிகள் தங்களுக்கு நேர்ந்த கதியை யாரிடம் சொல்வது என்றறியாது தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாகி வருவதை நாம் நாளாந்த வாழ்க்கையில் காண்கின்றோம். பாதிப்புக்களை உண்டாக்குகின்றவர்கள் மிகக்கவனமாக திட்டமிட்டு தங்களை பாதுகாக்கக் கூடியளவு சட்டநுணுக்கங்களை தெரிநிது வைத்து செய்கிறார்கள். இவர்கள் எந்தவகையிலும் சவால் விடமுடியாத ஸ்தானத்தில் தங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் செய்கின்ற அடாவடித்தனங்களையும் தில்லுமுல்லுக்களையும் அகதி துணிவுடன் வெளிக்கொணர வேண்டும் எனவும் தனது வாழ்க்கையில் நடந்த சம்பவத்தை கட்டுரையாக எழுதி அகதியில் பிரசுரிக்கும் படி மற்றுமொரு வாசகர் கேட்டிருக்கினறார். இவருடைய நிலைமை அகதிக்கு புரிகின்றது. இவர் கருத்துக்களை அகதி ஏற்றுக்கொண்டு நிட்சம் தனது கடமையைச் செய்யுமானால் அவர் அனுப்பிய அந்தக் கட்டுரையில் பலபேருடைய சொந்தப் பெயர்களும் நேரடியாக சம்பந்தப்பட்டவர்களை பாதிக்கக் கூடியதாகவும் கருத்துக்கள் அமைந்துள்ளன. இந்நாட்டில் பத்திரிகைகளுக்கு இருக்கின்ற சுதந்திரத்தையும் அதேவேளை தனிப்பட்டவருகளுக்குரிய சொந்த வாழ்க்கையில் பங்கம் ஏற்படாதவாறு ஆக்கங்கள் வெளிவரவேண்டும் என்பதில் அகதி மிகவும் கடுமையான போக்கை கடைப்பிடிக்கும் இதனால் இவருடைய ஆக்கத்தை வெளியிட முடியாமைக்கு அகதி வருந்துகின்றது. இதே வேளை அகதி ஒரு உறுதி மொழியை இங்கு தரவிரும்புகின்றது. மக்களுக்கு சேவையாற்றுவோர் என தங்களை அறிமுகப்படுத்தி மக்களிடத்தில் மதிப்பை பெற முயற்சிக்கும் ஒவ்வொருவரும் தன்னுடைய சொந்த வாழ்க்கையிலும் தூமையான நடைமுறைகளைக் கையாண்டு நல்லதொரு சமுதாயத்திற்கு முன்னோடிகளாக அமையவேண்டும். ஊருக்கு உபதேசம் உனக்கு இல்லை என்ற போக்கில் உலாவும் புல்லுருவிகளின் முக மூடிகளை கிழித்து அவர்களின் தில்லுமுல்லுகளை அகதி வெளிக்கொணர்வதாக அதன் அடுத்த இதழில் இருந்து தில்லுமுல்லுக்கள் என்ற தலைப்பிலான பக்கங்களை பிரசுரிக்கும் வாசகர்கள் உங்கள் அனுபவங்களை மற்றவர்களும் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்ற அவா இருப்பின் நாம் முன்பு குறிப்பிட்ட பேச்சுச் சுதந்திரத்திற்கு கண்டுப்பட்டும் தனிப்பட்டவர் சொந்த வாழ்க்கையில் பாதிப்பு ஏற்படுத்தாமலும் ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். தகுதியானவை பிரசுரிக்கப்படும்.

– ஆசிரியர்–

# VETTI & CO
## SOLICITORS

***We have moved to a better premises opposite to British Refugee Council(RTEC) in Ferndale road Brixton London SW9***

**OUR NEW ADDRESS**

VETTI & CO

**SOLICITORS**

*BON MARCHE BUSINESS CENTRE*
*210*
*442- 444 BRIXTON ROAD*
*BRIXTON*
*LONDON SW9 8EJ*
*(Entrance : Ferndale Road)*

***TEL : 0171 274 0100***
***FAX : 0171 738 4655***

# PARAM & CO
## SOLICITORS

* Civil Litigation * Commercial Litigation * Immigration * Personal injuries
* Conveyancing * entertainment Law * Residential & Commercial
* Police Station advice & assistance * Accident Claims
* matrimonial matters * Welfare benefits & Social security matters

**S. PARAMALINGAM. BA, LLM**

ASSISTANT SOLICITOR

**Miss R. Kulasegaram**

TEL : 0181 200 3500 FAX: 0181 200 1360

SEGARAM HOUSE, 221 EDGEWARE ROAD
COLLINDALE, LONDON NW9 0SR

WARAN & Company

SOLICITORS

We are pleased to announce that we have now moved to:

554 HIGH ROAD, TOTTENHAM, LONDON
N17 9SY
TEL: 0181 808 2397
FACSIMILE 0181 801 8818
DX 58512 TOTTENHAM 1

**WE UNDERTAKE**

* Civil Litigation * Commercial Litigation * Immigration * Personal Injuries * Conveyancing * Entertainment Law * Residential & Commercial * Police Station Advice & Assistance * Accident Claims * Matrimonial matters * welfare benefits & Social security matters

For advice & Assistance on all immigration matters

Legal Aid

**24 HOURS EMERGENCY NoS.**
**0956 543 071, 0181 924 2527**

தமிழ் அகதிகளின் நலன்களில் அக்கறையுடன் பணிபுரியும் அகதி சஞ்சிகையின் தொடர்ச்சியான வெளியீட்டுக்கு எமது ஆதரவுகள்.

# RAJA & CO

Legal Aid

SOLICITORS
ADMINISTRATORS OF OATHS

Legal Aid

**295 Balham High Road, Tooting Bec,**
**London SW 17 7 BA**

**TEL: 0181 682 2585**
**FAX: 0181 682 2575**

# ENFIELD EDUCATION & TRAINING CENTRE
## (A DIVISION OF TRC)

Are You Aged 16 - 25, living in the Borough of Enfield?
**HAVE YOU BEEN UNEMPLOYED FOR 6 MONTHS OR MORE?**

IF SO

## JOIN OUR FREE TRAINING TO

* LEARN NEW SKILLS
* IMPROVE YOUR EMPLOYMENT PROSPECTS.
* ENHANCE YOUR EDUCATIONAL POTENTIAL.
* GET A CERTIFICATE IN INFORMATION TECHONOLOGY ( CITY & GUILD)

## COPURSES PROVIDED IN

* IT NVQ LEVEL 1, 2 AND 3
* WORD PROCESSING (WORD FOR WINDOWS)
* DATABASE ( ACCESS)
* SPREADSHEET (EXCEL)

## STARTING IN JUNE 1997

TRAVEL EXPENSES PAID
PAYMENT TO LONE PARENTS FOR A CHILD MINDER

FOR MORE INFORMATION
PLEASE CONTACT
**0181 373 6246 OR 0181 345 6301**

FUNDED BY

The Print Tel: 0181 - 646 2885